அறைவு 03 இயம் 30 February 07-13, 2015
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
# மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
பக்கங்கள் : 20 விலை : 30.00

aat
@
0770203201
VBC

HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# குடியேறியவர்கள் நிர்க்கதி

சம்பூர் தடைப் பிரதேசத்தில் குடியேறிய மக்கள் நிர்க்கதியாக விடப் பட்டுள்ளனர்.

கடந்த சனவரி மாதம் 5ம் திகதி தமிழ் கட்சிகளின் உள்ளூர்ப் பிரமுகர்கள் மற்றும் அப்போதைய சனாதிபதியின் மகன் நாமல் ராசபக்ச ஆகியோரின் நடவடிக்கைகளால் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் குடியேற்றப்படும் வாய்ப்புக்கள் உருவாகுவதாக எழுந்த 17



## அபிவிருத்தியால் அழியும் திரியாய் வயல்கள்

வீதி மற்றும் குளங்களின் அபிவிருத்தியை அடுத்து நீர் வடிந்தோட முடியாத நிலை தோன்றியுள்ளதால் திரியாய் பிரதேசத்தின் வயல்கள் பெரும் அழிவிற்குட்பட்டு வருகின்றன.

இதனையடுத்து திரியாயில் வயல் விளைச்சலில் ஈடுபட்டுவரும் பெரும்பாலான தமிழ் விவசாயிகள் தமது விவசாயத்தைக் கைவிட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

யான்ஓயாவின் அணைக்கட்டு விசாலமாக்கபட்டு உயர்த்தப்பட்டதை அடுத்து மேலதிக நீர் உரிய முறையில் வழிந்தோடும் வகையில் இவ்வபிவிருத்தி நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை என விவசாயிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மேலதிக நீர் வழிந்தோடும் வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளதை அடுத்து திரயாய் தமிழ் கிராமப் பகுதியையும் அக்கிராமத்தை அண்டிய வயல் நிலங்களினை மேவியும் நீர் பாயத் தொடங்கியுள்ளது.

இதனால் வயல் நிலங்கள் கடும் அழிவைச் சந்தித்துள்ளதாகத் தெரிவித்த விவசாயிகள் வரலாற்றில எப்போதுமே இல்லாத அளவிற்கு இம்முறை வெள்ளம் திரியாய் வயல்களை நாசப்படுத்தியதாகவும் தெரிவித்தனர். 17

## கல்முனையில் புறக்கணிக்கப்படும் தமிழர்கள்

### முஸ்லிம் காங்கிரஸ் மீது கடும் குற்றச்சாட்டு

கல்முனை மாநகர சபை முதல்வரின் தலைமையில் நேற்று நகர அபிவிருத்திக் குழுக்கூட்டம் நடைபெற்றபோது தமிழர்கள் முற்று முழுதாக புறக்கணிக்கப் பட்டதாக மாநகரசபையின் உறுப்பினர் அழகக்கோன் விஜயரெட்னம் தெரிவித்தார்.

முஸ்லிம் கங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கல்முனை மாநகர சபைக்கு வருகை தந்தபோதே இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டம்ட நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவத்தினை கண்டிக்கும் முகமாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில்,

கல்முனை பிரதேசத்தில் தமிழ் மக்களும் செறிவாக வாழ்கின்றனர் என்பதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் அடிக்கடி மறந்து செயற்படுவது 17

# முதலமைச்சர் ஹாபிஸ் நகஷீர்

## ஆதரவு தராத ஜமீலின் அங்கத்துவம் பறிபோனது

### முதலமைச்சராக ஹாபிஸ்



கிழக்கு மாகாண முதலமைச்சராக முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் ஹாபிஸ் நஸீர் அஹமத் நேற்று மாலை ஆறு மணியளவில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் 19 உறுப்பினர் களின் சத்தியக்கடதாசியின் அடிப்படையிலேயே அவர் முதலமைச்சர் ஆகியுள்ளார்.

அப்போது அவர் தெரிவித்துள்ளதன் படி கிழக்கு மாகாணத்தில் முன்னரிருந்தவாறே ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியுடன் இணைந்து தாம் ஆட்சி செய்ய விருப்பதாகவும் முஸ்லிம் காங்கிரஸிற்குக் கிடைக்க வேண்டிய இரண்டரையாண்டு முதலமைச்சர் பதவியினைத் தாம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



### ஆதாவு தராத ஜமீல்

ஹாபிஸ் நஷீரை முதலமைச்சராக நியமிப்பதற்கு 17

## மாற்றுப்பொறிமுறை இன்றேல் மக்கள் தெருவில்!!!



மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளியாது தலைமைகள் செயற்படமுற்படுமாயின் மக்கள் வீதியிலிறங்க வேண்டி நேரிடும். எதிர்வரும் பொதுத் தேர்தல் பற்றியும் இத்தலைமைகள் சிந்திக்கவேண்டும் எனவும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினரும் கிழக்கு மாகாணசபையின் இரா.துரைரட்யம் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மத்திய அரசிற்குத் தமிழத் தேசியக் கூட்டமைப்பு வழங்கியுள்ள ஆதரவைப் பற்றி மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். 17

## விசாரணைகள் ஆரம்பம்

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக மாகாணப் பிரதம செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 17

## வலய மட்டத்தில் இரகசிய இடமாற்றங்கள்!!!

### பணிப்பாளர் எச்சரிக்கை

கிழக்கு மாகாணத்தில் கல்வி வலய மட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஆசிரிய இடமாற்றங்களில் காணப்படும் முறைகேடுகளை அடுத்து அனைத்து வலயங்களுக்கும் இடமாற்ற விதிகளை கடுமையாகப் பின்பற்றுமாறு கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

வலய மட்டங்களில் இடம்பெற்ற இரகசிய இடமாற்றங்களைக் கருத்திற்கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கம் இவ்விடயம் தொடர்பாக கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்தே இவ்வறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தலின் பின்னர் 01.02.2015ம் திகதியில் இருந்து ஆசிரிய 17



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## தலைவர்களும் தன்னிச்சையான முடிவுகளும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், அவரது சகபாடியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரனும் இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களிற் கலந்துகொண்டதை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அதன் முக்கிய கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சியுட்பட அனைத்துக் கட்சிகளுக்கிடையேயும் கடும் சொல்லாடல்கள் பரிமாறப்படத் தொடங்கியுள்ளன.

அவ்வாறு கலந்துகொண்டது சரியா? தவறா என்பதைப் பற்றிப் பேசுவதற்கு முன்னர் 1972ம் ஆண்டின் பின்னர் ஏன் தமிழ்க் கட்சிகள் சுதந்திர தினத்தைப் புறக்கணிக்கும் முடிவை எட்டின என்பதைப் பற்றி ஆராய வேண்டும்.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் தமிழ் மக்கள் சொல்லெணாத்துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருவதையடுத்து அதனை வெளிக்காட்ட வேண்டும் என்பதற்காக மட்டும் தமிழ்க் கட்சிகள் சுதந்திர தினத்தைப் புறக்கணிக்கவில்லை.

சுதந்திர விழாவில் பங்குபற்றினால் இலங்கையின் அரசியல் சாசனத்தை அவ்வாறே ஏற்றுக்கொண்டு விட்டோம் என்பதை வெளிப்படுத்தி விடுவோம் என்பதாலேயே தமிழர்கள் சுதந்திர தின விழாவைப் புறக்கணித்து வந்தனர்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சுதந்திர தின விழாவில் பங்குகொண்டமைக்கான சரியான காரணம் எதுவென்பதை ஆழஆராய்ந்து அறிக்கையிடுதலே சரியாக இருக்கலாம்.

இவ்வாறு ஆழஆராய்வதற்கு தன்நிலை விளக்கம் என்பது மிக முக்கியமானதாக இருக்கின்றது.

தலைவர்கள் எப்போதுமே தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும் வல்லமையுடையவராக இருக்க வேண்டும் என்பது காலத்தின் தேவை! ஆனால் சனநாயகத் தலைவர் ஒருவருக்கு அவ்வகையான தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும் காலம் அல்லது நேரம் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் தலைவர்கள் எடுத்த தடாலடியான தீர்மானங்களை ஒரு சனநாயகத் தலைவரின் தீர்மானங்களுடன் ஒப்பிடுவதென்பது மிகத் தவறானது.

சனநாயகத் தலைமைத்துவத்தின் மிக முக்கியமான பண்புகளில் ஒன்றாக பெரும்பாலான அங்கத்தவர்களின் முடிவைத் தனது முடிவாக ஏற்றுக்கொள்தல் என்பது உள்ளது.

தன்னிச்சையான முடிவொன்றை எடுக்க வேண்டிய கால தேச வர்த்தமானங்கள் எவையும் சுதந்திர தினத்தைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியத் தலைவர்களுக்கு இல்லை. ஏனெனில் ஒவ்வொரு ஆண்டும் வரும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதா? இல்லையா? என்பது பற்றி ஆராய்வதற்குப் போதுமான காலங்கள் இருந்தன. இந்த அரசு பதவியேற்றவுடன் எவ்வகையான பிரசன்னங்களை, தொடர்பை அரசுடன் மேற்கொள்ள வேண்டும் என்பது முன்னரே ஆராயப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு ஆராயப்பட்டிருந்தால் அதன்பாற் செயற்பட வேண்டிய சனநாயகக் கடமை தமிழ்த் தலைமைகளுக்கு உள்ளன. இந்நிலையில் தமிழ்க் கட்சிகளின் இரு தலைவர்கள் சுதந்திர தினத்தில் கலந்துகொள்வது தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்திருக்கும் அதேவேளை சிரேட்ட தலைவர் ஒருவர் கலந்து கொண்டவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும் சனநாயகத் தலைவர்கள் தன்நிலை விளக்கம் வழங்கத் தயாராக இருக்க வேண்டும் என்பது வரலாறு... முடிவுகள் தொடர்பாக விமர்சிப்பதும் சனநாயகப் பண்பு தானே! தன்நிலை விளக்கமே அனைத்திற்கும் தீர்வாக அமையும். புரிந்துகொள்வார்களா?

-மாயன்-

## நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை மோசடி தொடர்பாக ஆராய குழு

நகர அபிவிருத்தி மற்றும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையில் ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளனவா என்பதை கண்டறிவதற்காக விசாரணைக் குழுவொன்றை நியமிக்க உள்ளேன் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

புதிய அமைச்சர்கள் பதவியேற்றதும் கடந்த காலங்களில் அவ்வமைச்சுக்களில் நடைபெற்றுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் ஊழல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் நடைபெற்ற சந்திப்பிலேயே அமைச்சர் ஹக்கீம் விசாரணைகள் தொடர்பாக இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒழுங்கான கேள்விப் பத்திரங்களைக் கோராமல் தனிப்பட்ட அரசியல் செல்வாக்குகளால் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமை விசாரிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்

## கன்னியா கிராம இளைஞர் முன்னேற்றக் கழகம்



கண்ணியாவில் கிராம இளைஞர் முனேற்ற கழகத்தின் முதலாவது அமர்வு கடந்த 4ம் திகதி நடத்தப்பட்டது.

அக் கழகத்துக்கு தலைவர் கணபதி மோகனகுமார், செயலாளர் பத்திநாதன் ராஜ்குமார், பொருளாளர் சுந்தரம் ரமேஸ் ஆகியோரை உறுப்பினர்கள் தெரிவு செய்தனர். அதன் பின்பு கிராம முனேற்றம் சம்மந்தமாக பல விடயங்கள் பேசப்பட்டு அடுத்த கூட்டம் மார்ச் 5ம் திகதி என அறிவித்த பிறகு கூட்டம் நிறைவுபெற்றது.

## உதவி கோருகின்றார்



திருகோணமலையில் வசிக்கும் கோபால் மகாதேவன் பிள்ளை (வயது 71), இலங்கை துறைமுக அதிகாரசபையில் சேவையாற்றி 1995ம் ஆண்டு இளைப்பாறியவர், ஆனால் அவருக்கு ஓய்வூதியம் வழங்கப் படவில்லை.

தற்போது இவருக்கு இதயத்தில் இரு பக்கமும் அடைப்பு இருப்பதாகவும் காலதாமதமின்றி சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என கொழும்பில் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சத்திர சிகிச்சைக்கான செலவு 5,50,000 ரூபா தேவைபடுவதாகவும் இப் பணத்தை கட்டுவதற்கு தனது குடும்பம் மிகவும் வறுமைக்கோட்டின் கீழ் இருப்பதால் தனது சத்திர சிகிச்சைக்கு உதவ தனவந்தர்களிடம் வேண்டி நிற்பதாக வேண்டுகோள் விடுக்கின்றார்.

அவருடைய வங்கி கணக்கு இலக்கம்:
தேசிய சேமிப்பு வங்கி, கணக்கு இல. - 1000 206 4890 6, நகரக்கிளை, கொழும்பு

## "விலைகள் குறையவில்லை" மக்கள் விசனம்

புதிய அரசாங்கத்தினால் குறிப்பிட்ட சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டமை மக்களுக்குப் பெரிதும் உதவியாக அமைந்தாலும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் சில வியாபார நிலையங்களில் விலைகள் மாற்றம் செய்யப் படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பழைய இருப்புகள் முடியும் வரை விலைகளைக் குறைக்க முடியாது என விற்பனையாளர்கள் அடம்பிடிக்கின்றனர்.

இதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டு சட்டத்திதை மீறுவோருக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

(சச்சு)

## கணனிகள் வழங்கினார் ஜெனார்த்தனன்



திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயகப்பிரிவுக்கு உற்பட்ட நாகராஜாவளவு கிராமத்திற்கான ஒரு தொகுதி கணனி உபகரணங்களை கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் 01.02.2015 அன்று வழங்கி வைத்தார்.

இதே வேளை இங்குள்ள வறிய மாணவர்கள் 10 பேருக்கு "நாங்கள்" அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வும் இடம் பெற்றது.



இந் நிகழ்விற்கு திருகோணமலை நகரசபை உறுப்பினர் வ.கோகுல்ராஜ் மற்றும் சமூக வாழ்வு ஒன்றிய செயலாளர் வ.ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மதீனா பல்கலைக்கழகத்திற்கு மூதூர் இளைஞன் பயணம்



மதீனா பல்கலைக்கழகத்தில் மேற்படிப்புக்காகச் செல்லவுள்ள மூதூரைச் சேர்ந்த அஷ்ஷெய்க் மதார் முஹம்மது ஸபீரை வழியனுப்பிவைக்கும் வைபவம் கடந்த வெள்ளிக் கிழமை மூதூரில் இடம்பெற்றது.

மூதூர் ஜம்மியா இர்ஷாதியா அமைப்பின் தலைவர் அஷ்ஷெய்க் ஜே.எம்.றியாஜ் நத்வி தலைமையில் ஆலிம் சேனை மஸ்ஜிதுல் ஹிறாவில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் பீஸ் ஹோம் அமைப்பின் தலைவர் எஸ்.எச்.அமீர், மஸ்ஜித் இமாம் அஷ்ஷெய்க் ஹஸ்ஜின் நத்வி, ஜம்மியாவின் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.என்.எம். நம்ஸித் நத்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(அச்சுதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புச் செய்திகள்

## துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுவன்

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடியில் 10 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் சந்தேக நபரை, நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக காத்தான்குடி காவல்துறையினர் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் குறித்த சிறுவன் தனது தாயிடம் கூறியதையடுத்து தாய், காத்தான்குடி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சிறுவன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் 67 வயதாக சந்தேக நபர் தலைமறைவாகியிருந்த நிலையில், நேற்று இவரைக் கைதுசெய்துள்ளனர்.

## சமுர்த்தி தடைப்படாது

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை சந்தித்தபோது, நடந்த தவறுகளை திருத்திக்கொண்டு எதிர்காலத்தில் சமுர்த்தி திட்டத்தை சிறப்பாக முன்னெடுக்கவேண்டும். விசேடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பொறுப்பாக நான் நியமிக்கப்பட்டுள்ளேன். இனி வரும் காலங்களில் அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்களும் இந்த சமுர்த்தி திட்டத்தை சிறப்பாக செய்யவேண்டும்" என வீடமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதியமைச்சர் எம்எஸ்.எஸ்.அமீர் அலி கூறினார்.

## அனைவரும் தாமாகவே கொடியேற்றினர்

அரசாங்கத்தின் கட்டளையின்படி கொடியேற்றுகின்ற காலம் சென்று மக்கள் முன்வந்து தேசிய கொடியை ஏற்றுவதை பார்க்கும்போது மிகவும் சந்தோசமாக இருக்கின்றது.இதனை மற்ற மாவட்டங்களும் பின்பற்ற வேண்டும்.அப்போதுதான் நாங்கள் உண்மையான சுதந்திரத்தினை பெறமுடியும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் மாவட்ட அரசாங்க அதிபர் மௌனகுருசாமி தெரிவித்தார்.



## தபால் சேவையில் தாமதம்

### வாகன பழுது

மட்டக்களப்பு அஞ்சல் திணைக்களத்தில் சேவையிலிருந்த தபால் விநியோகத்துக்கான வாகனம் பழுதடைந்துள்ளதால், நாளாந்த தபால் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தபாலதிபர்கள் தெரிவிக்கின்றார்கள். இந்த வாகனம் பழுதடைந்துள்ளதால் மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குக்கான தபால் விநியோகம் கடந்த இரண்டு மாதகாலமாக சீர்குலைந்துள்ளதாக தபாலதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் தன்னாமுனை தொடக்கம் வாகரைவரையுள்ள 8 அஞ்சல் அலுவலகங்களுக்கும் 8 தபால் விநியோக உப அஞ்சல் அலுவலகங்களுக்குமான தபால் விநியோகமே சீர்குலைந்துள்ளது. மட்டக்களப்பு மத்திய அஞ்சலகத்திலிருந்து தற்சமயம் மாற்று ஏற்பாடாக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களிலேயே மட்டக்களப்பு வடக்கு மார்க்கத்திற்கான தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

## வாகன கடத்தல்

வாகனங்களை கடத்திவந்து அவற்றை மாற்றம் செய்து சட்டவிரோத ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்துவந்ததாகக் கூறப்படும் ஒருவரை நேற்று வியாழக்கிழமை இரவு தாம் கைதுசெய்துள்ளதாக மட்டக்களப்பு விஷேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். காத்தான்குடி நகரில் மேற்படி சந்தேக நபரால் விற்பனை செய்யப்பட்ட சட்டவிரோத வாகனத்தை கைப்பற்றியதுடன், சந்தேக நபரையும் கைதுசெய்ததாகவும் பொலிஸார் கூறினர்.

## எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் இல்லை





எந்த அரசாங்கம் ஆட்சிக்குவந்தாலும் தமிழ் மக்கள் சுதந்திரத்தினை அனுபவிக்கமுடியாத நிலையே இருப்பதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையை சேர்ந்த இளைஞன் ஒருவர் டுபாயில் பணிபுரிந்துவிட்டு வந்தவேளையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் தம்மிடம் முறையிடப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், டுபாயில் பணிபுரிந்துவிட்டு இலங்கை வந்த கொக்கட்டிச்சோலை, 6ஆம் வட்டாரத்தினை சேர்ந்த தாமோதரம் பாஸ்கரன் என்ற குடும்பஸ்த்தர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் தொடர்பில் அவரது கொக்கட்டிச்சோலை வீட்டுக்கு புலனாய்வுத்துறையினர் வந்து விசாரணை செய்துவிட்டு சென்றுள்ளனர். விடுதலைப்புலி என்ற சந்தேகத்தின் பேரிலேயே குறித்த குடும்பஸ்த்தர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது இந்த நாட்டில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தமிழ் மக்கள் சுதந்திரத்தினை அனுபவிக்கமுடியாது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. நாளை இலங்கையின் 67வது சுதந்திர தினம் அனுஸ்டிக்கப்படவுள்ள இந்த வேளையில் சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர்களை கைதுசெய்யும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவது வேதனைக்குரிய விடயம் ஆகும்.

இந்த நாட்டில் சிறுபான்மை சமூகத்திற்கு நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ளும் வரையிலும் சுதந்திர காற்றினை சுவாசிக்கமுடியாது என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

நாட்டுக்கு அனைவரையும் திரும்பிவருவமாறு புதிய அரசாங்கம் அறைகூவல் விடுத்துள்ள நிலையில் தொழில்புரிந்துவிட்டு வந்த இளைஞன் கைதுசெய்யப்பட்டதானது தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

## 1700 + 3800 மோ.சை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது, 1700 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. அத்துடன், மாவட்டத்திற்கென 3800 வரையான மோட்டார் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்படவுள்ளதாக மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## எஞ்சிய காலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்



கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் விவகாரம் தொடர்பில் மாகாணசபையில் எஞ்சியுள்ள இரண்டரை வருட ஆட்சிக் காலப்பகுதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒரு வருடம், ஒன்றரை வருடமென்று இரண்டாக வகுத்து தீர்வு காண்பது இரு சமூகங்களுக் கிடையிலும் சுமுக நிலையை ஏற்படுத்துமென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் கடந்த புதன்கிழமை எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## பாவனைப் பொருள் உதவி

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராகேணிக் கிராமத்தில் வறுமைக் கோட்டுக் கீழுள்ள தெரிவுசெய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு தலா 4,500 ரூபாய் பெறுமதியான பாவனைப் பொருட்கள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டதாக முஸ்லிம் எய்ட் ஸ்ரீலங்கா கள நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எம்.ஏ.எம்.அஸ்மி தெரிவித்தார். படுக்கை விரிப்புக்கள், துவாய்கள், சவுக்காரங்கள், பற்பசைகள், நுளம்பு தடுப்பு வலைகள், வாளிகள், பெண்களுக்கான ஆரோக்கியத் துவாய்கள் என்பன இந்த பொதியில் அடங்கியிருந்ததாக அவர் தெரிவித்தார்.



## விருது வழங்கி கௌரவிப்பு

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள இரு பாடசாலைகளுக்கு கல்வி உயர் விருது கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருதுகளுக்கு தெரிவான பாடசாலைகளாக மட்டக்களப்பு புனித தெரேசா மகளிர் பாடசாலை மற்றும் மட்டக்களப்பு கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம் அதிசிறந்த செயற்பாடுகளுக்கான விருதுகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## படகு கவிழ்ந்ததால் பதட்டம்

மட்டக்களப்பு முகத்துவாரம் கடற்பகுதியில் மூன்று பேர் படகில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது படகு கவிழ்ந்ததன் காரணமாக இருவர் தப்பியுள்ள நிலையில் ஒருவர் காணாமல் போயுள்ளதாக மட்டக்களப்பு காவல்துறையினர் தெரிவித்தனர்.

காணாமல்போனவர் மட்டக்களப்பு கறுவப்பங்கேணியை சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான தர்மலிங்கம் விஜயகுமார் (40வயது) என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## வரி அதிகரிப்புக்காக ஆர்ப்பாட்டம்

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் வரி அதிகரிக்கப் பட்டமையை காத்தான்குடி வரியிறுப்பாளர் சங்கம் கண்டித்துள்ளது. காத்தான்குடி வரியிறுப்பாளர் சங்கம் கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடத்திய அதன் பொதுச்சபை கூட்டத்தில் ஏகமனதாக இந்த கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காத்தான்குடி வரியிறுப்பாளர் சங்கத்தின் ஆலோசகர் ஓய்வுபெற்ற அதிபர் எம்.எம்.எம்.மஹ்றூப் கரீம் தலைமையில் காத்தான்குடி கடற்கரையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தின்போது, காத்தான்குடி நகரசபைப் பிரிவில் அந் நகரசபையினால் வரி அதிகரிக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், அதிகரித்த வரியையும் எதிர்ப்பதாக இங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லோரும் சேர்ந்து என்னை தோற்கடித்தீர்கள் !



அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிற்கு அண்மையில் தொலைபேசியில் வாழ்த்துக்களைத் தெரிவித்து - உள்ளார் முன்னாள் சனாதிபதி மஹிந்த ராஜபக்ச.

திடீரென மேற்கொள்ளப்பட்ட இவ்வழைப்பால் அதிர்ந்துபோன சம்பிக்க பின்னர் சுதாகரித்துக்கொண்டு முகமன் கூறியுள்ளார்.

மிகச் சுமகமாக மேற்கொள்ளப்பட்ட இந்த அழைப்பின் போது "நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னைத் தோற்கடிதது விட்டீர்கள் என்ன?" மஹிந்த தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளித்த பாட்டாளி சம்பிக்க ரணவக்க நான் கட்சி எடுத்த முடிவிற்குக் கட்டுப்பட்டேனேயொழிய என் தனிப்பட்ட முடிவு எதுவும் இல்லையென பதிலளித்துள்ளார்.

# மலைமுரசு MALAIMURASU தேசிய செய்திகள்

### "மொஹானை நீக்கி ஷிராணியை அமர்த்தியது வறிதானது- வெற்றானது" சரத் என் சில்வா

பிரதம நீதியரசரின் நியமனங்கள் தொடர்பாகத் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ள முன்னாள் நீதியரசரான சரத் என் சில்வா மொஹானை நீக்கியதும் ஷிராணியை அமர்த்தியதும் சட்டப்படி செல்லாதது எனத் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்லாமல் ரணில் விக்ரமசிங்கவைப் பிரதம மந்திரியாக நிமித்தமை கூடத் தவறானது என அவர் மேலும் ஒரு குண்டைப் போட்டுள்ளார்.

சனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களை அரசியல் சட்டமே வழங்கியுள்ளது. அவ்வரசியல் சட்டத்தின் நடைமுறைகளைப் பின்பற்றாமலே நியமன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலேயே இவை வறிதான நியமனங்கள் ஆகும் என அவர் தெரிவித்துள்ளார்.

## மீன்பிடித் தடை பின்தள்ளப்பட்டுள்ளது



ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டிருந்த மீன்பிடி ஏற்றுமதித் தடை ஆறு மாதங்களுக்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

இத்தகவலை வெளியிட்டுள்ள மீன்பிடி ராஜாங்க அமைச்சர் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் ஐரோப்பியப் பயணத்தை அடுத்தே இந்தத் தடை தடையை 6 மாதங்களுக்கு பின் தள்ள ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன் சந்தேகத்திற்கிடமான மீன்பிடிப் படகுகளில் செயற்கோளின் உதவியுடனான கண்காணிப்பு முறைமையை இணைக்கவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோரியிருந்தது. அவ்வாறு செய்வதாக அப்போதைய மீன்பிடி அமைச்சரான ராஜித சேனாரத்ன ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உறுதியளித்திருந்தார்.

எனினும் இதனை நிறைவேற்றாதிருந்ததால் மீன் ஏற்றுமதித் தடையை ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்தது.

முன்மொழியப்பட்ட கண்காணிப்பு முறைமையை படகுகளில் பொருத்துவதற்கு புதிய அரசிற்கு கால அவகாசம் வழங்கும் முகமாகவே மேலும் 6 மாதத்திற்கு தடையைப் பின்தள்ளும் முடிவை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டுள்ளது.

## "புதிய அரசாங்கத்திலும் குறை"

### த.தே.கூ - பிஸ்வாலிடம் முறையீடு



இலங்கை புதிய அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தமிழ் மக்கள் தொடர்பில் இன்னும் உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்று அமெரிக்காவிடம் முறையிடப் பட்டுள்ளது.

அமெரிக்காவின் தெற்காசிய பிராந்திய உதவி ராஜாங்க செயலாளர் நிஸா பிஸ்வால் கடந்த 3ம் திகதி கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்த போது இந்த முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

புதிய அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் 25நாட்கள் நிறைவடைந்துவிட்டன. இதன்போது ஊழல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் தொடர்பிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது

வடக்குகிழக்கு மக்களின் மீள்குடியேற்றம், காணி அபகரிப்பு, காணாமல் போனோர், தமிழ் சிறைக்கைதிகளின் உட்பட்ட பல விடயங்களில் கவனம் செலுத்தப் படவில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பிஸ்வாலிடம் தெரிவித்தனர்.

எனினும் இனப்பிரச்சினை தீர்வு உட்பட்ட விடயங்கள் தொடர்பில் குழு ஒன்றை அமைக்க புதிய அரசாங்கம் இணங்கியுள்ளதாக பிஸ்வால் கூட்டமைப்பினரிடம் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள கூட்டமைப்பினர் அது தொடர்பில் முழுமை விடயங்கள் வெளியாக வில்லை என்றும் பிஸ்வாலிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மரணதண்டனையை மீள அமுலாக்கல் ஐரோப்பிய ஒன்றியம் எதிர்ப்பு

மரணதண்டனை இலங்கையில் மீண்டும் அமுலாக்கப்படும் எனக் கண்டியில் வைத்து நிதி அமைச்சர் அறிவித்ததை அடுத்து அவ்வறிப்பு தொடர்பான விளக்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் கோரவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இசைவுடன் பல ஆண்டுகளுக்கு முன்பே இலங்கை மரண தண்டனையை நிறைவேற்றுவதில்லை என்ற முடிவில் உள்ளது.

2012ம் ஆண்டில் மரண தண்டனையை மீள அமுலாக்க வேண்டும் என பல கோரிக்கைகள் உள்நாட்டில் வலுப்பெற்றதை அடுத்து அப்போதைய நீதி அமைச்சரான ரவூப் ஹக்கீமைச் சந்தித்த அப்போதைய ஐரோப்பிய ஒன்யிறத்தின் தூதுவர் ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்ப்பை இவ்விடயம் தொடர்பாக வெளியிட்டிருந்தார்.

இலங்கையில் 1976ம் ஆண்டுக்குப் பின்னர் மரண தண்டனைகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை. எனினும் சந்திரிக்கா அம்மையார் பல தடவைகள் மரணதண்டனையை மீள அமுலாக்கவேன் எனத் தெரிவித்திருந்தும் அதனை நிறைவேற்ற முடியாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருப்பதிக்கு சனாதிபதி செல்கின்றார்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் மேற்கொள்ளவுள்ள முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப்பயணம் இப்பயணம் அமைகின்றது.

எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை இந்தியாவிற்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தில் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, அந்நாட்டு பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## உறவை வலுப்படுத்த சீனாவின் குழு வருகை

இலங்கைக்கான பயணத்தில் ஈடுபட்டுள்ள சீன அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியும், அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சருமான லிவ் ஜியான்சாவ் உள்ளிட்ட தூதுக் குழுவினர், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது இருதரப்பிலும் அரசியல், பொருளாதார மற்றும் கலாசார ரீதியான பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கைதியைக் கொண்டுவர அச்சமாக உள்ளது - சிஐடி



பிரபல போதைவஸ்துக் கடத்தல் மன்னன் வெலசுதாவை நீதிமன்றின் முன்கொண்டுவராமல் அவரது உயிருக்கு ஆபத்திருப்பதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளனர் புலனாய்வுப் பிரிவினர்.

வெலசுதா கைதான பின்னர் சுமார் முப்பத்தியாறு முக்கிய இலங்கைப் புள்ளிகளின் பெயர்களை வெளியிட்டுள்ளான்.

அவ்வலைப்பின்னலில் பிரபல்யமான கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், காவல்துறை மா அதிபர் ஒருவர் ஆகியோரின் பெயர்களும் உள்ளடங்குகின்றன.

சிறைச்சாலையை விட்டு வெலசுதாவை வெளியில் கொண்டுவர அஞ்சுவதாக அரசதுறை அறிவித்திருப்பதானது இலங்கையின் நிலைமையினை வெளிக்காட்டியுள்ளது. எனினும் எதிர்வரும் 19ம் திகதி அவரை நீதிமன்றுக்குக் கொண்டுவர நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## 275 கைதிகள் விடுதலையாவர்?

கடந்த கால யுத்தத்தின் போது, சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 275 பேரில் சிறிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென விசேட சனாதிபதி செயற்பாட்டு அணி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## பணக்காரர்களை உருவாக்கும் இந்தியா



அதிக பணக்காரர்களை உருவாக்கும் நாடுகளின் பட்டியலில் உலக அளவில் முதல் 3 இடங்களுக்குள் இந்தியா இடம்பெற்றுள்ளது.

ஹருன் குளோபல் ரிச் 2015 பட்டியல் அண்மையில் வெளியானது. அதில், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியா அதிக பணக்காரர்களை கொண்ட நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக சீனா உள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த முறை. ரஸ்யா மற்றும் இங்கிலாந்தைப் பின்னுக்கு தள்ளி இந்தியா சாதனை படைத்துள்ளது.

இந்தியா தற்போது உள்நாட்டில் மொத்தம் 97 பணக்காரர்களையும், வெளிநாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவளியினராக 2,089 பணக்காரர்களையும் கொண்டுள்ளது.

உள்நாட்டில் உள்ள 97 பணக்காரர்களில் 41 பேர் பரம்பரையாகவும், 56 பேர் தனது சுய உழைப்பால் முன்வந்தவர்களாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அளவில் பணக்காரர்களின் வரிசையில், முகேஷ் அம்பானி முதலிடத்தில் இருக்கிறார். அதற்கடுத்த இடத்தில் முறையே விப்ரோ அதிபர் அசிம் பிரேம்ஜி, எச்.சி.எல் அதிபர் சிவ் நாடார், குமார் பிர்லா, சுனில் மிட்டல் ஆகியோர் முதற்பத்துப்பேரில் உள்ளனர்.

## பெண்களுக்குப் 15 வயது வரையே கல்வி – ஐஎஸ்ஐஎஸ்

இஸ்லாமிய நாட்டில் பெண்கள் கல்வி கற்கும் வயதை இஸ்லாமியத் தீவிரவாதிகள் வரையறுத்துள்ளனர்.

ஏழு வயது தொடக்கம் பதினேழு வயது வரை பெண்கள் கல்வி கற்க முடியும் எனவும் பின்னர் அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

வெளி ஆடவர்களின் பார்வையில் இருந்து அவர்கள் மறைத்து வைக்கப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆடை அலங்கார கடைகள், அழகு நிலையங்கள் எல்லாம் சாத்தானின் வேலை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வளைகுடா நாடுகளிலிருந்து குறிப்பாக சௌதி அரேபியாவிலிருந்து பெண்கள் போராளிகளை ஈர்க்கும் நோக்கில் இந்த ஆவணம் வெளியிடப்பட்டுள்ளதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

## ஐஎஸ்ஐஎஸ் உடன் யுத்தம் ஒபாமா வேண்டுகோள்

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளின் மீது யுத்தத்தை அமெரிக்கா தொடங்குவதற்கான அனுமதியொன்றை அமெரிக்க காங்கிரசிடம் ஒபாமா சமாப்பித்துள்ளார்.

தீவிரவாதிகளின் மீது தாக்குதலைத் தொடுத்து வரும் நேட்டோ படைகளுடன் அமெரிக்கப் படைகளும் ஈடுபட்டாலும் அமெரிக்கா தற்போதுவரை யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை.

தற்போது தீவிரவாதம் மிக அதிகரித்துள்ள நிலையில் அவர்களுக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பிக்கும் அனுமதியை ஒபாமா வேண்டியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## இணைய மாநாடு சிங்கப்பூரில்

14-வது உலகத் தமிழ் இணைய மாநாடு வரும் மே 30 முதல் ஜூன் 1-ஆம் தேதி வரை 3 நாட்கள் சிங்கப்பூரில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கு உலகம் முழுவதிலுமிருந்து ஐநூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்க் கணினி வல்லுநர்கள் வருகை தர உள்ளனர்.

"உலகத் தமிழ் தகவல்தொழில்நுட்ப மன்றம்" என்ற அமைப்பு உலகின் பல நாடுகளில் அரசுடனும் பல்கலைக்கழகங்களுடனும் இணைந்து இந்த தமிழ் இணைய மாநாட்டை தொடர்ந்து நடத்தி வருகிறது.

இந்தியா, மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இலங்கை, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து தமிழ்க் கணினி வல்லுநர்கள் கலந்துகொண்டு இந்த மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்பிக்கின்றனர். சிறப்பு அமர்வுகளில் கணினி வல்லுநர்கள், இண்டர்நெட், செல்போன் கருவிகளில் தமிழின் பயன்பாடு பற்றி சிறப்பு கருத்தரங்குகள் நடத்த உள்ளனர்.

## வடகொரியா ரஸ்யா நோக்கி நகர்வு



அமெரிக்க மற்றும் ஐரோப்பிய பொருளாதாரத் தடைகளை அடுத்து வரட்சியடைந்து வரும் தனது பொருளாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு ரஸ்யாவுடன் சுட்டுச்சேர வடகொரியா முடிவெடுத்துள்ளது.

இவ்வாரத்தில் வடகொரியாவுடன் வர்த்தகத் தொடர்புகளை உருவாக்கும் நோக்குடன் புதிய குழுவொன்றை ரஸ்ய வர்த்தக சம்மேளனம் உருவாக்கியுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை வருடாந்தம் 1 பில்லியன் டொலர்களால் யர்த்தும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ள இக்குழு 2020ற்குள் இந்த எல்லையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2014மன் நடுப்பகுதியின் ரஸ்யா வடகொரியா தனக்குத் தரவேண்டியிருந்த 11 பில்லியன் டொலர்கள் கடனை பதிவழித்து தனது நல்லெண்ணத்தை வடகொரியாவிற்குத் தெரிவித்திருந்தது

## இபோலா பற்றி ஆராய்வு

மேற்கு ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட இபோலா நோய் பரவலில் இருந்து கற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் பற்றி விவாதிப்பதற்காக மருத்துவர்களும் பொது சுகாதார அதிகாரிகளும் லண்டனில் கூடியுள்ளனர்.

இந்த நோயின் பரவலுக்கு எதிரான சர்வதேச நடவடிக்கைகளின் வேகம் குறித்தும், அதனை, அந்த நோய்கள் பரவ ஆரம்பித்த கினி, லைபீரியா மற்றும் சியாராலியோன் ஆகிய நாடுகளின் சுகாதார உட்கட்டமைப்புகளுக்கு எவ்வாறு கொண்டுசெல்வது என்பது குறித்தும் அவர்கள் ஆராய்கிறார்கள்.

## உயிருடன் விமானி எரிப்பு



ஜோர்டான் விமானியை உயிருடன் எரித்தது தொடர்பான வீடியோவை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர். இச்சம்பவம் உலகம் முழுவதும் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜோர்டான் நாட்டை சேர்ந்த விமானி முயாத் அல்-கசாஸ்பெ என்பவர், ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் கடந்த டிசம்பர் மாதம் 24-ந் தேதி பிடிபட்டார்.

இதனையடுத்து ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் பிணைக் கைதியாக இருந்த அல்-கசாஸ்பெயை விடுவிக்குமாறு கோரிக்கை எழுந்தது.

அவரை சிறை வைத்த தீவிரவாதிகள், ஈராக்கிய பெண் தீவிரவாதி சஜிதா அல் - ரிஷாவியை விடுதலை செய்ய வேண்டும் என்று கெடு விதித்தனர்.

விமானி அல்-கசாஸ்பெ உயிருடன் இருப்பதற்கான ஆதாரத்தை தரும்படி தீவிரவாதிகளிடம் ஜோர்டான் அரசு கேட்டது.

அல்-கசாஸ்பெ உயிருடன் இருப்பதை உறுதிசெய்தால் பெண் தீவிரவாதியை ஒப்படைத்து விடுகிறோம் என்று ஜோர்டான் அரசு கூறியது.

இந்நிலையில் தீவிரவாதிகள் விமானி முயாத்தை கூண்டில் அடைத்து பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எரித்து கொன்றுள்ளனர். அந்த வீடியோவை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டனர்.


## இந்தியச் செவிலியர்கள் மீட்பு

ஈராக்கில் போர் நடக்கும் பகுதியில் சிக்கியிருந்த இந்தியாவைச் சேர்ந்த 11 செவிலியர்கள் மீட்கப் பட்டிருப்பதாக இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இவர்கள் இன்று நாடு திரும்புகின்றனர். குர்திஸ் நகரமான இர்பிலில் இவர்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஈராக்கின் கிர்குக் நகரில் பணியாற்றிவந்த இவர்கள் அனைவரும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்.

## புதிய ஏர்போஸ் 1



அமெரிக்க சனாதிபதிக்கான புதிய விமானத்தைக் கொள்வனவு செய்ய பெண்டகன் தீர்மானித்துள்ளது.

அமெரிக்க சனாதிபதியின் வமானமானது "ஏர்போஸ் 1" என்ற சங்கேதப் பெயரால் உலகம் முழுவதும் பிரசித்தமானது.

இதற்கென போயிங்747-8 ரக விமானத்தை கொள்வனவு செய்து அதற்கான மேலதிக இணைப்புக்களை உருவாக்கிக்கொள்ள பெண்டகன் முடிவு எடுத்துள்ளது.

ஏற்கனவே உள்ள விமானங்கள் தமது 30 வருட சேவையை 2017ல் நிறைவுசெய்கின்றன.

## 100 பெண்களைப் வன்புணர்ந்த ஜப்பானியர்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவுக்கு அருகே உள்ள சிபா பகுதியை சேர்ந்தவர் கிதேயுகி நோகுச்சி. 54 வயதான இவர் மருத்துவ ஆய்வு செய்வதாக கூறி 100-க்கும் மேற்பட்ட பெண்களை சீரழித்ததற்காக தற்போது கைது செய்யப்பட்டு உள்ளார். ஆனால் இவர் எவ்வித மருத்துவ பயிற்சியும் பெறாதவர் என்பது குறிப்பிடத்தக்கது. தூங்கும் போது ரத்த அழுத்தத்தை ஆய்வு செய்வதாக கூறி இவர் பெண்களை அழைத்து அவர்களுக்கு மயக்க மருந்து கொடுத்து அவர்களை வன்புணர்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினையடி நீ எனக்கு...

தொடர் நாவல்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.
தருமு சிவராமு (பிருமிள்)

நிலா வானத்தில் இருப்பதுதான் நிலவுக்கும் நல்லது, கவிஞனுக்கும் நல்லது. ஆனால் அவனுக்கு ...?

**– கவிஞர் வி.மைக்கல் கொலின்–**

**– கடந்த வார தொடர்ச்சி –**

மனசு உணர்வுகளை உள்வாங்கி அதை எப்படி ரூபமாக வெளிப்படுத்துவது என்று திணறும்போது ஓவியம் பிறக்கிறது .அதை எப்படி சொற்களாய் வெளியேற்றுவது என்று நினைக்கும்போது கவிதை பிறக்கிறது. அதே போல் இரண்டு மனசு ஒன்றை ஒன்று உள்வாங்கி மனசு மனசை மாற்றி தெரியப்படுத்த முயல்கையிலேதான் காதல் பிறக்கிறது.



எந்த ஒரு படைப்பாளனுக்கும் தன்னுடைய படைப்பின்மேல் பூரண திருப்தி ஏற்படுவதில்லை, தன்னுடைய படைப்பில் திருப்தி கண்டானாகில் அவனது தேடல் குறைந்து விடும். அவனது தேடலின் ஆழம் குறைய அவனது வெளிப்பாட்டுத் திறனும் குறைந்து விடுகிறது .அதைப்போலத்தான் காதலும். காதலுக்கு பூரண திருப்தி என்ற ஒன்றில்லை. காதலிப்பவர்கள் மேலும் மேலும் காதலித்துக்கொண்டேயிருக்கிறார்கள். ஏனென்றால் காதல் என்பது ஒரு தேடல். தேடல் அதிகமாக அதிகமாக அன்பு வளர்கிறது.அது காதலை மேலும் மேலும் ஆழப்படுத்துகிறது.

ஜெயரதன் நிவேதா காதலும் ஒரு தேடலில் தான் ஆரம்பமாகியது, நவீன கலை இலக்கியம் பற்றிய தேடலில் அவனுக்கு கிடைத்தது நவீன காதல் இலக்கியம்.

நான்
இமய மலையைப்
பார்த்ததில்லை
ஆனால்
என் முன்னே
இமயம் போல் உயர்ந்து நிற்கும்
உனது காதலைப் பார்க்கிறேன்.

என்று கவிதை சொன்ன காதல். வாழ்வை நேசித்த காதல், கையில் இருந்த கண்ணாடிப் பாத்திரம் கீழே விழுந்து நொறுங்கியது போல் அந்தக் காதலும் நொறுங்கிப்போனது.

நிவேதாவை சந்திக்காமலேயே இருந்திருக்கலாம், சந்தித்தாலும் பேசாமலேயே இருந்திருக்கலாம், பேசினாலும் பழகாமல் இருந்திருக்கலாம், பழகினாலும் காதலிக்காமல் இருந்திருக்கலாம், காதலித்தாலும்.... காதலித்தாலும்.... இப்படி எத்தனையோ "இருக்கலாம்"கள். ஆனால் முடியவில்லையே? சந்திக்காமல் இருக்க முடியவில்லை அது விதி .பேசாமல் இருக்க முடியவில்லை அது தேடல். பழகாமல் இருக்க முடியவில்லை அது தேவை, காதலிக்காமல் இருக்க முடியவில்லை அது...அது....அதுதான் இன்னும் அவனுக்கு புரியவில்லை.ஒருவேளை அவளுக்கும் அப்படியோ என்னவோ ?

நிவேதாவை முதன் முதலில் சந்தித்தது திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் செல்லும் புகையிரதத்தில்தான். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண் கலைப் பிரிவிற்கு தெரிவாகி விடுமுறைக்கு ஊருக்கு வந்திருந்த அவன், விடுமுறை கழிந்து மீண்டும் பல்கலைக்கழகம் செல்வதற்கு தயாராக வந்திருந்தான். ஆரம்ப ஆங்கில பாட கற்கை நெறி முடிந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஊருக்கு வந்தவன் அன்று மீண்டும் பயணம் செய்ய இருந்தான். அவனுக்கு எதிரில் இருந்த சீற்றில்தான் அவள்.

இரவு 8.10 புகையிரதம் புறப்படப் போவதற்கான மணி அடித்தாகிவிட்டது. வந்திருந்த பாடசாலை நண்பர்கள் அனைவரிடமும் கை குலுக்கி விடைபெற்றுக்கொண்டு, அவர்கள் அன்புடன் தந்த அன்பளிப்புப் பார்சல்களையும் மேலே தனது பையுடன் வைத்து விட்டு தனது இருக்கையில் அமர்ந்து யன்னலைத் திறக்கும் போதுதான் கவனித்தான், ஒரு அழகிய இளம் பெண் அவனது இருக்கைக்கு எதிரே அமர்ந்திருந்தாள். அவன் யன்னல் கதவினை திறக்கும் வரைக்கும் காத்திருந்தவளைப் போலவோ என்னவோ யன்னல் ஓரத்தோடு ஒட்டிக் கொண்டு வெளியே புதினம் பார்க்கத் தொடங்கினாள். அத்துடன் அவனுக்கு அவளது முகம் மறந்து போனது.

ஜெயரதனுக்கு தனது நண்பர்களை நினைக்க பெருமையாக இருந்தது. பல்கலைக் கழகத்தில் கலைப் பிரிவுக்கு தேர்வு செய்யப்பட்டாலும் பல்கலைக்கழகம் செல்லும் வரையுள்ள இடைக்காலப் பகுதியில் அவன் கல்வி கற்ற திருகோணமலையில் பிரபல்யமான புனித சூசையப்பர் கல்லூரியில் சேவை நோக்கில் கல்வி கற்பிக்கத் தயாரானான். குறிப்பிட்ட அக் காலப்பகுதியில் அவன் படித்த சில பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் இருக்கவில்லை.எனவே அவன் தனக்கு அடுத்த "பெட்ஜில்" உள்ள மாணவர்களுக்குப் படிப்பித்தான்.இவ்வளவு காலமும் தனதுஉயர்கல்விக்காக தன்னை வருத்திக் க்ட்டப்பட்ட தனது தாயின் கனவுகளைக் காயப்படுத்தாமல் காப்பாற்ற வேண்டும் என்ற வெறி அவனுள் கிளர்ந்தெழுந்த நிலையில் அவன் பல்கலைக் கழகம் செல்லும் வரை சும்மா இருக்க முடியவில்லை. மாலை வேளைகளில் "டியுசன்" நடத்தினான் .

மூன்று மாத கால பழக்கத்திலேயே அவனுடன் சகோதரர்களைப் போல் பழகியிருந்த ஆசிரியர்களும், ஆசிரியைகளும் அவனுக்கு பிரிவு உபசாரம் வைத்து வழியனுப்பி வைத்தார்கள். தங்கள் பாடசாலை மாணவன் ஒருவன் பல்கலைக் கழகத்திற்கு போகிறான் என்ற பெருமை அனைவர் முகங்களிலும் நிலவியதை அவன் கண்டான். நெருக்கமாக பழகிய சில நண்பர்கள் இராணுவ கெடுபிடி இருக்கும் இரவு நேரத்திலும் புகையிரத நிலையத்திற்கு வந்து வழியனுப்பி வைத்தது அவனுக்குக் கவலையாக இருந்தது .எத்தனை நல்ல உள்ளங்களை பிரிந்து போக வேண்டியிருக்கிறது என்ற எண்ணம் எழுந்ததும் , அவனுக்கு மனதில் என்னவோ செய்வதைப் போலிருந்தது.....

மேவும்.. .. ..

# பிழைப்பு

**– கீதா –**

வெகுதூரத்தில் யாரோ திட்டிக் கொண்டிருந்தார்கள். குரலுக்குச் சொந்தக்காரி அவன் மனைவிதான் என்பது தூக்கம் கலைந்த பிறகுதான் கபாலிக்குப் புரிந்தது. அவள் திட்டியது அவனைத்தான். அவன் வீட்டுச் செலவிற்குப் பணம் கொடுத்து ஆறுமாசமாகிறது. அந்தக் கடுப்பில்தான் கரித்துக் கொட்டுகிறாள். வீட்டில் ஒரு கறவை மாடு இருப்பதால் பிள்ளைகளுக்குக் கஞ்சியாவது ஊற்ற முடிகிறது. அதுவும் இல்லையென்றால்... அவளைப் பார்த்து ஆக்ரோஷமாகக் கேட்டான்.,

"ஏன்டி... மிருகம் மாதிரி நடந்துக்கிற... காலங்காத்தால கொழந்தையைப் போட்டு அடிக்கிற.. ம்..."

"பத்து வயசாவுது தடிமாட்டுக்கு... படுக்கையில் மூத்திரம் பெய்யுது... சூடு சொரணை இல்லாதவனை அடிச்சுத்தான் திருத்தணும் "

அவன் மீதிருந்த கோபத்தைத்தான் அவள் வேறுவிதத்தில் காட்டுகிறாள்.

பெரியதாக ஒரு பிசினஸ் முடிந்தால் எல்லாவற்றையும் சரியாக்கிவிடலாம். இவனும் நாலுபேரைப் பார்ப்பதும் அலைவதுமாகத்தான் இருக்கின்றான். ஒன்றும் படியவில்லை.

கற்பகம் வேட்டி சட்டை வெளுத்து வைத்திருந்தாள். தொழிலுக்கான சீருடை அது. அவன் ஓர் புரோக்கர். புறப்பட்டான். அவன் போவதைக் கவலையோடு பார்த்து நின்றாள் கற்பகம். ரொம்பவும் மூஞ்சியைக் காட்டிவிட்டோமோ என்று வருந்தினாள். அவளும்தான் என்ன செய்வாள்? வாங்கின கடனுக்குப் பதில் சொல்வதும், அரிசி பருப்புக்கு அல்லல் படுவதும் அவள்தானே?

நிறையத் தொழில்கள் செய்து அலுத்தபின்தான் கபாலி ரியல் எஸ்டேட் புரோக்கராக மாறினான். ஆரம்பம் நன்றாகவே இருந்தது. மாதத்தில் ஒன்று ரிஜிஸ்தர் ஆகும். இடையிடையே வாடகை வீடும் பார்த்துக் கொடுப்பான். குடும்பம் மகிழ்ச்சியில் திளைத்தது.



ஆனால் இப்போது? எல்லாம் தலைகீழ். ஏதாவது வேலைக்குப் போகலாமென்றால் எந்த வேலைக்குப் போவது? நாற்பதைத் தாண்டிய, அதிகம் படிப்போ, தொழிலோ தெரியாதவனுக்கு எங்கு வேலை கிடைக்கும்? செக்யூரிட்டி வேலைக்காவது போயா என்றாள் அவன் மனைவி. கொசுக்கடியிலும், குளிரிலும் தூங்காமல் கொட்ட கொட்ட விழித்திருக்க அவனால் இயலாது. மேலும் அதில் உடல் பாழாவதைத் தவிர, பெரிசா என்ன முன்னேற்றம் வந்திருக்கும்?

கபாலி பலவாறு யோசித்துக் கொண்டே கலசத்தம்மன் கோயில் வந்தடைந்தான். தெருவில் நின்றவாறு கன்னத்தில் போட்டுக் கொண்டான். அம்மன் ஒரு காட்டுத் தேவதை. முப்பது வருஷத்துக்கு முன் இவன் சிறுவனாக இருந்தபோது இந்தப் பக்கமெல்லாம் மனித நடமாட்டமே இருக்காது. சுற்றிலும் புதர்கள் மண்டிக் கிடக்கும். ஒத்தையில் இந்தப் பக்கம் வர யாருக்குமே தைரியமிருக்காது. சொன்னால் யாரும் இதை நம்ப மாட்டார்கள். கான்கிரிட் கட்டிடங்கள் பெருகிவிட்டன. தற்போது மிஞ்சியிருப்பது ஆலமரமும், அம்மன் கோயிலும் மட்டும்தான். கோயிலின் பின்புறம் பிரம்மாண்டமாக உயர்ந்து நிற்கின்றது. அடுக்குமாடி குடியிருப்புகள். இதற்கு முன் அந்த இடம் பெரிய பள்ளமாகக் கிடந்தது. அந்தப் பள்ளத்தை மூன்று கோடிக்குப் பார்ட்டி கேட்டது. இவன்தான் மீடியேட்டர். வாழ்க்கையில் செட்டில் ஆகிவிடலாம் என்று கனவில் மிதந்தான். நிலத்துக்காரன் கொடுத்த தாய்ப் பத்திரத்தில் லிங்க் டாக்குமென்ட் சரியாக இல்லை. கேட்டதற்குத் தேடித் தருவதாக இழுத்தடித்தான். அவன் இரண்டு பேரிடம் பேசிக் கொண்டிருந்தது அதன் பிறகுதான் புரிந்தது. ஐந்து லட்சம் மேல் வைத்து வேறொரு பார்ட்டி முடித்துவிட்டது. அவனுக்குப் பெருத்த ஏமாற்றம். ஏறக்குறைய ஒரு வருஷ அலைச்சல். இவனுக்கு அதிர்ஷ்டமில்லை அவ்வளவுதான்.

விதியை நொந்தபடியே அவன் அரசமரத்தடிக்கு வந்தான். அங்குதான் எல்லா மீடியேட்டர்களும் கலந்து போனார்கள். டீக்கடைப் பெஞ்சில் குருசாமி உட்கார்ந்திருந்தார். கடை அவரோடதுதான். இவனை வரவேற்றார்.

"வாய்யா... கபாலி... ஏதாவது முடிச்சியா?"

இவன் உதட்டைப் பிதுக்கினான்.

பகல் பொழுது நாலு பேரோடு பேசிக் கொண்டிருப்பதில் கழிந்து விடுகிறது. ஓசியில் வயிற்றுப் பாட்டைக் கூட கவனித்துக்கொள்கிறான். பொழுது சாய்ந்து வீடு திரும்பும்போதுதான் மனம் பதற்றப்பட ஆரம்பித்துவிடுகிறது. பற்றாக்குறை கற்பகத்தைக் கொடிய மிருகமாக மாற்றிவிட்டது. சம்பாதிக்க வக்கில்லாத இவன் அவளை நிந்திப்பதில் அர்த்தமில்லை. அவள் காதில், மூக்கில் ஏதாவது விட்டு வைத்திருக்கின்றானா?

நடுத்தர வயது மனிதன் இவனை நெருங்கினான். "சார்... வாடகைக்கு வீடு வேணும். கிடைக்குமா" கபாலி பர பரப்பானான்.

பெஞ்சிலிருந்து எழுந்து நின்றான். "எவ்வளவு வாடகையில் எதிர்பார்க்கிறீங்க?"

"ஐயாயிரம்" "மாடி போர்ஷன் சரிவருமா?" "பரவாயில்லை"

கபாலி குருசாமியிடம் சொன்னான். "அஞ்சாவது தெரு வீடு இருக்கான்னு போன் பண்ணிக் கேளுங்க." குருசாமி வீட்டு உரிமையாளருக்குப் போன் போட்டு விசாரித்தார். "இருக்காம்.... போய்க்காட்டு"

கபாலி வீடு கேட்டு வந்தவரின் பைக்கில் ஏறிக் கொண்டான். போகும்போது ஒரு மாத வாடகை கமிஷனாகத் தர வேண்டும் என்பதை அவர் காதில் போட்டான். அவரும் சரியென்று தலையசைத்தார்.

கபாலிக்கு வாழ்க்கை ரொம்பவும் மகிழ்ச்சியாகப் பட்டது. ஒரு மாச சோற்றுப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம். குறிப்பிட்ட இடம் வந்ததும் வண்டியை நிறுத்தச் சொன்னான். கீழ் போர்ஷனில் வீட்டு உரிமையாளர் குடியிருந்தார். காலிங் பெல்லை அடித்ததும் கதவைத் திறந்து விசாரித்தவர் வீட்டுச் சாவியைக் கபாலியிடம் கொடுத்தார். அவன் கஸ்டமரை அழைத்துக் கொண்டு மாடியேறினான்.

"சார். சூப்பர் இடம். அருமையான தண்ணீர். காசு கொடுத்துத் தண்ணீர் வாங்க வேண்டாம். சுற்று வட்டாரத்தில் மூன்று பெரிய ஸ்கூல் இருக்கு. சூப்பர் மார்க்கெட் ஆஸ்பிட்டல் எல்லாம் பக்கத்திலேயே இருக்கு". வந்தவர் வீட்டை ஆராய்ந்தார்.

"எல்லாம் வாஸ்துப்படிதான் இருக்கு. இங்கு இருந்தவங்க எல்லாரும் சொந்தவீடு வாங்கிக்கினு போயிருக்காங்க. ராசியான வீடு".

எவ்வித ரியாக்ஷனும் காட்டாமல் "ஓ.கே. எதற்கும் மனைவியைக் கூட்டியாந்து காட்டிட்டுச் சொல்றேன்" என்றார்.

கபாலிக்குச் சப்பென்றிந்தது.

"சார், ஏதாவது டோக்கன் அட்வான்ஸ் தந்திடுங்க. இல்லேன்னா வீட்டை வேறு யாருக்காவது விட்டுடுவாங்க. இந்த ஏரியாவுல வீடு கெடைக்கிறது ரொம்ப கஷ்டம்."

"புரியுது. எனக்குப் பிடிச்சிருக்கு. இருந்தும் மனைவியைக் கேட்கணும். குடித்தனம் செய்யப் போறது அவங்கதானே? இன்னிக்கு சாயந்திரத்துக்குள்ள அவங்கள கூட்டியாந்து காட்டிடுவேன். சாயந்திரம் உங்களுக்குப் போன் பண்றேன். உங்க செல் நம்பரைக் கொடுங்க".

நம்பரைக் கொடுத்தான். அவர் வண்டியிலேயே அரசமரத்தடிக்குத் திரும்பினான். இரவு ஒன்பது மணி வரை அங்கேயே கிடந்தான். வீட்டு ஞாபகம் வயிற்றில் கலவரத்தை உண்டாக்கியது.

ஒருக்கலித்திருந்த கதவைத் திறந்தான். பிள்ளைகள் தாறுமாறாகப் படுத்திருந்தனர். மெதுவாக மூச்சுவிட்டபடி அடுப்படிக்குப் போனான் கபாலி. பசி. சோறும் ரசமும் இருந்தது. அள்ளிப் போட்டுக் கொண்டு கபக்கபக்கென்று விழுங்கினான். சாப்பிட்டுவிட்டுப் படுத்தான்.

அன்று வீடு பார்த்துவிட்டுப் போன மனிதன் அதன் பிறகு ஆளையே காணோம். ஒருவாரம் ஓடியது.

தற்செயலாக அந்த வீட்டுப் பக்கம் போனான். கண்கள் தாமாகவே மாடி வீட்டுப் போர்ஷனைப் பார்த்தன. மாடிப் போர்ஷனிலிருந்து இறங்கியவரைப் பார்த்ததும் திடுக்கிட்டான். இவனுக்குக் கமிஷன் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டுக் குடி வந்திருக்கிறார். மாடிப் போர்ஷனிலிருந்து இறங்கியவரைப் பார்த்துக் கேட்டான்.

"ஹலோ ஏங்கிட்டச் சொல்லாமக் குடி வந்திருக்கீங்க. நான்தானே உங்களுக்கு வீடு காட்டினேன். ஏங்கிட்ட சொல்லியிருக்கணும். கமிஷன் எங்கே?"

"ஐந்நூறு ரூபாய் தர்றேன். வாங்கிக்கினு போ. கத்தாதே."

கபாலிக்கு அவமானமாக இருந்தது. கோபம் உச்சந்தலைக்கு ஏறியது. "பிச்சையா குடுக்கிற. மரியாதையா ஒரு மாசத்து வாடகையைக் கொடு. இல்லேன்னா கதையே வேற."

ஒரு கட்டத்தில் கபாலியால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. முஷ்டியை மடக்கி ஓங்கி ஒரு பஞ்ச் வைத்தான். அவ்வளவுதான் அந்த ஆள் தடாலென கீழே சாய்ந்தான். கபாலி அந்த இடத்தைவிட்டு அகன்றான். ஓடினான் என்றுதான் சொல்ல வேண்டும். அரச மரத்தடிக்கு வந்து ஆசுவாசப்படுத்தினான். ஒரு மனிதனை அடிக்கிற வேகம் எங்கிருந்து வந்தது.

போலீஸ் ஜீப் அவன் அருகே வந்து நின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு



அதிகாலை 2 மணி. . .

இன்றைய நாளை
இயற்கை எழுத - இருக்கலாம்
இன்னும் நான்கு
மணி நேரங்கள்

விடிதலும் -
நேரம் கழிய மடியும்
அவ் விடியலும் - மாலை கவிழ்ந்து
இருளாவதும்
ஒரு நாளின் பயணங்கள்.

பிறப்பின் - பின்
வரும் ஒவ்வொரு
நாட்களிலும் -பயணிக்கும்
நாளின் பயணங்கள் -
விடிதலினதும் இருளினினதும்
இடையே
பயணம் -

இரவுகளில் உருவாகும்
கனவுகளில் முகிழ்க்கும் - எம்
வாழ்வு - நனவாகும்
பகல்கள்

அடைவுகள்
உயர்வுகள்
பெருமைகள்
இன்றேல்
தடக்கி விழுதல்
தடம்மாறிப் பயணித்தல்
தவிர்க்கப்படல்
என
நாளுடன் பயணிக்கும்
என் - வாழ்வு

நாளும் கழியும் -

வாழ்வென்பதே
மரணம் நோக்கிய
பயணம் தானோ!



மாயன்

## வீடு??

வீடு வேண்டு மையா - ஐயா,
வீடு வேண்டுமையா!
காடு போம் வரைக்கும் - இரண்டு
கண்கள் மூடு மட்டும், (வீடு)

கூடு விட்டு ஆவி - ஆமாம்,
குடியெழும்பு மட்டும் -
மேடு மேடென்றேறி - கொழுந்தை
மேய்ந்து வரும் எமக்கோர், (வீடு)

மலை பிளந்து பள்ளம் - அடடா,
மண் சரியுமட்டும் -
தலையில் கூடை மாட்டி - பளுவைத்
தாங்கும் எங்களுக்கோர், (வீடு)

ஏறி ஆயுமட்டும் - இலையை,
இறங்கி நிறுக்கு மட்டும்
ஆறி அமர்ந்திடாமல் - அங்கிங் (கு)
அலையும் எங்களுக்கோர், (வீடு)

தாமரைத் தீவான்
ஊச்சந்தீவு, கிண்ணியா.



## மீசை

- ப்ரியா -

இந்த
மீசை என்ன
இறக்கைகளா!
முளைத்தவுடன்
மனதை
பறக்கச் செய்கின்றனவே!



## பேராசை

இன்னும் இரண்டாண்டுகள்
ஆண்டே அநுபவிக்க...

ஆசை யாரை விட்டது
நம்பிய நம்மவரையும்
ஆளவிடாது தாமே
எல்லாமென்ற மமதையில்..

நடந்தும் முடிந்து போனது
நாட்டில் நடந்த சோகம்
ஆசை பேராசையானதால்
வந்ததே மாற்ற மொன்று

மற்ற நாயகர்களுமினி
பேராசை படாதிருக்க. . .

திருமலை சுந்தா

## காணி நிலம் வேண்டும்

காணி நிலம் வேண்டும்
காணி நிலம் வேண்டும் -இம்
மாநிலம் சிறக்க யாவர்க்கும் -
காணி நிலம் வேண்டும்
காணியுழு மேழிசுழி மக்கள் சேற்றிலிறங்கி
மேதினியில் சோறு படைக்க -
காணி நிலம் வேண்டும்

தாய்மண்ணை முத்தமிட்டு
தவழ்ந்து விளையாட
காணி நிலம் வேண்டும்
தந்தையடி யொற்றி
தரங்கெட்டிடா வாழ்வு வாழ
காணி நிலம் வேண்டும்

பயன்தரு பாடம் பல பயின்றிட
காணி நிலம் வேண்டும்
பயில் கலையை பயனுள்ளதாக்க
காணி நிலம் வேண்டும்

இல் வாழ்வில் இனிதே வாழ
காணி நிலம் வேண்டும்
எல்லோர் வாழ்விலும் வளங்கள் பலசேர
காணி நிலம் வேண்டும்

மாற்றான் அடிமை விலங்கு அறுத்தெறிந்து
வாழ
காணி நிலம் வேண்டும்
ஏற்றமுடன் எம் நாட்டை உயர்விக்க
காணி நிலம் வேண்டும்.

ஸதீஸ்

# திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் திருக்கோணேஸ்வரம்

வரலாற்றுப் பக்கம்

கடந்தவார தொடர்ச்சி.. ...





அவர் நேரில் தரிசித் திராத திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் சூழலை தலயாத் திரை வந்து சென்ற அடியவர்கள் மூலம் அறிந்துகொண்டு அந்த அழகினை தனது மனக் கண்களால் பருகி 'குரைகடல் ஓதம்' என்று ஆர்பரிக்கும் கடலினை விழித்து அங்கு வீற்றிருக்கும் இறைவனின் அழகினைப் பாடியிருக்கிறார் சம்பந்தர்.

தலங்களின் மேல் பதிகங்கள் பாடுவதின் மூலம் சைவசமயக் கருத்தக்களை இலகுவாக பக்தர்களிடம் கொண்டு சேர்க்க நினைத்த ஞானசம்பந்தர் இதற்கு வலுச்சேர்க்கும் முகமாக தமிழ் நாட்டுத் தலங்களின் வரிசையில் கடல்கடந்த ஈழத்துச் சிவத் தலங்களான திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் என்பனவற்றை இணைத்துக் கொண்டார். இச்செயல்முறையானது கடல் கடந்த தேசங்களில் சைவசமயம் செல்வாக்குச் செலுத்த உறுதுணை புரியும் என அவர் நம்பினார். அத்துடன் அவருக்குப் பின்வந்தவர்களுக்கும் வழிகாட்டினார்.

ஞானசம்பந்தரைத் தொடர்ந்து அவர் சமகாலத்தவரான 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் (அப்பரடிகள்) 'தெக்காரும் மாகோணத்தானே' என்றும், 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'மறைக்காட்டானே திருமாந்துறையாய் மாகோணத்தானே' என்றும், 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் 'ஆழிபுடைசூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில் மன்னு திருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார்' எனப் பெரியபுராணத்திலும், 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் 'மன்னு திருக்கோணமாமலையின் மாதுமை சேர் பொன்னே கோணேசப்புரத்தானே' என்றும், 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் 'திருக்கோணாமலை தலத்தாறு கோபுர நிலைக்குள் வாயினில் கிளிப்பாடு பூதியில் வருவோனே' என்றும், 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குருநமச்சிவாய தேசிகர் 'கோணமா மலையில் வாழும் கோதிலா ஆதியே நீ' என்றும் போற்றிப்பாடிட முன்னுதாரணமாக இருந்தவர் ஞானசம்பந்தர்.

இதைத் தொடர்ந்து சம்பந்தர் தான் பாடிய பதிகங்களின் எட்டாவது பாடல் இராவணன் பற்றிய குறிப்பினை கொண்டிருக்கும் வகையில் அமைத்திருக்கிறார். இராவணன் தமிழ்வீரன் என்பதும், அவன் சிறந்த சிவபத்தனாகத் திகழ்ந்தான் என்பதும் புராணக் கதைகள் வாயிலாக நமக்குக் கிடைக்கும் செய்தியாகும். இப்புராணக் கதை மரபினை பதிகங்களில் பயன்படுத்தும் வழக்கினை ஆரம்பித்து வைத்தவர் சம்பந்தப் பெருமானாகும். இது பிற்காலத்தில் நாயன்மார்கள் தமது பாடல்களில் இவற்றை இணைத்துக் கொள்ள பெரும் உதவியாக இருந்தது.

சம்பந்தர் தமது பதிகங்களில் கையாண்ட பொது மரபினையே கோணேஸ்வர பதிகத்திலும் கையாண்டள்ளார் என்பதற்கு திருஆலவாய் திருநீற்றுப் பதிகம் உதாரணமாகும்.

தொடரும்.....

வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நிலத்திற்குத் திரும்புவது தான் எங்களுக்கு சுதந்திரம்

## சம்பூர் மக்களின் வாழ்க்கை முறையும் குழந்தைகளின் துன்பநிலையும்



இன்றைக்கு எத்தனை ஆண்டுகளாய் அகதிமுகாங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? வாழ்க்கை என்பதே துயரமும் கொடுமையும் இழப்பும் நிறைந்ததாய் இருக்கும்போது எங்களுக்கு என்ன சுதந்திரதினம் என்று கேள்வி எழுப்புகிறார் சம்பூர் அகதி ஒருவர்.

இன்று திரும்புவோம் நாளை திரும்புவோம் என்ற நம்பிக்கையில்தான் சம்பூர் முகாம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் பூர்வீக நிலத்தை தவிர சொர்கத்திலும் குடியேற மாட்டோம் என்று தமது வாழ்வையே இந்த மக்கள் போராட்டமாக்கியுள்ளனர்.

கடந்த 2006ஆம் ஆண்டில் சம்பூரை இலங்கை அரச படைகள் கைப்பற்றியபோது அந்தக் கிராம மக்கள் அகதி ஆனார்கள். அன்றிலிருந்து இன்றுவரை மூதூரில் உள்ள அகதி முகாங்களில் அந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எங்கள் பிள்ளைகள் குழந்தைகளாயிருந்தபோது முகாமிற்கு வந்தோம். அதற்குப் பிறகு இரு குழந்தைகள் முகாமில் பிறந்தனர். என் வாழ்வே அகதிமுகாமில் தான் கழிந்தது. இப்பொழுது எங்கள் குழந்தைகள் அவர்களின் ஊரை அறியாது வளர்கின்றனர் என்கின்றார் மல்லிகா என்ற தாயார்.

சம்பூர் மக்களைப் போல வலி வடக்கு மக்கள் சபாபதிப்பிள்ளை முகாமிலும் வவுனியாவில் மெனிக்பாமிலும் பூந்தோட்டத்திலும் மக்கள் அகதி முகாங்களில் வசிக்கின்றனர். இதனைத் தவிர பலர் வீடு திரும்பாமல் வெவ்வேறு இடங்களில் வசிக்கின்றனர்.

எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும் உரிமை வேண்டும் என்று எங்கள் பிள்ளைகள் போராடச் சென்றனர். இறுதியில் நாங்கள் வாழ்ந்த நிலத்தையும் பறித்து போராடச்சென்ற எங்கள் பிள்ளையையும் கொண்டு போய்விட்டார்கள் என்கிறார் பட்டித்திடல் அகதிமுகாமில் வசிக்கும் முதியவர் ஒருவர்.



எங்கள் சொந்த நிலத்திற்குத் திரும்பும் அந்த நாள்தான் எங்களுக்கு சுதந்திர தினம் என்கின்றனர் சம்பூர் அகதிகள். ஊர் செல்லாமல் வீடு செல்லாமல் வாழும் எங்களிடம் சுதந்திரம் குறித்து கேட்டால் எதைச் சொல்லுவோம்? என்று கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்.

புதிய அரசு எங்களை எங்கள் சொந்த நிலத்தில் வாழ அனுமதிக்கும் என்ற நம்பிக்கையைத் தவிர வேறு எதுவும் தம்மிடம் இல்லை என்று கூறும் சம்பூர் மக்கள் தமது சொந்த இடத்தை தவிர சொர்க்கத்திலும் குடியேற மாட்டோம் என்றும் அழுத்தமாக கூறுகின்றனர்.



# சிறிலங்காவை எதற்காக அரவணைக்க வேண்டும்?

## ஓர் அமெரிக்கப் பார்வை

அமெரிக்க -சிறிலங்கா உறவுகளை மீளவும் நிறுவுவதற்கான திட்டங்கள் எதனையும் அமெரிக்கா முன்னெடுக்காது விட்டால், 21 மில்லியன் மக்களைக் கொண்ட கேந்திர முக்கியத்துவம் மிக்க இலங்கைத் தீவுடன் நெருக்கமான உறவைப் பேணுவதற்கான வாய்ப்பை இழக்கும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியேற்படும்.

இவ்வாறு The Wall Street Journal இதழில், மூத்த ஆய்வாளர் லிசா கேட்டிஸ் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க மற்றும் பாதுகாப்புத் திணைக்கள முன்னாள் உயர் அதிகாரிகளான ரிச்சர்ட் ஆர்மிரேஜ் மற்றும் காரா பியூ ஆகியோருடன் இணைந்து லிசா கேட்டிஸ் எழுதியுள்ள இந்தக் கட்டுரையை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

சிறிலங்கா கடந்த ஆண்டுகளில் அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாட்டை முதன்மைப்படுத்தி செயற்பட்டது மிகவும் அரிதாகும். ஆனால் கடந்தமாத ஆரம்பத்தில் சிறிலங்காவில் இடம்பெற்ற அதிபர் தேர்தலின் பெறுபேறானது ஆச்சரியப் படத்தக்க வகையில் அமைந்ததன் பின்னர், அமெரிக்கா தொடர்பான வெளியுறவுக் கோட்பாடு சிறிலங்காவின் நிகழ்ச்சி நிரலில் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

பத்து ஆண்டுகளாக அதிகாரத்துவ மற்றும் ஊழல் நிறைந்த ஆட்சியை நடாத்திய சிறிலங்கா அதிபர் தற்போது நடந்து முடிந்த அதிபர் தேர்தல் மூலம் தோற்கடிக்கப்பட்டமையானது ஒரு அதிர்ச்சி தரும் விடயமாகும்.

தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் சிறிலங்காவில் மகிந்த ராஜபக்ச ஒரு குடும்ப ஆட்சியை நிலைநிறுத்தியிருந்தார். இவரது ஆட்சிக்காலத்தின் போது இவருக்கு எதிராக ஒரு பலமுள்ள அரசியற் கட்சி செயற்படவில்லை. உள்நாட்டுப் போரின் பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீளிணக்கப்பாடு மற்றும் பொறுப்புக்கூறுதல் போன்றவற்றையும் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச மேற்கொள்ளவில்லை.

இந்த நாட்டின் முக்கிய பொறுப்புக்களை ராஜபக்சவின் குடும்ப அங்கத்தவர்கள் தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்த அதேவேளையில் அதிபர் தேர்தலின் பெறுபேறானது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ராஜபக்சவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலரான மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான எதிரணியை ஆதரித்து மக்கள் வாக்களித்தனர். சிறிலங்கா அதிபர் கொண்டுள்ள நிறைவேற்று அதிகார முறைமையை மட்டுப்படுத்தி, சுதந்திரமான செயற்பாட்டிற்கு வழிவகுக்கக்கூடிய வகையில் நாட்டின் அரசியல் யாப்பில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதாக சிறிசேன தனது தேர்தல் பரப்புரையில் குறிப்பிட்டிருந்தார்.

சீனாவுடன் சிறிலங்கா கொண்டிருந்த மிகவும் நெருக்கமான உறவில் மிகவும் எச்சரிக்கையுடன் நடப்பதாகவும் வாக்களித்தார்.

சிறிலங்காவில் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள அமைதி நிலையை கவனிக்கத் தவறக்கூடாது. யாருடன் இணைந்து நாட்டை முன்னேற்ற முடியும் என்பது இலங்கையர்களின் முன்னுள்ள தற்போதைய தெரிவாகும்.

சீனா மட்டும் சிறிலங்காவின் நட்பு நாடாக இருக்க வேண்டும் என்பதல்ல. சிறிலங்காவில் தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசாங்கத்துடன் தொடர்பைப் பேணுவதற்கான நகர்வுகளை அமெரிக்கா விரைந்து முன்னெடுக்க வேண்டும். இதன் முதற்கட்டமாக, சிறிலங்காவின் அதிபர் சிறிசேனவை வொசிங்டனுக்கு அழைத்துப் பேச்சுக்களை நடத்த வேண்டும். அதாவது இன மீளிணக்கப்பாடு, சிறிலங்காவில் மீண்டும் ஜனநாயக நிறுவகங்களை நிறுவுதல், சிறிலங்காவின் வெளியுறவுக் கோட்பாட்டை பரந்துபடச் செய்தல் போன்றன உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பாக அமெரிக்கா பேச்சுக்களை நடத்த வேண்டும்.

மிகவிரைவாக அமெரிக்கா சிறிசேனவைத் தனது நாட்டிற்கு வருமாறு அழைப்பதன் மூலம் சிறிலங்கா அரசாங்கத்துடன் அமெரிக்கா புதியதொரு அத்தியாயத்தை ஆரம்பிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் கேள்விகளுக்கு சிறிலங்கா பதிலளிக்க வேண்டும் என உந்துதலளிப்பதற்குமான ஒரு வாய்ப்பாகக் காணப்படும்.

சிறிலங்காவில் அமெரிக்கா தனது வர்த்தகச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஒரு தக்கதருணமாக இது காணப்படுகிறது. தென்னாசியாவில் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான சிறந்த சூழலைக் கொண்ட நாடாக சிறிலங்கா காணப்படுவதாக Heritage Foundation-Wall Street Journalஇன் 2015ம் ஆண்டிற்கான பொருளாதார சுதந்திரத்திற்கான சுட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறிலங்காவின் ஆடை உற்பத்தியானது தற்போது அதிகரித்துள்ளது. அமெரிக்கா ஏற்கனவே சிறிலங்காவின் முக்கிய வர்த்தகப் பங்காளியாகக் காணப்படுகிறது. ஆனால் அமெரிக்காவானது சிறிலங்காவின் முன்னைய போர் வலயமான வடக்கு கிழக்கில் அடிக்கட்டுமானத் திட்டங்களுக்கு முதலீடு செய்வதன் ஊடாக தனது பொருளாதார ஈடுபாட்டை மேலும் அதிகரிக்க முடியும்.

நாட்டின் ஜனநாயகச் செயற்பாடுகளில் சிறிலங்கா இராணுவத்தினர் பங்குபற்றுவதற்குத் தகுதியற்றவர்களாவர். ஆனால் இது தொடர்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும்.

இதற்காக அமெரிக்காவானது சிறிலங்காவுடன் இராணுவ சார் தொடர்புகளை மீளவும் நிலைநிறுத்துவது தொடர்பாக கருத்திற்கொள்ள வேண்டும். சிறிலங்காவுடன் இத்தகைய இராணுவ சார் தொடர்புகளை அமெரிக்கா பேணிய போதிலும் 2008ல் சிறிலங்காவால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்களை அடுத்து இது குறைக்கப்பட்டது.

யப்பான், இந்தியா போன்று அமெரிக்காவும் சிறிலங்காவின் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதுடன் அடிப்படை அரசியற் கோட்பாட்டு நகர்வுகளில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.

சிறிலங்காவின் புதிய தலைமையானது ராஜபக்சவின் சீன ஆதரவுக் கோட்பாடுகளை நீக்குவதற்கான தனது நல்லெண்ண சமிக்கையைக் காண்பித்துள்ளது. இந்நிலையில், அமெரிக்க, இந்திய மற்றும் யப்பான் அரசாங்கங்கள் சிறிலங்காவுடன் இணைந்து உறுதியான நகர்வுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

சிறிலங்காவின் மனித உரிமைகள் மற்றும் தேசிய மீளிணக்கப்பாடு போன்றவற்றை அமெரிக்க அரசாங்கம் முன்னுரிமைப்படுத்தும் அதேவேளையில், சிறிலங்காவின் புதிய அரசாங்கம் தனது நாட்டில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவது உள்ளடங்கலாக பல்வேறு மாற்றங்களை அமுல்படுத்துவது தொடர்பில் அமெரிக்க அரசாங்கம் மூலோபாயப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சிறுபான்மை மக்களின் அவாக்களைத் தீர்த்து வைப்பதாக சிறிசேன வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆனால் இவர் இதனைச் செயலாற்றுவதற்கான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், ஜனநாயகத்தை மீளநிறுவுதல் மற்றும் சட்ட ஆட்சியை நிலைநிறுத்துதல், வர்த்தக மற்றும் பிராந்திய பொருளாதார ஒருமைப்பாட்டை நிறுவுதல், இந்திய-பசுபிக் பிராந்திய நலனைப் பாதுகாத்தல் போன்றன உள்ளடங்கலாக அமெரிக்கா தனது நலன்களை அடைந்து கொள்வதற்காக சிறிலங்காவுடன் நெருங்கிய உறவைப் பேணுவதற்கான நேரம் இதுவாகும்.

நாட்டில் ஜனநாயகத்தை மீளவும் நிறுவுவதற்கான மிகப்பெரிய நகர்வை இலங்கையர்கள் முன்னெடுத்துள்ளனர். சிறிசேனவின் தலைமையின் கீழ் சிறிலங்காவானது சீனாவால் இந்திய மாக்கடலில் மேற்கொள்ளப்படும் 'முத்துமாலைத்' திட்டத்தை நீக்குவதற்கான நகர்வை முன்னெடுத்துள்ளது.



www.puthinappalakai.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் பையன்

INFOMATION TECHNOLOGY

## MOBILE

### ஐபோன் 7 எப்போ வரும்?



பல்வேறு நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு ஸ்மார்ட் போன்களை அறிமுகப்படுத்தினாலும், iPhone க்கு இருக்கும் மவுசு குறையாது என்று தான் சொல்ல வேண்டும்.

இதற்கு ஏற்றாற் போல் iPhone 7 வெளியிடும் திகதி மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது. வழக்கமாக iPhone-கள் செப்டம்பர் மாதமே வெளியாகும் என்பதால், இந்த ஆண்டும் செப்டம்பர் மாதம் வெளியாகலாம் என தெரிகிறது.

மேலும் 4.7 இன்ச் டிஸ்ப்ளேயுடன், சிறப்பான கமெராவுடன் வெளிவரும். இதேபோன்று சார்ஜ் செய்வதிலும் புதிய தொழில்நுட்பம் அறிமுகமாகலாம்.

### WhatsApp இல் குரல்வழி செய்தி

WhatsApp-ல் குரல்வழி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான வசதி சில பயனர்களின் அப்பிளிக்கேஷன்களில் தரப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதன்படி பயனர் ஒருவர் குறித்த வசதியினை உடைய WhatsApp-ன் ஸ்கிரீன் ஷாட்டினை வெளியிட்டிருக்கின்றார்.

இந்த ஸ்கிரீன் ஷாட்டின்படி முன்னைய WhatsApp இனை விடவும் வித்தியாசமான பயனர் இடைமுகத்தினை கொண்டமையும், Calls, Texts மற்றும் Contacts டேப்கள் உள்ளடக்கப் பட்டுள்ளமையும் தெளிவாக தெரிகின்றது.

### அப்பிள் தேடல்




உலகின் முன்னணி தேடுபொறியாக திகழும் கூகுளிற்கு பதிலாக Apple Search எனும் தேடுபொறியை அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கணினிகள் மற்றும் மொபைல் சாதனங்களில் செயற்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுவரும் இந்த தேடுபொறியினை ஒரே நேரத்தில் பல மில்லியன் கணக்கான பயனர்கள் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சில குறுக்குச் சாவிகள்

இணையப் பாவனைக்கு பயன்படுத்தப்படும் உலாவிகளில் மிக வேகமாக பணிபுரிவதற்கு குறுக்கு விசை சாவிகள் மிகவும் உதவிகரமாக இருக்கின்றன. அவற்றுள் அதிகம் பயன்படுத்தப்படும் சில குறுக்கு விசை சாவிகள் இங்கே தரப்பட்டுள்ளன.

Alt + D - Cursor இனை Address Bar இற்கு கொண்டு செல்வதற்கு
Ctrl + + or - எழுத்துருக்களின் அளவை பெருப்பித்தல் மற்றும் சிறிதாக்குதல்
Ctrl + 0 - பெருப்பித்த அல்லது சிறிதாக்கிய எழுத்துருக்களை பழைய நிலைக்கு கொண்டு செல்லல்
Backspace or Alt + Left Arrow - முன்னைய இணைப் பக்கத்திற்கு செல்வதற்கு
F5 - இணையப் பக்கம் ஒன்றினை மீண்டும் தோற்றுவிப்பதற்கு
F11 - இணைப் பக்கத்தினை முழுத்திரையில் பார்வையிடுதவற்கு
Ctrl + B - Bookmark
Ctrl + F - Find Box இணை திறந்து Search செய்வதற்கு

### மீள்தன்மை தொடுதிரை



LG நிறுவனமானது ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் டேப்லட்களில் பயன்படுத்தக்கூடிய மீள்தன்மை கொண்ட புதிய OLED தொடுதிரையினை உருவாக்கியுள்ளது. இது சாதாரண கிளாஸ் திரைகளைப் போன்று துல்லியம், வர்ணங்களை உருவாக்கும் திறன் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

### செல்பி - அப்ளிகேஷன்

அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் செல்ஃபி வீடியோக்கள் மூலமாக மனநிலையை அறிந்து கொள்ளும் புதிய அப்ளிகேஷன் ஒன்றை உருவாக்கியுள்ளனர். சமூக வலைதளங்களில் பதிவேற்றும் செல்ஃபி வீடியோவை ஆய்வு செய்து அதை பதிவேற்றிய ஆண் அல்லது பெண்ணின் மன நிலையை தெளிவாக கூறுகிறது.

இந்த ஆப், கணனி மற்றும் போன் பயன்படுத்துகையில் நமது நடத்தைகளை தொடர்ந்து உற்று நோக்குகிறது. நமது நெற்றியில் ஏற்படும் வண்ண மாற்றங்கள், இதயத்துடிப்பு, கண் இமைகளின் துடிப்பு, தலையின் அசைவு, டிவிட்டரில் வெளியிடும் டிவிட்டுகள், மவுஸ் ஸ்க்ரோல் செய்யும் வேகம் போன்றவற்றையும் கண்காணித்து உங்கள் மனநலம் எவ்வாறு உள்ளது என்று தெளிவாகச்சொல்கிறது.

## OTHER

### முழுப்பணியும் ரோபோவால்



ஹோட்டல் ஒன்றினை முற்றுமுழுதாக ரோபோக்களே நிர்வகிக்கும் வகையில் ஜப்பானில் வடிவமைத்து வருகின்றனர். இந்த ஹோட்டல் ஆனது இந்த வருடம் ஜுலை மாதம் 17ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இங்கு வரும் விருந்தினர்கள் முக அடையாளத்தைப் பயன்படுத்தியே அவர்களுக்கான அறையின் கதவுகளை திறக்க வேண்டும்.

ஆரம்பத்தில் இங்கு 72 வரையான அறைகள் மட்டுமே பாவனைக்கு விடப்படும் எனவும், ஒரு இரவு தங்குவதற்கு 60 டொலர்கள் வரை அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கீபோர்டில் கணினி

வெளி அமைப்பை முற்று முழுவதும் கீபோர்ட் வடிவிலமைந்த கணனி சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. OneBoard Pro+ எனும் இச்சாதனமானது அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாகக் காணப்படுகின்றது.


இதில் Rockchip RK3288 ARM Cortex-A17 Quad-Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது. இவை தவிர WiFi, Bluetooth வயர்லெஸ் தொழில்நுட்பங்களையும் உள்ளடக்கிய இதன் விலையானது 300 டொலர்கள் ஆகும்.



### விண்வெளி கோப்பை

பூமியில் உள்ள ஈர்ப்பு சக்தி காரணமாக குவளைகள் மற்றும் ரியூப்களில் உள்ள உணவுப் பொருட்களை இலகுவாக உள்ளெடுப்பது சாத்தியமானதாகும். ஆனால் விண்வெளியில் இவ்வாறான உணவுகளை உள்ளெடுப்பதற்கு மிகவும் சிரமம் ஆகும்.

இதனை தவிர்க்கும் முகமாக பல்வேறு ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு அங்கமாக விண்வெளி வீரர்கள் இலகுவாக பயன்படுத்தக்கூடிய தேநீர் கோப்பை உருவாக்கப்பட்டுள்ளது.



## குறுக்கெழுத்து புதிர் 047

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 12 | | ■ | 13 | 2 | 14 | |
| | ■ | 3 | | | | | | ■ |
| | ■ | | ■ | ■ | | 4 | | |
| 5 | | 15 | | | 16 அ | ■ | 6 | |
| 7 | | | ன் | 17 | | | | 18 |
| | 19 | | ■ | | | 20 | | |
| ட | | | ■ | | ■ | ய் | | |
| | | | ■ | | ■ | 8 | | |
| 9 | | | 10 | | 11 | | | |

### இடமிருந்து வலமாக

1. விற்று வாங்குதலைக் குறிக்கும்
2. ஆட்கொள்ளப்படுதல்
3. தலை வணங்காக் குணம்
4. சிறு குரவியில் பெயர்
5. அள்ள அள்ளக் குறையாதது - குழம்பியுள்ளது
6. ஒரு பக்கம் மட்டும் கடல் சேர்ந்த இடம்
7. ஆண் இனத்தைக் குறிக்கும் சொல்
8. வேலையற்று இருப்பவன்
9. பாகிஸ்தானிய நகரம்
10. செருக்கு
11. வயிற்றின் உதவியுடன் வாசிக்கும் வாத்தியம்
12. அடிக்கப் பயன்படும்
13. ஆயர்பாடியின் அழகன்

### மேலிருந்து கீழாக

1. நல்ல மணம்
2. வெட்டிப்பேச்சும் அடிதடியும்
5. இந்தியாவின் மன்னர் பரம்பரைகளில் ஒன்று
12. தொழிலின் பெயர்
13. ஆகாயம்
14. சூதாட்டத்தில் தலைசிறந்தவன்
15. மரணத்தின் பின் அடைய விரும்புவது
16. இரத்தம் குடிக்கும்
17. கரும்பலகையின் எழுத்தாணி
18. ஆசீர்வதிக்கும் அரிசியும் மஞ்சளும் சேர்ந்த கலவை
19. ஊடலின் பின் வரும்
20. அன்னை பூமியை இப்படியும் அழைக்கலாம்

***விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :***
***மலைமுரசு. இல - 159து.***
***கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

### புதிர் 046 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 12 த | ர் | 13 ம | ம் | ■ | 2 ல் | ட | 14 க |
| 3 வி | டு | த | லை | ■ | ■ | ■ | 15 க | ட |
| 4 சு | 16 வா | 5 தி | 17 ரு | 18 மா | 19 வ | ள | வ | ன் |
| ■ | னி | ■ | ■ | வை | தே | 20 கி | ள | 21 வி |
| 6 பு | லை | ய | ன் | சே | தை | 7 து | ம் | பி |
| ■ | ■ | ■ | ■ | னா | ■ | த் | ■ | சி |
| 8 ச | னா | 22 தி | 10 ப | தி | ர | ள் | ■ | ங் |
| ன் | ■ | ப் | 9 ப | ரா | ச | க் | தி | ■ |
| னி | ■ | பு | ■ | 11 சா | த் | தா | ன் | ■ |

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:

*செல்வன். பிரதீஸன்*
*அலஸ்தோட்டம், திருகோணமலை*

*திருமதி. என். கந்தையா*
*சினேக்லேன், திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## "ஆம்பள" திரை விமர்சனம்
### இயக்குனர் சுந்தர்.சியின் விஷால், ஹன்சிகா நடிக்கும்

பிரிந்த குடும்பத்தை சேர்த்து வைக்கும் தமிழ் சினிமாவின் 75 வருட பாரம்பரிய கதை தான். இதை சுந்தர்.சி அவர்களே பல படங்களில் கையாண்டுள்ளார். விஷாலுக்கு மூன்று அத்தைகள், அவர்கள் எல்லோருக்கும் ஒரு பொண்ணு, அந்த பெண்ணை தான் நீ திருமணம் செய்ய வேண்டும் என பிரபு கட்டளையிடுகிறார். அண்ணன், தம்பி என ஒரு பட்டாளத்துடன் தன் ஊருக்கு கிளம்புகிறார் விஷால். அங்கு தன் அத்தைகளுக்கு தெரியாமல் அத்தை பெண்களை கடத்த நினைக்கும் விஷாலின் முடிவு விபரீதமாகிறது. இதை தொடர்ந்து தன் அத்தை பெண்களை விஷால் பிரதர்ஸ் குருப் கைப்பிடித்ததா? என்பதே மீதிக்கதை.

நடிகர், நடிகைகளின் பங்களிப்பு ஆம்பள என்ற தலைப்பிற்கு ஏற்றார் போல் விஷால் மிரட்டுகிறார். ஹன்சிகா வழக்கம் போல் என்று சொல்வதை விட வழக்கத்திற்கு மாறாக கூடுதல் கவர்ச்சி காட்டியிருக்கிறார். சந்தானம் வரும் காட்சிகளில் கலகலப்பிற்கு பஞ்சமே இல்லை, தனக்கு கொடுத்த வேலையை கலக்கலாக செய்து கொடுத்துள்ளார். அதிலும் தன் வழக்கமான கவுண்டர் ஸ்டைலில் 'காவி டிரஸ் போட்டவன் எல்லாம் கலர் கலரா பிகரை கரெக்ட் பண்ணும்போது காக்கி சட்டை போட்ட நான் கரெக்ட் பண்ணக்கூடாதா?' என கேட்கும் இடத்தில் செம கைத்தட்டல். அத்தை பெண்களை பார்ப்பதா? அல்லது அத்தைகளையே பார்ப்பதா? என ரம்யா கிருஷ்ணன், கிரண் என்று சுந்தர்.சி செம்ம விருந்து வைத்திருக்கிறார். ஒளிப்பதிவு மிகவும் கலர்புல்லாக இருக்கிறது. பார்த்து கசந்து போன திரைக்கதை.யூகிக்கும் அடுத்தடுத்த காட்சி. மொத்தத்தில் இந்த ஆம்பள இன்னும் கொஞ்சம் கம்பீரமாக இருந்திருக்கலாமோ? என கேட்க வைக்கிறது.



## பிரியாணியும் ரத்த தானமும்

அஜித் தனது ரசிகர் மன்றத்தை கலைத்தும் ரசிகர்கள் அவரின் மீதுள்ள தங்கள் அன்பை மாற்றிக்கொள்வதில்லை. தங்களது ரசிகர்மன்றத்தின் மூலம் அஜித் படம் ரிலீஸாகும் போது பால் அபிஷேகம் போன்றவற்றை செய்து வருகின்றனர். ஆனால் பெங்களூரில் உள்ள ரசிகர்கள் என்னை அறிந்தால் படம் ரிலீசானதை தொடர்ந்து ரத்த தானம் வழங்கியுள்ளனர். மேலும் திரையரங்கு முன்பாக படம் பார்க்க வந்த ரசிகர்களுக்கு பிரியாணியும் வழங்கி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

## பின்னால் முத்தமிட்ட தனுஷ்



தனுஷ் அமிதாப் பச்சன் கூட்டணியில் அடுத்த மாதம் வெளிவரவிருக்கும் படம் ஷமிதாப். இப்படத்தின் ட்ரைலர் மற்றும் பாடல்கள் சில தினங்களுக்கு முன் வெளிவந்தது. இதில் தனுஷ், அக்ஷராவிற்கு உதட்டில் முத்தம் கொடுக்க வர, அவர் தன் பின் பகுதியில் முத்தம் கொடுக்க சொல்வார், உடனே தனுஷும் அந்த இடத்தில் முத்தம் கொடுப்பார். தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரை இப்படி நடிக்க வைக்கலாமா? என்று இயக்குனரிடம் கேட்டால் 'படத்துடன் அந்த காட்சியை பார்க்கும் போது உங்களுக்கே தெரியும்' என கூறியுள்ளார்.

## திரிஷா அதிர்ச்சியில்



ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணியின் தூதராக இருந்த த்ரிஷாவுக்கு அந்த அணியையே வாங்க ஆசை வந்ததாகவும், அவருக்காக வருண் மணியன் சென்னை அணியை வாங்க இருப்பதாகவும் செய்தி வெளியானது. இதனையடுத்து வருண் மணியனுக்கு தினமும் தொலைபேசியில் கொலை மிரட்டல்கள் வருகிறதாம். இது தொடர்பாக வருண்மணியன் தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். வருண் மணியனுக்கு வரும் கொலை மிரட்டல்களால் த்ரிஷா அதிர்ச்சி அடைந்திருப்பதாக கூறப்படுகிறது.

## என் ரோல் மாடல் ஸ்ருதி தான்



கமல் மகள்கள் ஸ்ருதிஹாசன், அக்ஷராவை அடுத்து அதே வீட்டில் இருந்து களமிறங்குகிறார் கவுதமியின் மகள் சுப்புலட்சுமி. இவர் நடிப்பு, நடனம் போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்று ஹீரோயினுக்கு ஏற்ற தகுதியுடன் தயாராக உள்ளாராம். அக்காமாரைப் பார்த்து சுப்புவுக்கு தானும் நடிக்க வேண்டும் என்கின்ற ஆசை வந்துள்ளதாம். "ஸ்ருதிஹாசனை உன்னுடைய ரோல் மோடலாக ஏற்றுக்கொண்டால், உனக்கு சினிமாவில் நிச்சயம் வெற்றி" தான் என கவுதமி வாழ்த்தியதை அடுத்து தன் ரோல் மாடல் அக்கா தான் என அனைவரிடமும் கூறி வருகின்றாராம் சுப்பு. இவர் எப்போது இறங்குவாரோ தெரியவில்லையே!

## மார்க்கட் விழுந்திருமா அம்மணி

பல வித்தியாசமான வேடங்களில் நடிக்க வேண்டும் என்றே தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸ்ஸை தொடங்கியவர் நயன். தற்போது இவர் அறிமுக இயக்குனர் அஷ்வின் சரவணன் இயக்கி வரும் மாயா என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் நயன்தாரா வித்தியாசமான பேயாக வந்து மிரட்டு வாராம். இப் படத்தில் ஒரு குழந்தைக்கு தாயாகவும் நயன்தாரா நடிக்கிறாராம். தாயாக நடித்த நயனுக்கு இனி ஹீரொயின் வாய்ப்பு அமையுமா?



## எமிக்கு ஆப்பா!? பிரான்ஸ் புதுமுகம்



புதுமுகங்கள் இணைந்து உருவாக்கும் "மேல்நாட்டு" மருமகன் திரைப்படத்தில் பிரான்ஸ் நாட்டின் மொடல் அழகியும் நடிகையுமான என்ட்ரியன் நடிக்கிறார்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு வெளிநாடுகளுக்கு செல்கின்றார்கள். வெளிநாட்டு மோகத்தில் திளைக்கிறார்கள். இன்னும் சிலர் வெளிநாட்டு பெண்களை திருமணம் செய்துகொண்டு அங்கேயே தங்கிவிடுகின்றனர். அவர்களை பற்றிய கதை ஒருபுறம் இருக்க, இன்னொருபுறம் தமிழ் கலாசாரத்தை விரும்பி, நேசித்து தமிழ் இளைஞனை திருமணம் செய்து கிராமத்தில் வாழ விரும்பும் வெளிநாட்டு பெண்ணின் கதை.

## எந்திரன் – 02

சூப்பர் ஸ்டார் ரஜினி தனது அடுத்த திரைப்படத்துக்கான கதையில கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளாராம். அவரது புதுப்படத்தை கே.எஸ்.ரவிக்குமார், ஷங்கர், பி.வாசு, லிங்குசாமி ஆகியோரில் ஒருவர் இயக்குவார் என கூறப்பட்டது. தற்போது ஷங்கர் இயக்கத்தில் நடிப்பது உறுதியாகியுள்ளதாக தெரிகிறது. எந்திரன் 2ஆம் பாகத்தில் இவர்கள் இணையப் போவதாக தகவல் பரவி உள்ளது.

## மனந்திறக்கும் சிம்பு

அஜீத் நடிப்பில் பிரம்மாண்டமாக வெளியாகி இருக்கும் படம் என்னை அறிந்தால். பிரபலங்களில் சிம்பு அஜீத்தின் தீவிர ரசிகன் என்று நாம் அனைவருக்கும் தெரியும். இன்று படத்தை பார்த்த சிம்பு, ரொம்ப நாள் கழித்து ஒரு நல்ல தமிழ் படம் பார்த்துள்ளேன். தல அற்புதமாக நடித்துள்ளார். தல ரசிகர்களுக்கு சரியான விருந்து. தமிழ் சினிமா ரசிகர்கள் அனைவருக்கும் இந்தப் படம் பிடிக்கும் என ட்வீட் செய்துள்ளார்.

சென்ற வாரம்



நான் யாரு??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் 39

# உயர்வும் தாழ்வும்





இப்போதெல்லாம் தொலைக்காட்சியானது அனைத்து வீடுகளிலும் சர்வ சாதாரணமாக இருக்கின்ற ஒரு பொழுதுபோக்கு சாதனம். கைப்பேசி பற்றி உள்ள குற்றச் சாட்டுக்கள் அளவிற்கு இல்லாவிட்டாலும் கூட தொலைக்காட்சியை எமது மாணவ செல்வங்களும் இளைஞர்களும் பயன்படுத்தும் விதத்தில் அதன் மீதும் சிறுசிறு குற்றச்சாட்டுக்கள் எழத்தான் செய்கின்றன.

தொலைக்காட்சியில் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படுகின்றன. அவற்றில் எமது குழந்தைகள் பார்த்து பயன்படக்கூடிய நிகழ்ச்சிகளை தெரிவு செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பாகும்.

'ஸ்ரார் விஜய்' தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஞாயிறு இரவு 9.00 மணிக்கு 'நீயா? நானா?' என்ற ஒரு நிகழ்ச்சி "கோபி நாத்" அவர்களால் தொகுத்து வழங்கப்படுகின்றது. இரு சாராரை அழைத்து பல்வேறுபட்ட விடயங்களின் சார்புநிலை கருத்துக்களையும் எதிர்நிலை கருத்துக்களையும் மோதவிட்டு அலசி ஆராயும் சுவாரசியமானதொரு நிகழ்ச்சி இது.

சில தினங்கள் முன்னராக அடக்கமாக இருத்தலும் முன்னிலைப்படுத்தலும் என்ற தலைப்பில் கருத்துக்கள் கோரப்பட்டு இருசாரார் தமது விவாதத்தை சிறப்புச்செய்தனர்.

சிலர் அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் அடக்கமாக இருப்பதே ஒருவர் மீது மதிப்பை உண்டு பண்ணும். அவர் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும். அவரது உயர்ச்சிக்கும் வழிவகுக்கும் என வாதிட்டனர்.

மறுசாரார், அதெல்லாம் முன்னாட்களில் பொருத்தமாக இருக்கலாம் இந்நாட்களில் நாம் அடக்கமாக இருந்தால் எம்மை எவரும் கணக்கிலேயே எடுக்கமாட்டார்கள் எமது உயர்ச்சி அதனால் பாதிப்புக்கு உள்ளாகும். மேலும் எமது திறமைகளை நாமே முன்வந்து வெளிப்படுத்தாவிட்டால் யார்தான் அதனை தேடிக்கண்டு பிடித்து எமக்கு சந்தர்ப்பம் வழங்கப் போகின்றார்கள் என்று வாதிட்டனர்.

இந்த இரு கருத்துக்களுக்கும் நடுநிலையாக நாம் எமது திறமைகளை கல்வியின் மூலம் வளர்த்துக்கொண்டு நல்லதொரு பதவியை அடைந்து அடக்கமாக பணி புரியலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

இனி, நாம் எம்மை எடுத்துக்கொண்டாலும் எந்த விடயத்திலும் ஒரு சமநிலையை பேணினால்தான் எமக்கு வெற்றி கிட்டும். சந்தோஷம், துக்கம் இரண்டுமே எதிர் எதிரான நிலைகள். நாம் அதிக அளவு சந்தோஷத்தில் மூழ்கினாலும் செயலிழப்போம் அதிகளவு துன்பத்தில் மூழ்கினாலும் வாழ்க்கையில் துவண்டு விடுவோம். இரண்டு நிலையிலும் நிதானமாக இருக்க முடிந்தவர்களுக்கே இந்த வாழ்க்கை உரித்தானதாகின்றது.

அதீத நம்பிக்கையும், நம்பிக்கையீனமும் கூட இரு துருவங்களாக இருக்கின்றன. எந்த நபர் மீதும் எந்த ஒரு விடயத்தின் மீதும் அதீத நம்பிக்கை வைப்பது எம்மை பாதாளத்தில் வீழ்த்தி விடும். அதே போன்று நம்பிக்கையீனம் எமது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் மீது கூட சந்தேகத்தை உண்டு பண்ணி குடும்பத்தை சிதைத்துவிடும். கடவுள் மீதான அதீத நம்பிக்கை ஒருவனை துறவறத்திற்கு இட்டுச் செல்லும். அதே சமயம் ஒரு சிறிய நம்பிக்கையீனமும் கூட அவனை ஆன்மீக பாதைக்குச் செல்லாதபடி தடுத்துவிடும். கடவுள் மீதான நம்பிக்கையீனத்தால்தான் நாம் எல்லோரும் சம்சார சாகரத்தில் மூழ்கி உள்ளோம். ஆன்மீகத்தின் மீதான அதீத நம்பிக்கைக்கு உதாரண புருஷர்களாக இராமகிருஷ்ணரையும் விவேகானந்தரையும் ரமண மகரிஷியையும் குறிப்பிடலாம். எமது வாழ்வில் நாம் வெற்றியாளராக திகழ வேண்டுமானால் நாம் எமது நம்பிக்கையில் ஒரு சமநிலையை பேணவேண்டும்.

இனி, இந்த சமூகத்தில் நாம் பழகும் விதத்தில் எம்மில் இரு வேறுபட்ட குணாம்சங்களை அவதானிக்கலாம்.

ஒன்றில் நாம் எம்மை மிகவும் உயர்ந்தவர்களாக எண்ணி கர்வம் கொண்டவர்களாக செயற்படுகின்றோம். அல்லது எம்மை மிகவும் தாழ்ந்தவர்களாக கணக்கிட்டு ஒதுங்கி இருக்க தலைப்படுகின்றோம்.

**(வி.என்.சந்திரகாந்தி)**

எம்மை உயர்ந்தவர்களாக எண்ணி காரியங்களில் வீச்சுடன் செயல்படுவதில்தான் எமது வெற்றி தங்கி உள்ளது. எமது குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் கூட எமது தன் நம்பிக்கை ஒளியூட்டும். ஏழையாக பிறந்து நாட்டுக்கு தலைமை தாங்கும் அளவுக்கு உயரச்சியடைந்த பல தலைவர்கள் எமக்கு முன்னோடிகளாக இருக்கின்றனர். அவர்கள் எமக்கு விட்டுச்சென்ற அறிவுரைகள் எம்மால் பின்பற்றப்பட வேண்டியவை. சமூக கண்ணோட்டத்துடனான சேவைகளை நாம் மனத்தில் இருத்தி செயல்பட வேண்டும். கண்டு பிடிப்புக்கள் அனைத்துக்குமே காரணமாக இருப்பது தனி மனித நம்பிக்கையேயல்லவா...!

ஆனால் அதீத நம்பிக்கை அடுத்தவலமாக என்ன செய்கின்றது. அகங்காரத்தையும் கர்வத்தையும் கொண்டுவருகின்றது. குடும்பத்தில் நான்தான் மூத்தவன். அலுவலகத்தில் நான்தான் பெரியவன். அரசியலில் நான் தான் ராஜா என்றெல்லாம் எண்ண வைக்கின்றது. அதனால் தம்பி தங்கைகளின் எதிர்ப்புக்கு உள்ளாவது. அலுவலகத்தில் சக உத்தியோகத்தர்களின் பகைமையை சம்பாதிப்பது. சக அரசியல்வாதிகளின் எதிர்ப்புணர்விற்கு உள்ளாவது. அதனால் பதவியே பறிபோகும் அளவிற்கு தன்னை இட்டுச்செல்வது! அண்மையில் தமிழகத்திலும் இலங்கையிலும் இரு பெரும் அரசியல்வாதிகளின் வீழ்ச்சி எம்கண்முன்னாலேயே நேர்ந்தது. அவர்கள் இட்டதே சட்டமென்ற நிலை இருந்தது. இருவருமே கோடிக்கணக்கில் சம்பாதித்தார்கள். தம்மைச் சுற்றி தமக்கு வேண்டியவர்களை யெல்லாம். அணி சேர்த்துக்கொண்டார்கள். இருவருமே தமது உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மக்கள் முன் அவர்களை தலையில் தூக்கிவைத்து கொண்டாடினார்கள். சர்வதேச ஊடகவியலாளரே அவர்களின் திடீர் வீழ்ச்சியை நம்ப முடியாதவர்களாக திணறினர்.

அடுத்து தாழ்வு மனப்பான்மையை எடுத்தால் அதுவே ஒருவனது வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது. என்னால் இயலாது. எனக்கு திறமை இல்லை, நான் எதற்கும் தகுதியற்றவன் என்ற எண்ணம் அவனை மட்டுமன்றி அவனது குடும்பத்தையும் சமூகத்தையும் நாட்டையும் கூட வீழ்ச்சியை நோக்கி செலுத்திவிடும்.

அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பற்றுக்கோடு இருக்காது. ஊதாரித்தனமே மிகுந்திருக்கும். எந்த சம்பாத்தியமும் இல்லாமல் பெற்றோர்களின் சேமிப்பை கேளிக்கைகளிலும் சூதிலும் பெண்ணிலும் செலவிடுபவர்கள் அவர்களே. ஒரு குடும்பம் குட்டிச்சுவராகின்றது என்றால் அதற்கு காரணம் வேறு எவராகவும் இருக்க முடியாது. கல்வியைப் பற்றிய சிந்தனையே அவர்களிடம் இருக்காது. தாழ்வுச்சிக்கல் காரணமாக எவரையும் சந்திப்பதையும் எந்த முன்னேற்றகரமான செயற்பாடுகளில் கால் பதிப்பதையும் தவிர்த்துக்கொள்வர்.

உயர்வும், தாழ்வும் பிறர்தரவாரா என்பதே உண்மை!

மற்றவர்களுடன் ஒப்பிட்டே எம்மை நாம் உயர்ந்தவர்கள் என்று எண்ணுகின்றோம். அதே போன்றே எம்மை மற்றவர்களுடன் ஒப்பிட்டு தாழ்ந்தவர்கள் என்று எண்ணுகின்றோம். ஒன்றில் நாம் உயர்ந்தவர்கள் என்று கர்வம் கொள்கின்றோம். அன்றேல் தாழ்வு சிக்கலுக்கு உட்படுகின்றோம். அங்கேயே தவறு நிகழ்கின்றது.

எப்போதும் நாம் எந்த விடயத்திலும் ஒரு சமநிலையை பேணமுடிந்தால் தான் வாழ்க்கையில் அமைதி, நிம்மதி, வெற்றி ஆகியன கிட்டும்.

அப்படியான ஒரு சமநிலையை பேணுவதற்கு நாம் சில தீர்மானங்களை எடுக்க வேண்டும். மற்றவர்களுடன் அன்பாக பழக வேண்டும். அவர்களை மதிக்க வேண்டும். இனிமையாக பேச வேண்டும். பிறருக்கு உதவிசெய்யும் மனப்பாங்கை வளர்க்க வேண்டும்.

எங்கே தீர்மானம் எடுத்துவிட்டீர்களா? அப்படியாயின் இனி வெற்றி உங்கள் கையில்தான்!

# இடியும் மின்னலுமற்ற ஓர் வாழ்வு

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

அண்மையில் ஒரு தொலைபேசி அழைப்பினூடே ஒருவர் பேசினார். அவரை நான் சில காலங்களாக அறிவேன். அவரின் வாழ்வின் போராட்டத்திற்கு வழிகேட்டார். நானே, திசை தெரியாது தடுமாறிக்கொண்டிருக்கிறேன், என்னிடம் வழி கேட்கிறீர்களே என்று கூறினேன். சிரித்தார். சேர்ந்து சிரித்தோம்.

அடுத்து வந்த ஒரு மணிநேரமும், ஒரு வாழ்க்கையின் ஆரம்பத்தில் இருந்து, அவ் வாழ்க்கை மூர்ச்சையடையும் நிலை வரையிலான கதையைக் கேட்டுக்கொண்டிருந்தேன். நானும் அவ்வாறான நாட்களை கடந்து கொண்டவன் என்பதால், சோகங்களைப் பகிர்ந்துகொள்வதன் அவசியத்தையும், அது தந்து போகும் ஆறுதலையும் நன்கே உணர்ந்திருக்கிறேன். இன்னொருவரின் சோகங்களை ஒருவர் பகிரும் போது அமைதியாய் செவிமடுத்தபடியே, அவர்கள் மனம் திறந்து பேசுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொடுப்பதன் மூலம் அவரின் சோகங்களின் கனம் பலமாய் குறைந்து போகும் என்பதனை நான் எனது வாழ்க்கையில் கடந்து வந்த பாதைகளினூடே அனுபவரீதியாக உணர்ந்துகொண்டுள்ளேன்.

அவர் கூறிய ஒரு வசனம் என்னை பலமாய் சிந்திக்க வைத்தது. "நானோ, மூர்ச்சையடையும் நிலையில் இருக்கிறேன், என்னைச் சுற்றியிருப்பவர்கள் எனக்குச் செய்யும் முதலுதவி என்னைக் கொன்றுவிடும் போலிருக்கிறது" என்றார் அவர்.

வாழும் கலை என்னும் நோர்வேஜியப் புத்தக்தை வாசித்தபோது அதில் ஒரு முக்கிய கருத்தொன்று கூறப்பட்டிருந்தது." வாழ்வினை இன்னொருவருடன் சேர்ந்து, பகிர்ந்து வாழும் போது மற்றையவர் மீதான மரியாதையும், சுய மரியாதையும் இவற்றோடு அன்பும், காதலும் ஒன்றுடன் ஒன்று கலந்திருக்க வேண்டும்" என்றிருந்தது. அவற்றைக் கற்று, உணரும் போது நான், வாழ்வின் பெரும்பகுதியை கடந்தும், தொலைத்தும் இருப்பதை உணர்கிறேன்.

எப்போது நாம் மற்றையவர் எனக்குச் சொந்தமானவர் என்றும், அவரின் செயல்கள், கருத்துக்கள் போன்றவை என் செயல்கள், கருத்துக்கள் போன்றிருக்க வேண்டும் என்றும், மற்றையவரின் கருத்துக்கள், செயல்களுக்கு நாம் மதிப்பளிக்காமலும், செயற்பட ஆரம்பிக்கிறோமோ அன்றே அவர்கள் இருவர் களுக்கிடையிலும் கருத்துவேறுபாடுகள் ஆரம்பிக்கின்றன.

கணவன், மனைவி, குழந்தை இப்படி எல்லா மனிதர் களிடத்தேயும் அவரவர்களுக்கென்ற ஒரு தனித்தன்மை இருக்கிறது. இந்தத் தனித்தன்மையினுள் மற்றயவர்கள் புகுவது ஒரு வித மனிதஉரிமை மீறலே.

இரு மனிதர்கள் சேர்ந்துவாழும் உறவானது இருவரின் தனித்தன்மைகளும் இருவராலும் மதிக்கப்படும் போதே பலமானதோர் உறவாக மாறுகின்றது. இக் கருத்தானது இருவரினதும் சுயமரியாதையில் இருந்தே உருவாகிறது.

ஒரு மனிதனின் சுயமரியாதை அலட்சியப்படுத்தப்படும் போது அமைதியாயிருக்கும் விடுதலையுணர்வு விளித்துக்கொள்வதாயே நான் எண்ணுகிறேன். அதன் காரணமாய் "ஏன்" என்னும் கேள்வியும், அதனால் தொடரும் வாதப் பிரதிவாதங்களும், அதிகாரப் போட்டியும் பல மனிதர்களின் வாழ்வில் விளையாடுகின்றன.

என்னுடன் தொலைபேசியில் உரையாடியவரின் சுயமரியாதை பலமாய் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது. அவரினுள் இருந்த விடுதலையுணர்வு கேள்வியெழுப்ப, அவரின் வாழ்வு கேள்விக்குறியாய் இருக்கிறது தற்போது.

"பல்லைக்கடிச்சுக்கொண்டு இரு", "பிள்ளைகளுக்காக பொறுத்துக்கொண்டு போ", "நீதான் விட்டுக் குடுத்துப் போக வேணும்" என்று இப்படி பல பல ஆலோசனைகளை இருபாலாருக்கும் கூறுபவர்கள் ஒரு மனிதனின் சுயமரியாதையை தாம் மதிக்கவில்லை என்பதை உணர்கிறார்கள் இல்லை என்பதே மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். குடும்பக் கப்பல் தண்ணீரில் மூழ்கிறது எனக்கு உதவுங்கள் என்று கூக்குரலிடும் ஒருவருக்கு "கப்பலுக்குள் வரும் தண்ணீரை இறைத்தால் கப்பல் தாளாது" என்று அறிவுரை கூறுபவர்களே எமது சமுதாயத்தில் அதிகமாக இருக்கிறார்களே அன்றி, கப்பலில் இருக்கும் ஓட்டைகளை அடைத்து, கப்பலுக்குள் நீர் புகாது இருக்க நடவடிக்கைகளை இருவரும் எடுங்கள் என்று கூறுபவர்கள் மிகவும் அரிதாகவே இருக்கிறார்கள்.

உறவுகள் பிரியும் போது, அந்த உறவுக்குள் அதிக அதிகாரத்துடன் இருந்த ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ மற்றையவர் பிரிந்துபோகும் காரணம் புரிவதில்லை. அவ் அதிகாரத்தின் காரணமாகவே மற்றையவரின் சுயமரியாதை காயப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை உணர முடியாது போகிறது, அவரால். இந்த அதி[illegible] தன்னை சுயவிமர்சனம் செய்து கொள்வதோ, மாற்றங்களை மனதார ஏற்று நடைமுறைப்படுத்துவதோ இல்லை.

சில உறவுகள் காயப்படத் தொடங்கியபின் அவ்வுறவுகளில் அதிகாரத்தில் உள்ளவர்களின் குற்றச்சாட்டுகள் காலப்போக்கில் குற்றம்சாட்டப்பட்டவரின் மனதில் "என்னில் தான் ஏதோ பிழை" என்னும் மனநிலையை உருவாக்கிவிடுகிறது. இது அவரது சுயநம்பிக்கையை மட்டுமல்ல சுய மரியாதையும் கலைத்துப்போடுகிறது. மேற்குறிப்பிடப் பட்ட அதிகாரத்தில் உள்ளவர்கள் நடைமுறைப்படுத்தும் "மூளைச்சலவை" கருத்துக்கள், மற்றையவரை நேர்மையாக சுயவிமர்சனம் செய்வது போன்று அல்லாது, தமது கருத்தினை மறைமுகமாக வலியுறுத்தி தமது கட்டுப்பாட்டுக்குள் மற்றையவரை வைத்திருக்கும் வடிவமாகவே இருக்கும்.

எனது தொலைபேசி நண்பரும், தான் மூளைச்சலவை செய்யப்படுதாயும், தனது சுயம் மறுக்கப்படுவதாயும், தனது நெருங்கிய சகோதர சகோதரிகள், உறவினர்கள் கூட தனது சுயத்தை மதிக்காமல், கலாச்சாரம் என்னும் சொற்பதத்தினுள் தன்னை மூர்ச்சைதெளிவிப்பதாய் நினைத்து மூழ்கடிப்பதாய் உணர்வதாயும் கூறினார்.

புரிகிறது, நான் கடந்து வந்த பாதையில் நடந்துகொண்டிருக்கும் பலரைப்போன்று நீங்களும் நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்றேன். சிரித்தார், அவர். சேர்ந்து சிரித்தோம்.

ஒருவருக்கு நாம் சுதந்திரமளிக்கும் போது, அவனை அல்லது அவளை நீங்கள் இழப்பதற்கான அபாயம் இருக்கிறது என்பது உண்மையே, ஆனால் சுதந்திரமில்லாத ஒரு மனிதனை நீ பெற்றிருப்பாயானால் அம்மனிதனை நீ ஏற்கனவே இழந்துவிட்டாய் என்று எங்கோ வாசித்திருக்கிறேன்.

"வாழும் கலை" புத்தகத்தின் எழுத்தாளர் கூறுகிறார், உனது எல்லாவிதமான தேவைகளை, உணர்ச்சிகளை மற்றவரால் திருப்தி செய்ய முடியாது என்பதை நீ மிகவும் தீர்க்கமாய் உணரவேண்டும், உன் தேவைகளை திருப்திசெய்யும் மனிதனை நீ பெற்றிருப்பாயானால் உன் தேவைகள் உனக்கு இருக்கவேண்டிய தேவைகளின் அளவை விட குறைந்திருக்கிருக்கிறது என்று அர்த்தப்படுகிறது என்கிறார் அவர்.

கப்பல் மூழ்குவது நிட்சயம். அப்போது தற்பாதுகாப்புக்காக இருக்கும் கப்பலில் ஏறிக் கரைசேருங்கள், என்றேன்.

குழப்புறீங்களே என்று கூறி தொலைபேசியை வைத்தார்.

வாசகர்களாகிய உங்களையும் நான் குழப்பிருந்தால் மன்னியுங்கள், யார் கண்டது நானும் குழம்பியிருக்கிறேனோ என்னவொ?

வாழ்க்கை சொர்க்கத்தில் (வானத்தில்) நிச்சயிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. ஆம், இடியும் மின்னலும் கூட வானத்திலேயே நிச்சயிக்கப்படுகிறது.

**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# ஆசை யாரைத் தான் விட்டு வைத்தது!



ஏறாவூரில் பலர் பல விதமான வியாபாரங்களில் ஈடுபட்டிருந்தாலும், ஏகாம்பரம் அங்கு சற்று வித்தியாசமான வியாபாரம் ஒன்றில் ஈடுபட்டு வந்தார். அந்த வியாபாரம் அவனுக்கு நல்ல இலாபத்தை அள்ளி கொடுத்து வந்தது.

அதனால் அவன் அந்த வியாபாரத்தை தொடர்ந்து செய்து வந்தான். சில வியாபாரிகள் இலாப நோக்கில் அடிக்கடி தங்கள் வியாபாரங்களை மாற்றிக் கொள்வது வழமை. சிலர் தங்களுக்கு ஒரு மாற்றம் தேவை என்பதை மனதில் கொண்டு பரம்பரை பரம்பரையாக தாம் செய்து வந்த வியாபாரத்தை அடிக்கடி மாற்றி அமைத்துக் கொள்வார்கள்.

அதனால் பலர் நன்மையும் அடைந்திருக்கிறார்கள். அதே வேளை இருந்த தொழிலை அடியோடு இழந்தும் இருக்கிறார்கள். ஆனால் ஏகாம்பரம் அவனது தொழிலில் நீண்டகாலம் நிலைத்து நின்றதற்கு காரணம் அவனிடம் பேராசை என்பது அறவே இல்லை.

அவனது வியாபாரம் பழைய பிளாஸ்ரிக் பொருட்களை சேகரித்து குருணாகல் பிரதேசத்தில் உள்ள ஒரு முஸ்லீம் வியாபாரியிடம் கையளிப்பதே. அந்த வியாபாரி கொழும்பில் உள்ள பிரபல பிளாஸ்ரிக் கம்பனிக்கு அவற்றை அனுப்பி வைப்பார்.

உடைந்த உபயோகிக்க முடியாத பிளாஸ்ரிக் கதிரைகள் மேசைகள் மற்றும் சமையலறை உபகரணங்களை பொது மக்களிடமிருந்து சேமித்து அவற்றுக்கு பணம் வழங்காது மாற்றுப் பொருளாக புதிய பேசன், கோப்பை, பீங்கான்களை வழங்குவான். அந்த வியாபாரத்திற்கு பாரிய முதலீடு தேவைப்பட்டிருக்க வில்லை. பழைய பொருட்களை பெற்று அதற்கு பதிலாக வழங்கப்படும் பிளாஸ்ரிக் பொருட்களைக் கூட குருணாகல் வியாபாரியே அவனுக்கு வழங்கி வந்தார். வியாபாரத்தி ற்காக உபயோகிக்கப்படும் வாகனம் கூட அவரே கொடுத்து உதவினார்.

அதனால் அந்த வியாபாரத்தில் அவன் நட்டமடைய வாய்ப்பிருக்கவில்லை. காலஞ்சென்ற அவனது தகப்பனார் கூட ஏறாவூரில் பிரபல வியாபாரியாக விளங்கிய ஒருவர். சில வியாபார அணுகுமுறைகளை, நுட்பங்களை தந்திரோபாயங்களை தனது தகப்பனா ரிடமிருந்து கற்றுக் கொண்டதால், எந்த வியாபாரத்திலும் உள்ள நெளிவு சுளிவுகளை அறிந்திருக்க தவறவில்லை.

தனது வியாபாரத்திற்கு உதவிக்காக ஒருவரையும் கூட வைத்துக் கொள்ளவில்லை. அனைத்து வேலைகளையும் அவனே செய்து வந்தான். வாரந்தோறும் ஏறாவூர் உள்ளிட்ட அனைத்து அயல் கிராமங்களிலிருந்து சேகரிக்கும் பிளாஸ்ரிக் பொருட்களை குருணாகல் வரை கொண்டு சேர்க்கும் பொறுப்பும் அவனுடையதே.

உறவினர்களை உதவிக்கு என எடுத்தால் வியாபாரத்தை விட அவர்களை கவனிப்பதே பெரும் பாடாக இருக்கும். வியாபாரத்தில் மாத்திரமல்ல எந்த காரியங்களிலும் விசுவாசம் நம்பிக்கை மிக மிக பேணிப் பாதுகாக்க வேண்டியவை தந்திரோபாயங்களாகும். "நம்ப நட ஆனால் நம்பி நடவாதே" என எம் மூதாதையர்கள் என்ன தெரியாமலா கூறி வைத்துள்ளனர்! நம் மத்தியில் நம்பிக் கெட்டவர்களை நாம் அறியாமலா என்ன?

விசுவாசம், நம்பிக்கை அனைத்தும் தவிடு பொடியாகி பிச்சை வேண்டாம் நாயை பிடி என்ற நிலைக்கு முன்னைய ஆட்சிகளில் கொடிகட்டிப் பறந்த சிலர் இன்று தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஏறாவூர் வியாபாரியான ஏகாம்பரம் இலாபத்தையும், நட்டத்தையும் தனக்குள்ளே பங்கு போட்டுக் கொண்டான். எவரையும் பங்காளியாகவோ தனக்கு ஒத்தாசை புரியவோ நெருக்கமாக வைத்துக் கொள்ளவில்லை. நாட்டில் நடக்கும் சில சம்பவங்களை நாம் அறிந்து வைத்துக் கொள்ளுதல் எமது நாளாந்த வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்கும் இன்றியமை யாததாக அமையும் என்பது திண்ணம். வியாபாரத்தின் பொருட்டு ஏகாம்பரம் பல பிரதேசங்களுக்கு சென்று வருவதால் பல மனிதர்களைப் பற்றியும், நாட்டு நடப்புக்களைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருந்தான் அவன்.

சில நண்பர்கள் அவனுடன் நெருங்கிய நட்பை வளர்க்க முயற்சித்தாலும் அவன் அவ்விடயங்களில் மிகக் கவனமாக காய்களை நகர்த்துவான்.

வாழைச்சேனையில் பிரபல வியாபாரியான சுப்ரமணிய சர்மா வயது முதிர்ந்த ஒருவர். அவர் இரட்டைப் பதிவு பிரஜை. அவரின் பிறப்பிடம் இந்தியா. சிறு வயதிலிருந்தே இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டார். அவரினது வியாபாரமும் சற்று வித்தியாசமானது.

அதாவது இந்து சமய ஆலயங்களுக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்வதே. அந்த பொருட்களை மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை இந்தியா சென்று கொள்வனவு செய்து வருவார். தற்பொழுது அவரால் ஓடியாடி வியாபாரம் செய்த முடியாது என்பதால் தனது வியாபாரத்தை ஏகாம்பரத்துக்கு வழங்க முடிவு செய்திருந்தார். அந்த வியாபாரத்திற்கு அவர் ஏகாம்பரத்தை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் அவன் மிகவும் சுறுசுறுப்பான வியாபாரி என்பதாலே. ஆரம்பத்தில் அவன் அவரின் கோரிக்கையை ஏற்கா விட்டாலும், சுப்ரமணிய சர்மாவின் அறிவுரை அவனுக்கு ஏற்புடையதாக இருந்தது.

நாடோடியாக அங்கும் இங்கும் அலைந்து திரிவதை விட ஒரே இடத்தில் இருந்து வியாபாரம் செய்வது நல்லது என முடிவு செய்து அந்த வியாபாரத்தை ஏற்றுக் கொண்டு பழைய வியாபாரத்தை தனது நண்பன் ஒருவனுக்கு கொடுத்திருந்தான்.

எது என்னவாக இருந்தாலும் சுப்ரமணிய சர்மாவின் மகள் தனது தகப்பனாரின் வியாபாரம் கைமாறியது தொடர்பில் அதிருப்தி கொண்டிருந்தாள். இருப்பினும் தகப்பனாருக்கு எதிராக செயற்படாவிட்டாலும் அடிக்கடி கடைக்குச் சென்று மேற்பார்வை செய்து வந்தாள்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் மாதாமாதம் 20,000 ரூபா சுப்ரமணிய சர்மாவுக்கு கொடுக்க வேண்டி இருந்தும் சில மாதங்களாக கடையில் வியாபாரம் இல்லை என காரணம் காட்டி குறித்த தொகையை குறைத்தே ஏகாம்பரம் கடையின் பேரில் கடை உரிமையாளருக்கு செலுத்தி வந்தான். ஏகாம்பரம் கொடுக்கல் வாங்கலில் நேர்மையை கடைப்பிடிக்கத் தவறுகிறான் என்பதை மட்டும் சர்மாவின் மகள் தெளிவாக புரிந்து கொண்டாள். அவளால் என்ன செய்ய முடியும்? சர்மாவுக்கோ வயதாகி விட்டது.

சில நாட்களில் கடும் நோயினால் பாதிக்கப்பட்ட சர்மா வாழைச்சேனை வைத்தியசாலையில் காலமானார். தகப்பன் இறந்ததும் மகள் தனித்து விட்டாள்.

ஏகாம்பரத்தின் நடவடிக்கைகள் அவளுக்கு திருப்தி அளிக்கவில்லை. எப்படியும் கட்டிடம் உட்பட முழுவியாபாரத்தையும் தன்வசப்படுத்த சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க முயற்சித்தான் ஏகாம்பரம்.

அவனது குள்ளத் தனங்களை எப்படியோ சர்மாவின் மகள் அறிந்து கொண்டாள். முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண்டும் என்பதில் அவள் உறுதியானாள். பாடசாலை காலங்களில் அவளுக்கு நல்லதொரு நண்பன் இருந்தான். அவனொரு முரட்டு ஆசாமி. எதற்கும் துணிந்து செயற்படக் கூடியவன். அவர்கள் இருவரும் ஐந்தாம் ஆண்டு தொடக்கம் உயர்தரம் வரை ஒன்றாக கல்வி கற்றார்கள். சர்மாவின் மகளுக்கு அவன் மிகவும் துணையாக இருந்தான். சுருக்கமாக கூறினால் அவன் பாடசாலையில் ஒரு குட்டி தாதாவாக இருந்தவன்.

சர்மாவின் மகள் அவனை சந்தித்து முழு விபரத்தையும் கூறினாள். அவளுக்கு உதவி செய்ய அவன் முன்வந்தான். அவளது கடை நடவடிக்கையில் அவனையும் சேர்த்துக் கொண்டாள் சர்மாவின் மகள். அந்நடவடிக்கை ஏகாம்பரத்துக்கு தூக்கி வாறிப்போட்டது. சர்மாவின் மகள் தனித்தவள், அவளை எப்படியும் ஏமாற்றி முழு ஆதனத்தையும் ஏப்பமிடலாம் என கங்கணம் கட்டிக் கொண்டிருந்த ஏகாம்பரம் செய்வதென்ன வென்று தெரியாமல் தடுமாறினாள். கிணறு வெட்ட பூதம் கிளம்பின மாதிரியானது அவனது நிலை.

அவனால் மேற்கொண்டு எந்தவித சூழ்ச்சிகளிலும் இறங்க முடியாமல் போனது. வந்திருக்கின்ற ஆசாமி ஊரிலே பெரும் கிள்ளாடி எனத் தெரிந்திருந்ததால் மெதுவாக கடையை பாரமளித்து விட்டு மீண்டும் தனது பழைய தொழிலில் தடம் பதித்தான் ஏகாம்பரம்.

சர்மாவின் மகள் தற்பொழுது சகல கவலைகளையும் மறந்தாள். அந்தப் பிரச்சினைக்கு எப்படி தீர்வு காணப் போகின்றேன் என நாளுக்கு நாள் மனவிசனத்துடன் வாழ்ந்த அவளுக்கு அவளது நண்பன் தக்க வேளையில் கைகொடுத்து உதவியதை அவளால் மறக்க முடியவில்லை.

அவளது நண்பன் ஊரிலே முரட்டு பேர்வழியாக இருந்தாலும், சர்மாவின் மகளுக்கு கட்டுப்பட்டவன். அவளுக்காக அவன் எதையும் செய்யக் கூடியவன். ஓரிரு வருடங்களுக்குள் அவர்களிருவரும் தம்பதிகளாயினர்.

**- பாலையூற்றான் -**

# இப்படியும் நடக்கலாம்

## இரட்டைக் குழந்தை பிரசவம்

பிரிட்டிஷை சேர்ந்த நிக்கா கில்போல்ட் என்ற பெண்மணி மருத்துவமனைக்கு ஒரு மணி நேரத்தில் ஓட்டும் தூரத்தில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில், தனக்கு பிரசவ நேரம் வந்துவிட்டதை உணர்ந்த இவர் மருத்துவமனைக்கு புறப்பட்டு, அரை மணி நேர தூரத்தை தாண்டியதும், கணவன் வாகனத்தை ஓட்டிகொண்டிருக்கும் போதே முதலாவது குழந்தையை பிரசவித்துள்ளார். பின்னர் குழந்தையை எடுத்து ஊதி வெளியிடும் இரு சிறு மூச்சுக்களை கொடுத்து மகளை சுவாசிக்க செய்துவிட்டு, இரண்டாவது குழந்தையை வாகன தரிப்பிடத்திலேயே இரண்டாவதாக ஆண் குழந்தையை மருத்துவர்களின் உதவியுடன் பிரசவித்துள்ளார்.

## மூவரின் மரபணு குழந்தை



மூன்று பேரின் மரபணுக்களிலிருந்து குழந்தைகளை உருவாக்குவதற்கான அனுமதியை பிரித்தானிய பாராளுமன்றம் வழங்கியுள்ளது. இதன் மூலம் உலகிலேயே மூன்று பெற்றோரின் மரபணுக்களில் இருந்து ஒரு குழந்தையை உருவாக்குவதற்கான அனுமதியை வழங்கிய முதல் நாடாக பிரித்தானியா திகழ்கிறது.

## நூறுக்கும் மேற்பட்டோர் பலாத்காரம் - 54இல்




ஜப்பானில் நூற்றுக்கு மேற்பட்ட பெண்களின் கற்பை சூறையாடிய ஆசாமியை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். 54 வயதான நொகுச்சி என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவ ஆய்விற்காக உறங்கும் போது இரத்த அழுத்தத்தை பரிசோதிப்பதாக சொல்லி மருத்துவத்துறையில் ஆர்வமுள்ள பெண்களை ஹோட்டல் மற்றும் கடற்கரை விடுதிகளுக்கு அழைத்துச் சென்ற அவர் மயக்க மருந்து கொடுத்து அவர்களை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். அத்துடன் அந்தரங்க காட்சிகளை வீடியோவாக பதிவு செய்து ஆபாச இணைய தளங்களுக்கு விற்றுள்ளார். இதன்மூலம் 85000 பெ[illegible] வருமானமாக ஈட்டியுள்ளார்.

- ஜேர்மனியின் ஓர் அடுக்குமாடி குடியிருப்பில், நிர்வாண நபர் ஒருவர் அக்கம்பக்கத்தினரை தொடர்ந்து அச்சுறுத்தி வந்துள்ளார். இதையறிந்து விரைந்து வந்த அதிகாரிகள் அச்சுறுத்தல் விடுத்த நபரை சுற்றி வளைத்துள்ளனர். உடனே தப்பிஓட முயன்ற அக் குற்றவாளியை சுட்டுக் கொன்றுள்ளனர் காவல் துறையினர்.
- பிரிட்டனை சேர்ந்த பெண் டெஸ் கிறிஸ்டியன்(வயது 50). இவர் கடந்த 40 ஆண்டுகளாக சிரிப்பதே இல்லையாம், சிரிப்பதால் முகத்தில் சுருக்கம் வரும் என்பதால் சிரிக்காமல் வாழ்ந்து வருகிறார். இதுகுறித்து அவர் கூறுகையில், பத்து வயதிலேயே நான் இந்த உண்மையைக் கண்டுகொண்டேன். தற்போது 50 வயதாகியும் இளமையாக இருப்பதற்கு சிரிக்காமல் இருந்ததே காரணம் என கூறி பெருமைப்படுகிறார் டெஸ்.



- மலைப்பாம்பை கொன்று சமைத்து சாப்பிட்ட நபருக்கு 9 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- நேபாளத்தில் 13 வயது சிறார்களின் திருமணங்களால் இளம் வயதில் பிரசவத்தின்போது அவர்கள் இறக்கவும் செய்கிறார்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல் ஆய்வு

# இலங்கையை காப்பாற்றுமா அமெரிக்கா?!

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதை அடுத்து, இலங்கை அரசிடமிருந்து விலகி நின்ற நாடுகள் நெருங்கிவரத் தொடங்கியுள்ளதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிக்கும் முயற்சியிலும் இறங்கியுள்ளன. கடந்த வாரமும் இந்த வாரமும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலரும் கொழும்புக்கு வந்திருந்ததால், பரபரப்பான நிலை காணப்பட்டது. பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக இராஜாங்க அமைச்சரான ஹியூகோ ஸ்வயர் மூன்று நாள் பயணமாக இலங்கை வந்திருந்தார். அதை அடுத்து, பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா மூன்று நாள் பயணமாக வந்திருந்தார். தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வாலும் இரண்டு நாள் பயணமாக கொழும்பு வந்திருந்தார். இதற்குள்ளாக, இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, புதுடெல்லிக்கும் பிரஷெல்சுக்கும் இரண்டு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து இன்னமும் ஒரு மாதம் கூட நிறைவடையாத நிலையில், கொழும்பு நோக்கிய சர்வதேச கவனம் தீவிரமடைந்துள்ளதையே இந்தப் பயணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக இராஜாங்க அமைச்சரான ஹியூகோ ஸ்வயர், அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா ஆகிய மூவருமே, ஏற்கெனவே மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பதவியிலிருந்த காலப்பகுதியில் இலங்கைக்கு வந்திருந்தனர். அவர்கள் மீண்டும் இங்கு வந்திருந்ததன் அடிப்படை நோக்கம், ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிப்பதற்கேயாகும். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டமைக்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் மேற்குலக நாடுகள் உருவாக்கிய மஹிந்த ராஜபக்ஷ எதிர்ப்பு அலையும் ஒரு காரணம். சமூக வலைத்தளங்கள் மற்றும் இணைய ஊடகங்களில் அரசுக்கு எதிரான உணர்வு தீவிரமாக பரப்பப்பட்டது. இதனாலேயே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியின் இறுதிக்காலகட்டத்தில் அமெரிக்காவுடன் அதிகளவில் முரண்பட்டிருந்தார். ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள், ஐ.தே.க. வினால் இளைஞர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்க மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை குழப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாவற்றுக்குமே காரணம் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி பற்றிய அச்சமே. அண்மையில் புதுடெல்லி சென்றிருந்தபோது செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அண்மைய ஆட்சி மாற்றத்தை அரபுலகப் புரட்சியை ஒத்தது என்று கூறியிருந்தார். அரபுலகப் புரட்சியில் சமூக வலைத்தளங்கள் எத்தகைய பங்களிப்பை ஆற்றினவோ, அதுபோலவே மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியை வீழ்த்துவதிலும் அவை முக்கிய பங்காற்றின. தம்மை வீழ்த்தும் முயற்சியில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முனைப்புடன் செயற்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் முன்னரே தெளிவாக உணர்ந்திருந்தன. அதனாலேயே, மேற்குலகுடனான மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் உறவுகள் கடைசிவரை சீரமைக்கப்பட முடியாததாகவே இருந்தது. இவ்வாறாக, ஆட்சி மாற்றத்துக்கு ஏதோவொரு வகையில் உந்துதல் கொடுத்த மேற்குலக நாடுகள், இப்போது அதன் விளைவு எத்தகையதாக உள்ளது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறது. ஆட்சி மாற்றத்தின் மூலம் தாம் அடைய நினைத்தவை எந்தக்கட்டத்தில் உள்ளன என்பதை அறிவதிலும் அதற்கு எந்த வகையில் உதவலாம் என்பதை அறிந்துகொள்வதுமே அமெரிக்க, பிரித்தானிய உயர்மட்டப் பிரதிநிதிகளினுடைய பயணத்தின் நோக்கமாகும். பொதுநலவாய பொதுச்செயலர் கமலேஷ் சர்மாவினது வருகையின் நோக்கமும் அதுவேயாகும். ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சூழல், நல்லிணக்கம் இந்த நான்குமே இலங்கையின் புதிய அரசாங்கத்திடமிருந்து சர்வதேச சமூகத்தினால் எதிர்பார்க்கப்படும் விடயங்களாகும். இந்த நான்கும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால், செழிப்பானதொரு நாடாக இலங்கை மாறும் என்பது அவர்களின் கணிப்பு. இந்த நான்கு விவகாரங்களிலுமே, முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உருப்படியாக எதையும் செய்யவில்லை. செய்வதற்கு முயற்சிக்கவும் இல்லை. இந்த நான்கு அடிப்படை அம்சங்களையும் நிறைவேற்றுமாறு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்தபோதும் சரி, ஆலோசனை கூறியபோதும் சரி, முன்னைய அரசாங்கம் அதனை காதில் வாங்கிக்கொண்டதே இல்லை. எங்களுக்கு புத்தி சொல்ல இவர்கள் யார் என்ற தொனியிலும் தாங்கள் நியாயமாக நடந்துகொள்பவர்கள் என்ற தொனியிலுமே முன்னைய அரசாங்கம் சர்வதேச சமூகத்தை பார்த்து கேள்வியெழுப்பும் நிலையிலிருந்து வந்தது. அதனாலேயே, தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை முன்னிலைப்படுத்தி நல்லாட்சி, ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லிணக்கம் போன்ற விடயங்களை வலியுறுத்தி ஓர் ஆட்சி மாற்றத்தை கோரியபோது, உள்நாட்டு மக்கள் மத்தியில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் ஆதரவை திரட்டமுடிந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர், இந்த நான்கு அடிப்படை விடயங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அல்லது முன்னேற்றங்களை அறிவதில் சர்வதேச சமூகம் உன்னிப்பாக உள்ளது. இந்த நான்கு விடயங்களையும் இலங்கையின் புதிய அரசாங்கத்தினால் அவ்வளவு இலகுவாக நிறைவேற்றமுடியாது. அத்துடன், 100 நாள் செயற்றிட்டத்துக்குள் அது சாத்தியமும் அற்றது. இதனை சர்வதேச சமூகம் நன்றாகவே புரிந்துவைத்திருக்கிறது. 100 நாள் செயற்திட்டத்துக்கு அப்பாலும், மாதக்கணக்காக சில விடயங்களை நிறைவேற்ற வருடக்கணக்காக கூட காத்திருக்கவேண்டிய நிலை ஏற்படலாம். உதாரணத்துக்கு நாட்டில் ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதோ, நல்லாட்சியை ஏற்படுத்துவதோ, மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சூழலை உருவாக்குவதோ பெரிய விடயங்களில்லை. அவற்றை முழுமையாகவோ, பகுதியாகவோ 100 நாள் செயற்றிட்டத்துக்குள்ளாகவே ஓர் அரசாங்கத்தினால் மீள நிறுவமுடியும். ஆனால், நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற விடயம் என்பது அதற்கு அப்பாற்பட்டது. அது நீண்டதொரு செயல்முறை என்பதையும் முன்னைய மூன்று விடயங்களையும் திறமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமே இதனை அடையமுடியும் என்பதையும் சர்வதேச சமூகம் நன்கறியும். நல்லிணக்கத்தை எட்டுவதில் முக்கியமான இரண்டு விடயங்கள் உள்ளன. பொறுப்புக்கூறலும் அதிகாரப்பகிர்வை உள்ளடக்கிய அரசியல் தீர்வுமே இவை இரண்டுமாகும். இவை இரண்டையும் அவ்வளவு சுலபத்தில் நிறைவேற்றமுடியாது. அதனாலேயே, நல்லிணக்க செயல்முறைக்கு எவராலும் காலக்கெடுவை விதிக்கமுடியாது. ஆனால், இலங்கையை பொறுத்தவரையில் முன்னைய அரசாங்கத்துக்கு போர் முடிந்து நான்கு ஆண்டுகள்வரை பொறுப்புக்கூறலுக்கும் நல்லிணக்கத்தை எட்டுவதற்கும் சர்வதேச சமூகத்தினால் கால அவகாசம் வழங்கப்பட்டது. முக்கியமாக, நம்பகமான பொறுப்புக்கூறும் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நிராகரித்தது. முதலில் உள்நாட்டு பொறிமுறைகளை ஏற்படுத்துமாறு சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானங்களின் ஊடாக வலியுறுத்தியபோது, அதற்கு கொஞ்சமும் மசிந்துகொடுக்காமல் நடந்துகொண்டது. காலப்போக்கில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் ஒவ்வொரு தீர்மானமாக கொண்டுவந்து இறுக்கியபோது, கொஞ்சம் கொஞ்சமாக தானும் ஏதோ சில உள்நாட்டு பொறிமுறைகளை உருவாக்குவது போன்று காட்டிக் கொண்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட உள்நாட்டு பொறிமுறைகள் இதுவரையில் எந்தத் தீர்வையும் அடைய உதவவில்லை. உள்நாட்டு பொறிமுறைகளின் இறுதி இலக்கு நல்லிணக்கத்தை எட்டுவதாகவே இருந்தாலும், முன்னைய அரசாங்கத்தினால் அத்தகைய நோக்கத்தை அடைவதில் எந்த முன்னேற்றத்தையும் எட்டமுடியவில்லை.



அதற்கு முக்கியமான காரணம், அந்தப் பொறிமுறைகள் நம்பகமானவையாகவோ, சுதந்திரமானதாகவோ மட்டுமன்றி, தீர்வை எட்டுகின்ற நோக்கத்தை கொண்டவையாகவும் இருக்கவில்லை. ஏதோ பெயருக்கு ஓர் உள்நாட்டு பொறிமுறையை உருவாக்கியிருக்கிறோம் என்று காட்டிக் கொண்டு, சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்கொள்வதே முன்னைய அரசாங்கத்தின் ஒரே நோக்கமாக இருந்தது. அதனால், அந்தப் பொறிமுறைகள் சர்வதேச அழுத்தங்களி லிருந்து விடுபடவும் இலங்கைக்கு உதவவில்லை, அதேவேளை, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் கைகொடுக்கவில்லை. இந்தச் சூழலில், சர்வதேச விசாரணை நெருக்கடிகள் இலங்கையின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கின்ற கட்டத்திலேயே, அதிகாரத்தை விட்டுச் சென்றிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. புதிய அரசாங்கத்துக்கு சர்வதேச விசாரணையின் விளைவுகளிலிருந்து நாட்டை காக்கவேண்டியது இப்போது முக்கியமான பிரச்சினையாக மாறியிருக்கிறது. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான ஐ.நா. வின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்கு சாதகமான வகையில் அமையப் போவதில்லை என்பதை புதிய அரசாங்கம் தெளிவாக உணர்ந்து வைத்திருக்கிறது. எனவே, அந்த அறிக்கையின் தொடர் நடவடிக்கைகளை நிறுத்தவைப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுவருகிறது. அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளை ஒன்றிணைத்து, தனக்கு ஆதரவான சூழல் ஒன்றை உருவாக்க முயற்சிக்கிறது மைத்திரிபால சிறிசேன அரசாங்கம். சர்வதேச விசாரணை அறிக்கையை வெளியிடாமல் தவிர்ப்பது, அதாவது பிற்போடுவது அல்லது முடக்கிவைப்பது அரசாங்கத்தின் ஒரு திட்டமாக இருந்தாலும், அதற்கான வாய்ப்புகள் குறைவு என்றே தெரிகிறது. ஏனென்றால், இது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்ட தீர்மானத்தை அடிப்படையாக கொண்ட விடயம். விசாரணை அறிக்கையை சபையில் சமர்ப்பித்து, அதனை நிறைவேற்றவேண்டியது ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் கடப்பாடு. எனவே விசாரணை அறிக்கையை வெளிவராமல் முடக்குவதோ, பிற்போடுவதோ நடைமுறைச் சாத்தியமான விடயமா என்பது சந்தேகமே. ஆனால், அந்த அறிக்கையின் மீதான மேல் நடவடிக்கை குறித்து இன்னொரு தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும். அதனை அமெரிக்கா செய்யும் என்றே எதிர்பார்க்கப்பட்டு வந்தது. தற்போதுள்ள நிலையில், அத்தகைய தீர்மானத்தை கொண்டுவரும் திட்டத்தை அமெரிக்கா பிற்போடக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கையின் புதிய அரசாங்கம் ஐ.நா. வின் தொழில்நுட்ப உதவியை பெற்று - நம்பகமான உள்நாட்டு விசாரணை ஒன்றை ஆரம்பிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறது. இந்த விசாரணைக்கு கால அவகாசத்தை கொடுப்பதற்கு அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. தெற்கு மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வாலின் கொழும்பு பயணத்தின்போது, இதற்கான இணக்கம் எட்டப்பட்டதாக கூறப்படுகிறது. அதேவேளை, பொதுநலவாய செயலர் கமலேஷ் சர்மாவும் கூட பொறுப்புக் கூறுவதற்கான உள்நாட்டு பொறிமுறையை உருவாக்கும் முடிவை வரவேற்றுள்ளார். அதுமட்டுமன்றி, அத்தகைய விசாரணைகளுக்கு உதவ பொதுநலவாய அமைப்பு தயாராக இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார். அதேவேளை பிரித்தானியாவிடமிருந்து சற்று வேறுபட்ட கருத்து வெளியாகியிருக்கிறது. புதிய உள்நாட்டு விசாரணைகளை பிரித்தானியா வரவேற்றாலும், ஐ.நா. வின் விசாரணைகளுடன் ஒத்துழைக்கவேண்டும் என்று கோரியிருக்கிறது. ஆனாலும், இலங்கைக்கு கால அவகாசத்தை கொடுக்கும் விடயத்தில் அமெரிக்கா சாதகமான நகர்வுகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளை நிராகரிக்கமுடியாது. ஏனென்றால், இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தை நிலையானதாக மாற்ற அமெரிக்கா விரும்புகிறது. இத்தகைய கட்டத்தில், ஜெனீவாவில் பிடியை இறுக்குவது விரைவில் நடக்கப்போகும் இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தரப்புக்கு சார்பான நிலையை உருவாக்கிவிடலாம். எனவே, தற்போதைய சாதகமான நிலையை மேலும் உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அமெரிக்கா ஒரு கால அவகாசத்தை கொடுக்கலாம். அது உள்நாட்டு விசாரணை பொறிமுறைக்கானது என்றாலும் கூட, இன்னொரு பக்கத்தில் இலங்கையில் தனக்கு சார்பான அரசாங்கத்தை பாதுகாக்கும் நோக்கத்தை கொண்டது என்பதையும் மறுக்கமுடியாது.

— — கே.சஞ்சயன் — —

www.tamilmirror.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. மோகன் சுய தொழிலுக்காகப் பாதணிகளை உற்பத்தி செய்கின்றான். பாதணிச்சோடி ஒன்றின் உற்பத்தி விலை ரூ500 ஆக இருக்கும் அதேவேளை, அதன் மூலப் பொருள்களுக்கான செலவும் வேலைக் கூலிக்குமிடையே உள்ள விகிதம் 3:2 ஆகப் பிரிக்கப்படுகின்றது. அவர் அப்பாதணிச் சோடி ஒன்றை ரூ625 இற்கு விற்கின்றார்.

அ. பாதணிச்சோடி ஒன்றை உற்பத்தி செய்கையில் மூலப்பொருள்களுக்கான செலவையும் வேலைக்கூலியையும் தனித்தனியே காண்க

ஆ. பாதணிச்சோடி ஒன்றை விற்பதன் மூலம் மோகனிற்குக் கிடைக்கும் இலாபச் சதவீதத்தைக் காண்க.

மூலப்பொருட்களுக்கான செலவு 12வீதத்தினால் அதிகரிக்கும் போது மூலப் பொருள்களுக்கான செலவுக்கும் கூலிக்குமிடையே உள்ள விகிதம் 4:3 ஆக இருக்குமாறு கூலி அதிகரிக்கின்றது அதற்கேற்ப,

இ. பாதணிச் சோடி ஒன்றின் தற்போதைய உற்பத்திச் செலவு யாது?

ஈ. முன்னர் பெற்ற அதே இலாபச் சதவீதத்தைப் பெறுவதற்குப் பாதணிச் சோடி ஒன்று தற்போது விற்கப்பட வேண்டிய விலை யாது?

02. முதல் உறுப்பு 8 ஆகவும், பொது விகிதம் 2 ஆகவும் உள்ள ஒரு பெருக்கல் விருத்தியின் 25ஆம் உறுப்பை 2இன் ஒரு வலுவாக காட்டுக

03. 1 கன சென்ரிமீற்றர் திரவம் = 1 மில்லிலீற்றர் எனக் கொண்டு 1 கன மீற்றர் = 1000 லீற்றர் எனக் காட்டுக.

04. $4x = 12$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### நீதிப் பாடல்கள் (புதிய பாடத்திட்டம்)

### முதுமொழி வெண்பா

இந்நூல் ஆசிரியர் புலவர்மணி அல்ஹராஜ் ஆ.மு.ஷரிபுத்தீன்இ கிழக்கிலங்கை தந்த பெரும் புலவர் ஆவார். மருதமுனையில் 04.05.1909 இல் பிறந்தவர். தமிழறிந்த நற்புலவரான இவர் பல்வேறு இலக்கிய நூல்களை ஆக்கியுள்ளார். கிழக்கிழங்கையின் முதல் முஸ்லீம் ஆசிரியர் என்ற பெருமைக்குரியவர். ஆசிரியராகஇ அதிபராகஇ கல்வி அதிகாரியாக பதவி வகித்தவர். இலங்கை அரசின் தேசிய இலக்கிய (சாகித்திய) விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். இவரது முதுமொழி வெண்பாவும் சூறாவளிப்படைப் போரும் எனும் நூல்களில் மாணவர்க்கு உகந்த பல அறிவுரைகளை கூறியுள்ளார். அந்நூலில் உள்ள ஒரு பாடலை இங்கு நோக்குவோம்.

**உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு அறு சுவை போல**
**தப்பிய கந்தைப் பீதாம்பரம் போல — ஒப்பும்**
**பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்**
**மனங்கொண்டது மாளிகையாகும்.**

**பாட்டின் பொருள்** - உப்பில்லாமல் காய்ச்சிய கஞ்சியினை அறுசுவை போல உண்பவர்களும் துவைத்த அழுக்கற்ற உடையை பெறுமதியான உடை போல அணிபவர்களும் பனையோலைப் பாயில் பஞ்சு மெத்தையில் படுத்து உறங்குவது போல் எண்ணுபவர்களும் மகிழ்வோடு வாழ்வர். மனங்கொண்டதே வாழ்வே.

### தமிழ் இலக்கியத் தொகுப்பு

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : வரலாறு

01. பிரித்தானியர் இலங்கையில் கவனஞ் செலுத்துவதற்குப் பின்வரும் எவ்விடயம் காரணமாக இருந்தது?
   1. தோட்டப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு உகந்த காணிகளைப் பெறுவதன் தேவை
   2. உள்நாட்டு மக்களைக் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுவதன் அபிலாசை
   3. இந்து சமுத்திரத்தில் கடல் நடவடிக்கைகளை வழிப்படுத்துவதற்குத் திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளல்
   4. இலங்கையின் கறுவா வர்த்தகம் தொடர்பான தனியுரிமையைப் பெறுவதன் தேவை

02. புனித தந்தம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டபோது இலங்கையில் ஆட்சி செய்த அரசர் யார்?
   1. மகாசேனன் 2. கித்சிறிமேவன் 3. லகம்பா 4. தாதுசேனன்

03. இந்தியாவிலிருந்து வெளிப்பிரதேசங்களுக்குக் குப்த பேரரசை விரிவு படுத்திய குப்த ஆட்சியாளராகக் கருதப்படுபவர் யார்?
   1. சமுத்திரகுப்தன் 2. 2ம் சந்திர குப்தன் 3. குமார குப்தன் 4. ஸ்கந்த குப்தன்

04. கலிங்க மாகனின் படையெடுப்பின் பின் இராசதானி தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்ததுடன் மக்களின் பொருளாதார, சமூக நடவடிக்கையும் மாற்றம் அடைந்தன
1. இந்தியாவின் அதிவீர ராம பட்டினத்தை ஆக்கிரமித்தல்
2. பாண்டி மன்னனுடன் நட்புக் கொண்டு தந்த தாதுவை மீட்டு வந்த மன்னன்
3. குருணாகலில் அந்துக்கல்புரவை தலை நகராக்குதல்

அ. மேற்படி நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஆட்சியாளர்களைத் தருக.
ஆ. கம்பளை இராசதானியாக தெரிவு செய்யப்பட்டமையில் பங்களித்த காரணிகள் இரண்டைத் தருக?
இ. 2ம் பராக்கிரம பாகுவின் சமய, அரசியல் பணிகளை சுருக்கமாக விளக்குக.
ஈ. தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்த காலத்தில் இடம் பெற்ற பொருளாதார மாற்றங்களை விவரிக்குக.

## Grammar

Ex 01: ***Complete answers to questions.***

01. Amy is in hospital, isn't she?
Yes, she <u>has been</u> in hospital since Monday.
02. Do you see Ann very often?
No, I ...................... her for three months.
03. Are you waiting for me?
Yes, she .................... married for ten years.
04. You know Linda, don't you?
Yes, we ................... each other for ages.
05. Do you still play tennis?
No, I ................... tennis for years.
06. Is Jim watching TV?
Yes, he ................ TV all evening.
07. Do you watch TV a lot?
No, I .............................. TV for a long time.
08. Have you got a headache?
Yes, I ...................... a headache all morning.
09. George is never ill, is he?
No, he ...................... ill since I've known him.
10. Are you feeling ill?
Yes. I ................. ill since I got up.
11. Sue lives in London, doesn't she?
Yes, she ........................ in London for the last few years.
12. Do you still go to the cinema a lot?
No, I ....................... to the cinema for ages.
13. Is Margaret married?
Yes, she ........................ married for ten years.

## பாடம் : விஞ்ஞானம்

01. பின்வருவனற்றுள் எது இரண்டாம் வகை நெம்புகோலைக் குறிக்கும்?
   1. பாக்குவெட்டி 2. கத்தரிக்கோல் 3. நிறுத்தாடி 4. சாவணம்

02. சரியான கூற்றுக்களைத் தெரிவு செய்க.
   அ. இந்தோ அவுஸ்திரேலியப் புவித்தட்டில் இலங்கை அமைந்துள்ளது.
   ஆ. புவியின் வெளிப்புறப்படை கற்கோளம் எனப்படும்.
   இ. சுனாமி அலையின் வீச்சம் ஆழமான கடலில் குறைவாகக் காணப்படும்.
   1. அ, ஆ சரி 2. ஆ, இ சரி 3. அ, இ சரி 4. மூன்றுமே சரியானது

03. நீரினூடாக ஒளியின் வேகம் குறிப்பது?
   1. $3.0 \times 10^8$ m/s 2. $2.25 \times 10^8$ m/s
   3. $2.0 \times 10^8$ m/s 4. $1.24 \times 10^8$ m/s

04. நீர், தேங்காயெண்ணெய், இரசம், தெரப்பந்தைலம் என்னும் நான்கு திரவங்களில் எத்திரவத்தைப் பயன்படுத்தும் போது குறைந்த உயரமுள்ள பாரமானியை அமைத்துக்கொள்ளலாம்?
   1. நீர் 2. தேங்காயெண்ணெய் 3. இரசம் 4. தெரப்பந்தைலம்

01. எமது சூழலில் பல்வேறு வகையான நுண்ணங்கிகள் காணப்படுகின்றன. இந்நுண்ணங்கிகளை எமது கண்களால் பார்க்க முடியாதவையாக இருக்கின்ற போதிலும் இவற்றை நுணுக்குக் காட்டிகளினூடாக அவதானிக்கக்கூடியதாக இருக்கும். நுண்ணங்கிகளால் எமக்கு பல தீமைகள் ஏற்படுகின்ற போதிலும் பல நுண்ணங்கிகளினால் எமக்கு நன்மைகளும் ஏற்படுகின்றன

1. நுண்ணங்கிகளினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டு தருக.
........................... ...........................
2. நுண்ணங்கிகளினால் ஏற்படும் நன்மைகள் இரண்டினைத் தருக.
........................... ...........................
3. பாலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் மூன்று தருக
........................... ........................... ...........................
4. பாலைப் பாதுகாக்கும் இரு முறைகளைத் தருக.
........................... ...........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 06

01. போட்டியில் பங்குபற்றிய அதிகமானோர் ஆண்பிள்ளைகளாவர். ஆண்பிள்ளைகளில் அனைவரும் பச்சை நிற ஆடை அணிந்திருந்தனர். சில பிள்ளைகள் ஆண் பிள்ளைகள் அல்லர்.
மேலே உள்ள விபரத்தின் படி பின்வரும் கூற்றுக்களுள் மிகச் சரியான கூற்று
(1) சகல பிள்ளைகளும் பச்சை நிற ஆடையே அணிந்திருந்தனர்.
(2) பச்சை நிற ஆடை அணிந்திருந்த அனைவரும் ஆண்பிள்ளைகளாவர்.
(3) பெண் பிள்ளைகளுள் சிலரும் பச்சை நிற ஆடை அணிந்திருந்தனர்.

02. வகுப்பிலுள்ள சகல உயரமான பிள்ளைகளும் பாடசாலைக் கரப்பந்தாட்டக் குழுவில் விளையாடுகின்றனர். பரமனும் பாடசாலை கரப்பந்தாட்டக் குழுவில் விளையாடும் உயரமான மாணவனாவான். அதன்படி பரமன் எனது வகுப்பில் கல்வி கற்கும் ஒரு மாணவனாவான். இக்கூற்று
(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது

03. முட்கள் உள்ள பழுதடைந்த கடிகாரமொன்று நாளொன்றின்,
(1) சரியான நேரத்தைக் காட்டும்
(2) சரியான நேரத்தைக் காட்டாது
(3) கூறமுடியாது

கீழேயுள்ள பந்தியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.
ராசுவின் நிறை 10 கிலோக்கிராமை விடக் கூடியதாகும். சுரேஸின் நிறை 40 கிலோக்கிராமை விடக் குறைந்ததாகும். சுதனின் நிறை 25 கிலோகிராமிக்கும் 50 கிலோக்கிராமிக்கும் இடைப்பட்டதாகும். அதன்படி,

04. மிகக் குறைந்த நிறையுடையவராக இருக்கக்கூடியவர்,
(1) ராசு (2) சுரேஸ் (3) சுதன்

05. ஒரு பிள்ளையின் நிறை 48 கிலோக்கிராமாகும். அந்தப்பிள்ளையின் பெயர் யாதாக இருக்கலாம்.
(1) சுரேஸ் அல்லது ராசு (2) சுதன் அல்லது சுரெஸ்
(3) ராசு அல்லது சுதன்

06. பவன் விளையாடித்திரியாமல் படிப்பில் கூடிய கவனம் செலுத்தியிருந்தால் வெட்டுப்புள்ளியை விடக் கூடிய புள்ளி பெற்றிருப்பான். இதன் கருத்து
(1) மிகக்குறைந்த புள்ளியைப் பெற்றுள்ளான்.
(2) வெட்டுப்புள்ளிக்கு குறைந்த புள்ளியைப் பெற்றுள்ளான்.
(3) வெட்டுப்புள்ளிக்கு கூடிய புள்ளியைப் பெற்றிருப்பான்.

07. நாக்கிலே இருக்கும் நன்மை தீமை என்பதன் கருத்து
(1) நல்லவைப் பேசினால் நன்மை கிடைக்கும்
(2) நமக்குக்கிடைக்கின்ற நல்லது கெட்டது எல்லாம் நாம் பேசுகின்ற பேச்சிலே தங்கியுள்ளது.
(3) நாவை அடக்கிப் பேசினால் தீமை உண்டாகும்.

08. "அடிவானத்தேயாங்கே பரிதிக்கோளம்" என்பது
(1) கிழக்குத் திசையில் சந்திரன் தோன்றுகின்றது.
(2) மேற்குத் திசையில் சூரியன் மறைகின்றான்.
(3) வடக்கு வானில் சூரியன் தோன்றுகின்றது.

09. இரவு வேளையில் மின்சாரத்தில் ஒளிரும் மின்குமிழில் படித்துக் கொண்டிருக்கும் போது மின்சாரம் திடீரென தடைப்பட்டது எனின் சிறிது நேரத்திற்கு எமது கண்ணுக்கு
(1) முழுமையாக இருட்டாக இருக்கும்.
(2) ஓரளவு வெளிச்சமாக இருக்கும்.
(3) முழுமையாக வெளிச்சமாக இருக்கும்.

10. போட்டிப் பரீட்சையொன்றில் புள்ளித்திட்டமிடலில் 50 விளாக்களில் சரியான விடைக்கு 2 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் பிழையான விடைக்கு ஒரு புள்ளி வீதம் கழிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. ராமன் அப்பரீட்சையில் 55 புள்ளிகளைப் பெற்றான் எனின், அவன் சரியாக விடையளித்த வினாக்கள் எத்தனை?
(1) 25 (2) 35 (3) 45



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு

குட்டிக்கதை

## செய்த பலன்

ஒரு காலத்தில் இந்திரத்யும்னன் என்று ஒரு மாமன்னன் இருந்தான். அவன் ஆட்சி காலத்தில் மக்கள் போற்றும் வண்ணம் தான தர்மங்கள் செய்து, சிறப்பாக அரசாண்டு, நேரே சொர்க்கத்திற்குப் போனான். சொர்க்கபுரியின் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனை ஒரு நாள் சொர்க்கத்தின் "தல" கூப்பிடுவதாக தேவதூதன் வந்து சொன்னான். மன்னன் சென்று என்னவென்று கேட்ட போது "உனக்கு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. பூலோகத்திற்கு நாளை கிளம்பத் தயாரக இரு" என்று கட்டளை போட்டது "தல". ஏனென்று மன்னன் கேட்டான். "மன்னா, நீ கீழே போய் உனது நற்காரியங்களால் இன்னும் பலன் பெறும் ஒரு ஜீவனையாவது கண்டு பிடித்தால் உனக்கு சொர்க்கம் நீடிக்கப் படும்" என்று சொன்னது.

மன்னனும் கிளம்பிப் பூலோகம் வந்தான். யாரையும் அவனால் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. மனதைத் தேற்றி நம்பிக்கையை ஏற்றிக் கொண்டு விடாமுயற்சியாகத் தேடி, இருப்பதிலேயே வயதான ஒரு மனிதரை சந்தித்தான். அவரிடம் "ஐயா! உமக்கு இந்திரத்யும்னன் என்று இந்தப் பகுதியை அரசாண்ட மன்னனைப் பற்றித் தெரியுமா?" என்று ஆர்வத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் கேட்டான். வயோதிகர் இடுங்கிய கண்களால் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கி விட்டார். "வேண்டுமானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப் பொந்தில் உள்ளது. அதனிடம் போய்க் கேள்" என்று சொல்லி விட்டார்.

தலையை முதுகுப் பக்கம் வைத்து ஒரு இரையைக் குறி வைத்துக் கொண்டிருந்த ஆந்தையிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். இரையைத் தப்ப விட்ட எரிச்சலில் ஆந்தை "எனக்குத் தெரியாது. இங்கே ஒரு கிழட்டு நாரை திரியும். வேண்டுமானால் அதைக் கண்டு பிடித்துக் கேள்" என்று சொல்லி விட்டு போய் விட்டது.

காலையில் அலைந்து திரிந்து நாரையைக் கண்டு பிடித்தான். அதனிடம் கேட்டபோது. "எனக்கு நினைவில்லை. ஆனால் பக்கத்து ஏரியில் ஒரு ஆமை கிடக்கிறது. அதற்கு நினைவிருக்க வாய்ப்பிருக்கிறது" என்று நம்பிக்கையை வளர்த்தி விட்டது.

மன்னன் ஏரியைத் தேடி ஓடினான். அங்கே வயதான ஆமையைப் பார்த்தான். மன்னன் அதனிடம் இந்திரத்யும்னனைப் பற்றிக் கேட்டான். ஆமை உடனே "ஆமாம். அவனால்தான் இந்த ஏரியும் இருக்கிறது, இவ் உயிரினங்களும் நன்றியுடன் உயிர் வாழ்கின்றன" என்று சொன்னது. அப்போது மன்னன் "நானேதான் அந்த இந்திரத்யும்னன்! எனக்கு இந்த ஏரியை ஏற்படுத்தியதாக நினைவில்லையே." என்று நம்பிக்கை இழந்து போய் ஆமையிடம் சொன்னான். ஆமையும் "நீ அரசாண்ட போது மக்களுக்குத் தினமும் தானமாக வழங்கிய பசுக்களை மக்கள் இந்தப் பகுதியிலுள்ள புல் தரையில் மேய விட்டார்கள். மாடுகள் தினமும் அலைந்து திரிந்து தன் குளம்புகளால் மண்ணைக் கிளப்பி விட்டதால் இந்தப் பகுதி நாளடைவில் பள்ளமாகப் போய் விட்டது. மழை பெய்து நீர் பிடித்ததால் ஏரியாக மாறிவிட்டது. இத்தனை நாள் நன்றியுடன் வாழ்ந்திருக்கிறேன். பல உயிரினங்களும் வாழ்கின்றன." என்றது.

**– செய்யும் நல்ல காரியங்கள் பல தலைமுறை தாண்டியும் வாழும் –**


## விடுகதைகளும் விடைகளும்

1. சேற்றுக்குள்ளே வாழ்பவனுக்கு ஆகாசத்தில் நண்பனாம்
2. விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னதாம்
3. ஏழு குதிரை பூட்டிய தேரில் வரும் மன்னவன்
4. மூவராய்ச் சேர்வார்கள், சிவப்பு வண்ணம் தீட்டுவார்கள்
5. புளிப்பான மீனுக்கு உப்பு போதலையாம், மூடி வச்ச ஜாடிக்குள்ளே உப்பில் நீந்துதாம்

**விடைகள்**
1. தாமரை, சூரியன்
2. கடிகாரம்
3. சூரியன்
4. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு
5. ஊறுகாய்

கே. பிரணவி,
தரம் -05
திருகோணமலை

இவ்வுருவில் யானைக்கு எத்தனை கால்கள் காணப்படுகின்றன?



4 | 5 | 6 | 3

## சிந்திக்க .. ..

நம்மிடம் எதுவும் இல்லை என்று நினைப்பது ஞானம்: நம்மைத் தவிர எதுவும் இல்லை என நினைப்பது ஆணவம்!

## பாருங்கள்

எந்தன் தம்பி - தங்கையே,
எழுந்து வந்து பாருங்கள்!
அந்தி வானம் பாருங்கள்,
அதன் நிறத்தைப் பாருங்கள்!

வட்டக்கதிரைப் பாருங்கள்,
வளைவு மலையைப் பாருங்கள்!
முட்டும் முகிலைப் பாருங்கள்,
மூடும் விதத்தைப் பாருங்கள்!

பறவைக் கூட்டம் பாருங்கள்,
பாடும் பாடல் கேளுங்கள்!
கறவை மாட்டைப் பாருங்கள்,
கன்றின் துள்ளல் பாருங்கள்!

வெள்ளை மதியைப் பாருங்கள்,
வெளிச்சம் தன்னைப் பாருங்கள்!
புள்ளிக் கூட்டம் பாருங்கள்,
போதும் போவம் வாருங்கள்!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு. கிண்ணியா)

## பொது அறிவு - 08

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. இலங்கையின் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் உற்பத்திப் பொருள் யாது?
ஆடை உற்பத்தி
02. இலங்கையின் இறக்குமதியில் முதலிடம் வகிக்கும் உற்பத்திப் பொருள் யாது?
பெற்றோலிய உற்பத்தி
03. முதன் முறையாக பார்வையற்றோர் விளையாடும் கரம் போட் இனை உருவாக்கியவர்?
D.R.மிலன் தோமஸ்
04. ஐக்கிய நாடுகள் சபையானது தானிய ஆண்டாக பிரகடனப்படுத்திய ஆண்டு? 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினக் கொண்டாட்டம் மூதூர் நிருபர்

67வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் மூதூரில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.








# 22வது தேசிய பாடசாலை தினம்

திருகோணமலை இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 22வது தேசிய பாடசாலைகள் தினம் ஞாயிற்றுக்கிழமை 01.02.2015 அனுஸ்டிக்கப்பட்டது. 01.02.1993ம் வருடம் இப்பாடசாலை கல்வி அமைச்சினால் தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் முதலாவது தேசிய பாடசாலையாகவும். இலங்கையில் 25வது தேசிய பாடசாலையாகவும் இக்கல்லூரி விளங்குகின்றது.

இதனைக் குறிக்கும் முகமாக இவ்வருடம் மாணவர்கள் மத்தியில் இல்லங்களக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டி நடத்தப்பட்டது. விவேகானந்தா இல்லம். சிவானந்தா இல்லம், இராமகிருஷ்ணா இல்லம். விபுலானந்த இல்லம் என மாணவர்கள் இதில் போட்டி இட்டனர்.

கல்லூரியின் பழைய மாணவனும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண காணி அமைச்சின் காணி உத்தியோகத்தருமான திரு சிவலிங்கம் ஞானலிங்கம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அதிபர் செபதமசீலன் தலைமையில் விளையாட்டு பிரிவினர் இதனை ஏற்பாடு செய்திருந்தனர்.







- கதிரவன் -

# கூடாரங்கள் வழங்கி வைப்பு

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு சித்தாண்டி உதயன் மூலை விவேகானந்தா வித்தியாலத்துக்கு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினால், நேற்று வெள்ளிக்கிழமை (06.02.2015) கூடாரங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் ரீ. வசந்தராஜா இதனை வழங்கி வைத்தார். பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் மற்றும் கிராமத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்குப் பாவிப்பதற்காக மூன்று கூடாரங்கள் பாடசாலை அதிபர் மனோன்மணி மகேஸ்வரனிடம் இதன்போது கையளிக்கப்பட்டன.

# குழந்தை இயேசுவின் கோலாகல விழா



திருகோணமலை உவர்மலையில் அமைந்துள்ள குழந்தை இயேசுவின் கோவிலின் கொடியேற்ற விழா மிக சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இன்று குழந்தை இயேசுவின் சுற்றுப்பிரகாரம் மிக விமர்சையாக இடம்பெறவுள்ளது. அத்துடன் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியிறக்கம் நிகழும்.

# தைப்பூச நிகழ்வு

திருக்கோணமலை - உவர்மலை அருள்மிகு ஸ்ரீ விநாயகப் பெருமான் ஆலயத்தில் தைப்பூசத் திருநாள் அன்று விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து பல பூசைகள் இடம்பெற்று பின்னர் விநாயகப் பெருமான் பக்தர்களுக்கு அருள் பாலிப்பதற்காக உள்வீதி வலம் வருவதையும், அங்கு நடைபெற்ற சிறுவர்களின் நடன நிகழ்வையும் காணலாம்.





# குடும்பம் என்பது மெய்க் காதலால் உருவாவது

## மக்கள் முரசு



காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி என்ற தொடர் பரவலாகப் புகழ்பெற்றது. இங்கே, காதல் என்ற சொல் மானுடவுயிர் இறையை அடையும் ஒன்றுதலைக் குறிப்பதற்காக வரும். அதைப்போலவே ஆடவன் ஒருவரின் உள்ளமும் பெண் ஒருத்தியின் உள்ளமும் அன்பினால் ஒன்று கலப்பதைக் காதல் என்று கூறுகிறோம். இரண்டு கண்கள் இருந்தாலும் இரண்டு வெவ்வேறு பார்வைகள் இல்லையே? இரு கண்களின் பார்வையும் ஒருகிணைந்தால்தானே ஒரு பொருளைப் பார்க்க முடியும். காதல் என்பதும் இரண்டு மனங்களின் சரியான சங்கமமாகத்தான் இருக்க வேண்டும். இன்றைக்கும் காதல் அந்த மாதிரியாகத்தான் இருக்கிறதா என்பதுதான் கேள்வி.

இன்றைக்குக் காணப்பெறும் காதல் என்னென்ன காரணங்களால் உருவாகிறதெனப் பார்க்கலாம்.

1. தாம் கண்ட, கேட்ட, படித்த காதலர்களைப் போலத் தாமும் இருக்க வேண்டுமென்ற உந்துதலால், போலச் செய்வதாகக் காதல் கொள்வது.

2. நவீன உலகத்தில் வாழ்வதாகக் காதல்புரியும் போலி மனப்பான்மை.

3. பருவ வயதின் காரணமாக, வாலிபப் பருவக் கோளாறு காரணமாகக் காதலிப்பது

4. ஒரு பாலினம் மற்ற பாலினம் கொண்டுள்ள அழகு, புகழ், தீரம் இவற்றில் மயங்கி விருப்பம் கொள்வது.

5. பொழுதுபோக்கிற்காகவும் நேரங்கடத்தவும் நடப்புக்காலக் கலாசாரம் என்பதற்காகவும் காதல் மேற்கொள்வது.

6. திரைப்படம், இதழ்கள், தொலைக்காட்சிகள் வெளிச்சம் போட்டுக்காட்டிய காதல் உலகில் தம்மையும் இணைத்துக் கொள்ள விரும்புவது.

7. சில இடங்களில் ரொக்கம், காதலுக்கான அடிப்படையாவது.

8. பெற்றோர், உறவினர் ஆகியோரிடம் கிடைக்காத இனந்தெரியாத அன்பு எவரால் தரப்பெறுகிறதோ அவரைத் தமக்குரியவராகக் கருதிக் காதலிப்பது. இவைபோல எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். ஆனால், காதல் என்பது நேர்மையானதாக இருக்க வேண்டும். ஆனால் மின்னல் போல் தோன்றி மறைந்துபோகும் காதல்களே மிகுதியாகத் தென்படுகின்றன.

முப்பது, நாற்பதாண்டுகளுக்கு முன்பெல்லாம் காதல் பற்றிய திரைப்படங்கள் நாகரிகத்தைக் குலைக்காதவாறு வெளிவந்தன. வெற்றிபெறாத காதலை உள்ளடக்கிய படங்கள்கூட அமரகாவியம் எனப் போற்றப்பட்டன. தெய்வீகக் காதல் என்ற சொல் அழுத்தமாக உச்சரிக்கப்பெற்றது. இன்று தலைகீழாக யாவும் மாறிப்போய்விட்டன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், தமிழாக்கத் தொடர்கள், புராணக் கதைகள் தவிர, ஏனைய நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் காதல் உணர்வு கொச்சைப்படுத்தப்படுகிறது என்பது அப்பட்டமான உண்மை. ஒரு பெண்ணைப் பல ஆடவர்கள் காதல் கொள்வது அல்லது ஆண்மகன் ஒருவனை நங்கையர் பலர் காதல் கொள்வது, முறைகேடான காதல் நிலைகளை மேற்கொள்வது, என்பன போன்ற கதைப்பகுதிகளே பரவலாகத் தென்படுகின்றன. இதனால் இவற்றைப் பார்க்கும் இளம் பருவத்தினரின் உள்ளங்களில் கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சு கலக்கப்பெறுகின்றது.

காதல் என்பது தேவையற்றதாகவோ, தீண்டத்தகாததாகவோ கருதப்பெறும் ஒன்றல்ல. சரியானதாகவும் நெறியானதாகவும் வடிவமைக்கப்பெற்ற காதல் வாழ்க்கையே மிகவும் சிறந்தது. காதலித்து இல்லறத்தை மேற்கொண்டவர்களின் வாழ்க்கையில் சிக்கல்களும் பிரிவுகளும் ஏற்பட என்ன காரணம்? திருமணத்திற்குப் பிறகும் காதல் தொடரப்படாததுதான். காதலால் பல பயன்கள் உண்டு. அது சாதி, மதம் பார்ப்பதில்லை. மொழியோ, வட்டாரமோ காதலை முடமாக்கிவிடாது. அழகு, பணம், வேறு கூறுகள் காதலுக்கு இடைஞ்சலாக அமைவதில்லை. உண்மையான காதலுக்கு நேரம், வயது, வாழுமிடம் போன்றவை முட்டுக்கட்டை போடுவதில்லை. முறைப்படியான காதல் காலங்கடந்து நிற்கும். மெய்ம்மை உணர்வுடன், நியதிகளுக்கு உட்பட்ட காதல் அங்கொன்று இங்கொன்றாக மட்டுமே வெகு அரிதாகத் தென்படுகின்றது.

நல்ல காதலுக்கு வாழ்த்துமடல் வாசிப்போம். பாரதியுடன் சேர்ந்து நாமும் பாடுவோம்: ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே. காதல் செய்து குடும்பத்தை பரம்பரையை வளம்பெறச் செய்வோமா!

– தொகுப்பு – தன்யா –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர்....

மாயையை அடுத்து அங்கு தாமாகவே சென்று குடியேறிய 19 குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் மக்களே தற்போது கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர்.

இவ்வாறு குடியேறிய மக்கள் தொடர்பாக எவ்வித பதிவுகளும் நிர்வாகத்தரப்பினரால் தற்போதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் தற்காலிகக் கொட்டகைகளுக்காக தமிழ் அரசியல்வாதிகளால் வழங்கப்பட்ட கிடுகுகளைத் தவிர அம் மக்கள் மீளக்குடியேற வேறு எந்தப் பொருட்களும் தற்போதுவரை வழங்கப் படவில்லை.

அன்றைய தினமே (5) தற்காலிய மனைகளை அமைத்த அப் பத்தொன்பது குடும்பங்களைத் தவிர ஏனை எவரையும் குடியேற அனுமதிக்காத அரச தரப்பு குடியேறியுள்ள மக்கள் தொடர்பாக மிகவும் அமைதி காப்பதாகத் தெரிகின்றது.

அதேவேளை உள்ளூர அரசியல்வாதிகளும் இவ்விடயத்தை வெளிப்படுத்தத் தயங்குவதாகத் தெரிவிதுடன் இவ்விடயத்தை வெளிப்படுத்த முயலும் மக்கள் செயற்பாடுகளையும் தடுத்துவருவதாக அறியக் கிடைக்கின்றது.

## அபிவிருத்தியால்

யான்ஓயாவின் தாம்போதியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் நீளம் வரையில் திருத்தப்பட்ட பெருந்தெருவானது உரிய முறையில் அளவிற் பெரிய கான்களைக் கொண்டதாக அமைக்கப்படாமையால் பெருந்தெருவை மேவி நீர் மாய்ந்து செல்லும் அளவுவரை நீர் அங்கு தேங்குவதாகவும் அவ்வாறு அப்பிரதேசத்தில் தேங்கும் நீரினால் திரியாய் கிராமத்தினுள்ளும் நீர் தேங்குவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மிகவும் அதிகமாக நீர் வந்தால் பெருந்தெருவைமேவி நீர் பாய்வதாகவும் அதனை விட முக்கியமாக மழைநீர் கடலிற் கலக்கும் கல்லறாவ களப்பு முனைப்பகுதியில் பேரினவாத அரசியல்வாதியொருவருக்கு உல்லாவிடுதி நிர்மாணிக்க வசதி செய்து கொடுக்கப்பட்டதால் வெள்ளநீர் கடலினுள் கலப்பது தடுக்கப்பட்டிருப்பதாகவும் மக்கள் குறைபட்டுக் கொண்டனர்.

அபிவிருத்தியின் பெயரால் விவசாய நிலங்கள் அழிக்கப்படுவதால் திரியாய் தமிழர்களின் வாழ்வாதாரம் அழிவடைந்துவருகின்றது.

விவசாயத்தை விடுத்து வேறு தொழில்களை நாடி மக்கள் பயணப்படவேண்டிய தேவை எழுந்துள்ளது.

## கிழக்கிலும் வடக்கிலும் ...

தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

வடக்கு,கிழக்கு இணைந்த ஏனைய பிரதேசங்களிலும் இராணுவ குறைப்பிற்கு இடமில்லை.

ஆனாலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றை பெற்றுக் கொடுத்து தேசிய பாதுகாப்பையும் பலப்படுத்த வேண்டுமே தவிர தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களை சுயநல அரசியலுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டாம்.

மேலும் கடந்த காலங்களில் இராணுவம் தொடர்பான தவறான கருத்துக்களும் ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்டுள்ளது.

எனவே தமிழ்மக்களின் பிரச்சினைகள் மற்றும் இடையூறு தொடர்பிலும் அரசு என்ற வகையில் கவனம் செலுத்தி இதற்கு தீர்வொன்றையும் பெற்றுத்தரும் அதேசமயம் இராணுவ முகாம்களும் எந்தவிதத்திலும் அகற்றப்படமாட்டாது எனவும் திட்டவட்டமாக அவர்

## சுகிர்தராஜன்.....

சற்சிவானந்தம், சாலி, வடமலை ராஜ்குமார், மற்றும் அச்சுதன் ஆகியோர் மறைந்த சுகிர்தராஜனை நினைவு கூற, மாயன் மறைந்த லசந்த விக்ரமதுங்கவை நினைவு கூர்ந்தார்.

இதனைத் தொடர்ந்து சிறப்புரையாற்ற பலவருட ஊடகவியல் அனுபவத்தைக் கொண்டவரும் , உதயன் - சுடரொளி நாளிதழ்களின் முன்னாள் பிரதம ஆசிரியருமான என்.வித்தியாதரன் "போர்க்காலச் சூழலில் ஊடகப்பணி" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றியிருந்தார்.

அத்துடன் நிகழ்வில் பாரதியாரின் பாடலை மிகவும் இசைநயத்துடன் உவர்மலை விவேகானந்தா பாடசாலையினர் இசைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில்...

மிகவும் கீழ்த்தரமான விடயமாகும்.

அம்பாறை மாவட்டத்தினை பொறுத்தவரையில் தமிழர்கள் அரசியல் அனாதைகளாகவே பார்க்கப்படுகின்றார்கள். எந்த அபிவிருத்திகளோ, வேலை வாய்ப்புக்களோ, அற்ற நிலையில்தான் இவர்களது செயற்பாடு தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றது.

இவ்வாறு தமிழர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதன் காரணமாக எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தினை பொறுத்த வரையில் சிங்களப் பெரும்பான்மை அரசியல் வாதிகளிடம் சென்று தங்களது தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய நிலை உருவாகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்து காணப்படுகின்றது.

இச்செயற்பாடானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால அரசியல் செயற்பாட்டிற்கு ஆக்கபூர்வமான செயலாக அமையாது.

முஸ்லிம் காங்கிரசின் தலைவரைக்கொண்டு தொன்று தொட்டு கல்முனையில் இயங்கி வந்த கல்முனை பொது நூலகத்தின் பெயரை தங்களுக்கு ஏற்றவாறு பெயர் மாற்றம் செய்து, அதில் முஸ்லிம் ஒருவரின் பெயரை பொறித்தார்கள்.

ஆனால் பன்னெடும் காலமாக தமிழர் தரப்பில் முன்வைக்கப்பட்டு வந்த கலாசார மண்டபத்திற்கான அனுமதியினை வழங்காமல் இழுத்தடிப்பு செய்து வருகின்றார்கள். இதே போன்றுதான் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவதிலும் முற்றுமுழுதாக தடையேற்படுத்தி வருகின்றார்கள் என்பதுதான் உண்மை.

இதனை புரிந்து கொள்ளாத த.தே.கூட்டமைப்பின் தலைமைகள் தமிழ் முஸ்லிம் உறவுகள் பலப்படுத்தப்பட வேண்டும். அதற்கு நாம் அனைவரும் உழைக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

பலப்படுத்துவதற்காக உழைத்தும் வருகின்றார்கள். ஆனால் அம்பாறையில் மக்களுடன் இருந்து பணியாற்றுபவர்கள் நாங்கள்தான். அதன்காரணமாகவேதான் எமது மக்கள் எங்களை நோக்கி நேரடியாக கேள்விகள் கேட்கின்றார்கள்.

அவர்களுக்கான சரியான பதிலினை கொடுக்க முடியாதவர்களாக அம்பாறையில் அரசியல் செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம் எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

## வலய மட்டத்தில்....

இடமாற்றங்களை வலய மட்டத்தில் மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ள அவர் இடமாற்றச்சபையில் ஆசிரியர் தொழிற்சங்க அங்கத்தவர்கள் இடம்பெறுவகை கட்டாயமாகப் பின்பற்றுமாறு கோரியுள்ளார்.

அவ்வாறு ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளற்ற இடமாற்றச்சபையொன்று ஏன் கூட்டப்பட்டது என்பதை தெளிவாக விளக்கி கடிதமொன்றைத் தனக்கு அனுப்பிவைப்பதுடன் அவ்வாறு ஆசிரியர் தொழிற்சங்கவாதிகள் இல்லாமல் கூட்டப்பட்ட இடமாற்றச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்ற பட்டியலையும் தனக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

வருடாந்த இடமாற்றங்களை மேற்கொண்ட பின்னர் அவை தனிப்பட்ட அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக மேற்கொள்ளப் பட்டிருப்பின் ஒட்டுமொத்த இடமாற்றச் சபைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிசாம் தெரிவித்துள்ளார்.



**கிழக்கின் முதல்வராக ஹாபிஸ் நசீர் பதவியேற்றபோது**



ஹாபிஸ் நசீர் அவர்களுக்கு ஆளுனர் ஒஸ்றின் பெர்ணாண்டோ நியமனம் வழங்கிய போது (கதிரவன்)

## மாற்றுப் பொறிமுறை...

அவரது ஊடக அறிக்கையின் படி கிழக்கில் கூட்டாட்சிதான் அமைய முடியும். தனித்து எந்த இனமும் ஆட்சியமைக்க முடியாது. கிழக்கு மாகாணசபையில் 11 உறுப்பினர்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உறுப்பினர்களது கருத்துக்களுக்கும் மக்களது அபிலாசைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அதனூடாக ஏனைய சமூகத்தினது ஆதரவையும் பெற்று பலத்தை நிருபித்து முதலமைச்சருடன் உறுதியான ஆட்சியமைக்க வேண்டும்..

மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளியாது தலைமைகள் செயற்பட முற்படுமாயின் மக்கள் வீதியிலிறங்க வேண்டி நேரிடும் எனவும் எச்சரித்துள்ளனர். எதிர்வரும் பொதுத்தேர்தல் பற்றியும் இத்தலைமைகள் சிந்திக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆட்சியமைப்பு விடயத்தில் இழுபறிநிலை இன்னும் தொடர்கிறது. அதற்காக கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களை நட்டாற்றில் விடமுடியாது. எனின் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைகள் மாற்று பொறிமுறையை முன்வைக்க வேண்டும். சிந்திக்க வேண்டும்.

மாற்றத்திற்காக மைத்திரிபாலவிற்கு வாக்களித்த தமிழ் மக்களை நாம் ஏமாற்ற முடியாது. கிழக்கு நிலவரம் எமக்குத்தான் தெரியும். மக்களில்லாமல் அரசியல் இல்லை. மக்களுக்காகத்தான் அனைத்தும். அவர்களது அபிலாசைகளை புறந்தள்ளிவிட்டு அரசியல் நடாத்த முடியாது. வரலாறு பூராக தவறுகளையே செய்து வரலாறே தவறாகிவிடக்கூடாது.

இனியும் அதனைத் தொடர அனுமதிக்க முடியாது.கிழக்கில் 40 வீத தமிழர்களும் 37வீத முஸ்லிம்களும் 23வீத சிங்களவரும் உள்ள நிலையில் தமிழ்த் தரப்பினருக்கு முதலமைச்சர் உள்ளிட்ட ஆட்சியதிகாரத்தை பெறுவதில் தார்மீக உரிமையுள்ளது. அதனை கிழக்கின் மற்றுமொரு சிறுபான்மைச் சமுகத்துடன் இணைந்தாவது பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமுள்ளது.

அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காவிடின் அடுத்த தேர்தலில் அதேமக்கள் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்தவாறு மாற்றத்திற்காக வாக்களிக்க நேரிடும் என்பதையும் வேதனையுடன் தெரிவிக்கின்றோம்.

எனவே கிழக்கு தமிழ் மக்களது உணர்வுகளை உதாசீனம் செய்து அலட்சிய மனப்பாங்கோடு செயற்படும் மத்திய அரசுக்கான ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதலமைச்சராக....

கிழக்கு மாகாண சபையின் மற்றைய முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்களின் ஆதரவைக் கடிதம் மூலம் மு்காவின் தலைவர் கோரியிருந்தார்.

ஏனைய அங்கத்தவர்கள் அனைவரும் ஆதரவுக் கடிதத்தைச் சமாப்பித்திருந்த போதும் ஜமீல் மட்டும் அக் கடிதத்தைச் சமர்ப்பிக்கவில்லை. இதனையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஏ.எம்.ஜெமீலை கட்சியின் உறுப்புரிமைகளில் இருந்தும் அவர் கட்சியில் வகித்த சகல பதவிகளிலிருந்தும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்தியுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் பிரதி அமைச்சர் எம்.ரி.ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

கட்சியின் கட்டுப்பாடுகளை மீறியமை மற்றும் கட்சிக்கு களங்கம் ஏற்படுத்தியமை ஆகிய காரணங்களுக்காக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல், தலைவர் அமைச்சர் ஹக்கீமினால் அவர் வகித்து வந்த அதிஉயர் பீட உறுப்பினர், இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் உட்பட கட்சியின் சகல பதவிகளிலிருந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதை கடிதம் மூலம் அனுப்பி வைக்கப் படவுள்ளதாகவும் செயலாளர் நாயகம் பிரதி அமைச்சர் ஹஸனலி மேலும் தெரிவித்துள்ளார்.

## விசாரணைகள்....

இக்குழுவில் பேரவைச் செயலாளர் எம்.சி.எம் செரீவ், சிரேட்ட கணக்காளர் எம். அக்ரம், உள்ளகக் கணக்காய்வுக் கட்டுப்பாட்டாளர் பரிசோதகர் மீனாட்சி சுந்தரம் மற்றும் சுகாதார அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் எம்.பிரியந்த ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாய்மையே வெல்லும்

## உண்மையே பேசு உனை மக்கா அழைப்பான் அல்லாஹ்



கடந்தவாற தொடர்ச்சி .. ..

இந்நிலையில், அபூசு.ஃ.ப்யான் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் நபியே! என்னிடமிருந்து நீங்கள் மூன்றை ஏற்றுக் கொள்ளவேண்டும்! என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், சரி! ஏற்றுக் கொள்கிறேன் என்றார்கள். அரபு மக்களில் மிகவும் கவர்ச்சி மிக்க, அழகான என்னுடைய மகள் உம்மு ஹபீபாவை உங்களுக்கு மணமுடித்துத் தருகிறேன்! என்றார்கள். அதை நபி (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இரண்டாவதாக, என்னுடைய மகன் முஆவியாவை உங்களுடைய எழுத்தாளனாக நியமிக்கின்றேன்! என்றார்கள். அதையும் ஏற்றுக் கொண்டார்கள். மூன்றாவதாக, நான் முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் செய்தது போன்று இறை நிராகரிப்பாளர்களை எதிர்த்துப் போரிட என்னை படைத் தளபதியாக்க வேண்டும்! என்றார்கள். அதையும் நபி (ஸல்) அவர்கள் ஏற்றார்கள்.

அபூசு.ஃ.ப்யான் (ரலி) அவர்கள் முன்வைக்கும் அனைத்துக் கோரிக்கைகளையும் மறுக்காமல் அப்படியே ஏற்றுக் கொள்வராக நபி (ஸல்) அவர்கள் இருந்தார்கள் என்று அறிவிப்பாளர்களில் ஒருவரான அபூசுமைல் அவர்கள் கூறுகிறார்கள். (அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் -ரலி, நூல்: முஸ்லிம்)

மக்கா வெற்றியின்போது, அபூசு.ஃ.ப்யானையும் அவர்களின் சஹாக்களான குரைஷிகளையும் பழிவாங்க வேண்டும் என முறையிட முனைந்தேன். 'உங்கள் மீது இன்றைய தினம் எந்தக் குற்றமுமில்லை! அல்லாஹ் உங்களை மன்னிப்பான்! அவன் கருணையாளர்களில் மிகப் பெரும் கருணையாளன் (அல்குர்ஆன் 12:92) வசனத்தை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்ட நான் அதிர்ச்சியால் மௌனமானேன் என்றார்கள் உமர் (ரலி).

சமூக வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் வரலாறு முக்கியப் பங்கு வகிக்கிறது. இன்றைய நிகழ்வு நாளைய வரலாறு! எனவே நம்முடைய நடவடிக்கைகளை படிப்பினை தரும் வரலாறாக மாற்றவேண்டும். இஸ்லாத்தின் எதிரிகளை அதன் சேவகர்களாக மாற்றியமைத்த வரலாறு கண்டோம். வாய்மையான நடத்தைகளால் மனித உள்ளங்களை வெல்வோமாக!

முற்றும் .. .. எம்.முஜிபுர்ரஹ்மான்



## பிரியாணி

### மீன் பிரியாணி

**தேவையான பொருட்கள்**

மீன் - ¼ கிலோ, அரிசி - 2 சுண்டு, வெங்காயம் - 150 கிராம், தக்காளி - 150 கிராம், இஞ்சி, பூண்டு விழுது – 2 தே.கரண்டி, புதினா, கொத்தமல்லி இலை - ¼ கட்டு, மிளகாய்த்தூள் - 1 தேகரண்டி, தனியாத்தூள் - 1 தே.கரண்டி, மஞ்சள்தூள் - ¼ தே.கரண்டி, தயிர் - 1 கப், உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - ½ குழிக் கரண்டி



**செய்முறை**

மீனை சுத்தம் செய்து துண்டுகளாக்கவும். பின்னர் வெங்காயம், தக்காளியை பொடியாக நீள வாக்கில் நறுக்கவும். மிளகாயைக் கீறிக்கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரம் அல்லது குக்கரில் எண்ணை ஊற்றி காய்ந்ததும் பட்டை, லவங்கம் சேர்த்து தாளிக்கவும். வெங்காயம், இஞ்சி, பூண்டு விழுது, தக்காளி, புதினா, கொத்தமல்லி இலை இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வதக்கவும். தயிர் மற்றும் போதுமான அளவு உப்பு சேர்த்து மீனை வதக்கவும். தொடர்ந்து மிளகாய்த்தூள், தனியாத்தூள், மஞ்சள் தூள் சேர்க்கவும். பின் பாசுமதி அரிசி ஒன்றரை பங்கும், சாதா அரிசி 2 பங்கும் சேர்த்து வேக வைக்கவும். பாத்திரத்தில் "தம்" சேர்த்து (ஆவி போகாமல் மூடி வைத்து) சிறிது நேரத்தில் இறக்கவும். குக்கரில் ஒரு விசில் வந்ததும், குறைந்த தீயில் வைத்திருந்து அடுப்பை அணைத்து விடவும். சுவையான மீன் பிரியாணி மணமணக்க ரெடி.

---

## ஃபேஷன் செருப்பு போடணுமா?

அழகு குறிப்பு



குதிகால் செருப்புகள் பெண்களுக்கு கம்பீரமான தோற்றத்தை மட்டுமின்றி தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் கொடுக்கிறது! இதனால், குட்டையான பெண்கள் தங்களுக்கு உயரமும் கம்பீரமான தோற்றமும் கிடைக்க உயரமான குதிகால் செருப்புகளைத் தேடி அதிகவிலை கொடுத்து வாங்கி அணிகிறார்கள்.



குதிகால் செருப்பணியும் 50 சதவீத பெண்கள் குதிகால் வலியுடனும் அவதிப்படுவதுண்டு. குதிகாலின் பின்பக்கம் சிலருக்கு சிவந்து வீங்கியிருக்கும். அவர்களது காயம் வெளியே தெரியாமல் குதிகாலின் உள்ளெலும்பில் கீறலோ அல்லது முறிவோ ஏற்பட்டிருக்கலாம்.



இயல்பு நிலை பாதிக்கும் வண்ணம் குதிகால் நரம்பு விண்விண்ணெனத் தெறிக்கிற மாதிரி "நியுரோமா" எனப்படும் கடுமையான வலி ஏற்படலாம்.

குதிகால் செருப்புகளை நீண்டநேரம் அணியும்போது குதிகால் தசைநார்கள் சுருங்கிப் போகும். அதிக உயரமான குதிகால் செருப்புகளை நீண்டநேரம் அணியும் போது முதுகுத் தண்டில் விரிசல் ஏற்பட்டு அதிக அழுத்தம் ஏற்படுவதுடன், முழங்கால் மூட்டுவலியும் ஏற்படும். இவற்றைத் தவிர்த்து எமக்கு பொருத்தமான பாதணியை ஃபேஷனாக அணிந்து கொள்ளல் அவசியமானதாகும்.



# மருத்துவம்

## நகம் கடிப்பவரா நீங்கள்!!!

பெரும்பாலான நபர்களுக்கு நகம் கடிக்கும் பழக்கம் உண்டு, ஆனால் இது மிகவும் மோசமான ஒன்றாகும். நகம் கடிப்பதால் பல்வேறு ஆரோக்கிய பிரச்சினைகளை சந்திக்க நேரிடும், இதனை ஆரம்பத்திலேயே நிறுத்தி விடுவது நல்லது.



- சிறுவர்கள் அடிக்கடி நகம் கடிக்கும் பட்சத்தில், செரிமானம் ஆகாத உணவுத் துகள்கள் குடல் வால் பகுதியில் சேகரமாகும். இதனால் அப்பன்டிசைட் எனப்படும் குடல் வால் வருவதற்கும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.
- தொடர்ந்து பற்களால் நகங்களை கடிக்கும் போது அது பற்களின் எனாமலை பாதித்துவிடும், பற்களில் பக்டீரியா, வைரஸ் கிருமிகள் ஊடுருவி மேல் தாடையையும் கீழ் தாடையையும் முழுதாக மூட முடியாத நிலை கூட ஏற்படும்.
- நகம், பாக்டீரியா வளரும் இடம். சல்மனெல்லா (Salmonella), இ.கோலி (E.Coli) பக்டீரியாக்கள் நகம், விரல் நுனிகளில் இருக்கும் அழுக்குகளில் இருக்கின்றன. இதனால் நகங்களைக் கடிக்கும் போது அவை வாய் வழியே உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவி எளிதாய் நோய் தொற்றிக்கொள்ளும்.
- நகங்களை கடிப்பதால், நகத்தை சுற்றியுள்ள சருமம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும்.
- நகம் கடிக்கும் பழக்கம் அடிக்கடி இருந்தால், புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்ளன.

---

## வலிப்பு நோயாளர்களின் கவனத்திற்கு



வலிப்பு நோய்க்கு வயது வரம்பே கிடையாது, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எந்த வயதில் வேண்டுமானாலும் வரலாம். நரம்பு செல்கள் தேவையற்ற மற்றும் அளவுக்கு அதிகமான மின்னணு தன்மையை வெளியிடும் போது ஏற்படும் விளைவே வலிப்பு நோய் ஆகம். இதனை காக்காய், ஜன்னி, பிட்ஸ் (fits) மற்றும் எபிலெப்ஸி (epilepsy) என்றும் அழைக்கலாம்.

**செய்ய வேண்டியவை**

தவறாமல் மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும், நல்ல உணவு, உடற்பயிற்சி, தியானம் மற்றும் சிந்தனை உங்களை நல்வழிப்படுத்தும்.

**செய்யக் கூடாதவை**



- மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் மருந்து எடுத்துக் கொள்வதை நிறுத்தக்கூடாது.
- சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ள வேண்டும்.
- நீர்நிலைகளில் நீராடுவது ஆபத்தான ஒன்று.
- தேவையற்ற மன உளைச்சல், மதுபானம் மற்றும் போதைப் பொருட்கள் வலிப்பு வருவதை தூண்டலாம்.

---



## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். உறவினர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். பணச்செலவு அதிகரிக்கும்.

**ரிஷபம்** : சொத்தின் மீது கடன் பெற, நம்பகமானவர்களிடம் வாங்குவது நல்லது. வீடு, வாகனத்தில் பாதுகாப்பு முறை தவறாமல் பின்பற்றவும்.

**மிதுனம்** : நண்பர், உறவினர் உங்களிடம் நல்அபிப்ராயம் கொள்வர். வீட்டில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். வாகன பயன்பாடு சில நன்மை தரும்.

**கடகம்** : புத்திரரின் குழப்பமான செயல் நல்வழிகாட்டுதலால் சரிசெய்வீர்கள். உடல் நல ஆரோக்கியம் பலம்பெறும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார்.

**சிம்மம்** : ஒவ்வொரு செயலிலும் தகுந்த திட்டமிடல் அவசியம். வார்த்தையில் நிதானம் பின்பற்றுவதால் நற்பெயருக்கு குறை வராது.

**கன்னி** : புதிய வாகனம் வீடு வாங்க சிலருக்கு யோகம் உண்டு. எதிர்மனப்பாங்கு உள்ளவர் மறைமுகமாக உங்களிடம் உதவி பெற விரும்புவர். இல்லறத்துணையின் தாமத செயல்களை குறை சொல்ல வேண்டாம்.

**துலாம்** : பேசும் வார்த்தை மங்களமாக இருக்கும். உடன்பிறந்தவர்களின் அன்பு, ஆலோசனை கிடைக்கும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்ற வேண்டும்.

**விருச்சிகம்** : குடும்பத்தில் மங்கல நிகழ்வு, உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். போக்குவரத்தில் கவனநடை பின்பற்றவும். புத்திரரின் மனக்கவலை மாற தகுந்த ஏற்பாடு செய்வீர்கள்.

**தனுசு** : மனதை ஒருமுகப்படுத்துவதால், பணி திட்டமிட்டபடி நிறைவேற்றலாம். பணத்தேவையின் அளவு அதிகரிக்கும். கெடுபிடிகுணம் உள்ளவர்களிடம் கடன் வாங்க வேண்டாம்.

**மகரம்** : உடன்பிறந்தவர்களின் மனதில் நல்லதொரு மாற்றம் உருவாக உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் நம்பகத்தன்மை இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம்.

**கும்பம்** : உடன்பிறந்தவர்களின் நம்பிக்கை குறைந்த பேச்சு, செயலை விமர்சிக்க வேண்டாம். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரர் தன்னையும் உணர்ந்து, உங்களுக்கும் உதவியாக செயல்படுவார்.

**மீனம்** : வீட்டில் செல்வ வளம், மகிழ்ச்சி சிறப்பாக அமைந்திடும். புதிய வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர் வேத சாஸ்திரம் அறிவதில் ஆர்வம் கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## உள்ளூர் விளையாட்டு செய்திகள்

### கார்கண் கிரிக்கட் போட்டி



ஹட்டன் கார்பெக்ஸ் தமிழ் வித்தியாலயமும் நோட்டன் கணபதி தமிழ் வித்தியாலயமும் இணைந்து வருடாந்தம் நடத்தும் கார்கண் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் கார்பெக்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டி, அதிபர்களான வீ.உதயகுமார், என்.சண்முகலிங்கம் ஆகியோர் தலைமையில் காசல்ரி விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை நடைபெற்றது.



### கரப்பந்தாட்ட மைதானம்

ஊருக்கு ஒரு வேலை திட்டம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், கல்பிட்டி வீதி நுரைச்சோலை இலந்தையடியில் புதிய கரப்பந்தாட்ட மைதானம் ஒன்று அமைக்கப்பட்டு கரப்பந்தாட்ட வீரர்களின் பாவனைக்கு கடந்த புதன்கிழமை மாலை கையளிக்கப்பட்டது. கல்பிட்டி பிரதேச சபை தலைவர் எம்.எச்.எம்.மின்ஹாஜ் மேற்கொண்ட முயற்சியின் பலனாக 14 இலட்சம் ரூபாய் செலவில் இந்த கரப்பந்தாட்ட மைதானம் அமைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### கால்பந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவு

இலங்கை கால்பந்து சம்மேளனம், கால்பந்து மத்தியஸ்தர்களுக்கான தரப்படுத்தல் மற்றும் இணைத்துக் கொள்வதற்கான பரீட்சைகள் இன்று சனிக்கிழமை கொழும்பு அமீர் அல்ஹீசைனியா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. இதற்கு முன்னோடியாக உடல்தகுதி பரீட்சைக் நடத்தப்படுகின்றது. கிழக்கு மாகாண விண்ணப்பதாரிகளுக்கான உடல் தகுதி பரீட்சை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டது. இதில் 160 மத்தியஸ்தர்கள் கலந்த கொண்டார்கள். இலங்கை கால்பந்து மத்தியஸ்தர் பணிப்பாளர் ஏ.எம்.யாப்பா தலைமையிலான குழுவினர் இவர்களுக்கான பரீட்சைகளை நடத்தினர்.



திருகோணமலையில் தெரிவு இடம்பெற்ற போது..

### ஆசிரியர்களுக்கான வீதியோட்டம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆசிரிய பயிலுநர்கள் பங்கேற்ற வீதியோட்டம், கலாசாலை முன்றலில் சனிக்கிழமை (31.01.2015) இடம்பெற்றது. ஆண் ஆசிரியர்களுக்கான போட்டியில் 73 பேர் பங்குபற்றியிருந்தனர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து புறப்பட்டு இராசவீதியூடாக நல்லூரை அடைந்து பருத்தித்துறை வீதியூடாக மீண்டும் கலாசாலையை அடைந்தனர்.

பெண் ஆசிரியர்களுக்கான போட்டியில் 227 போட்டியாளர்கள் பங்குபற்றியிருந்தனர். கலாசாலை முன்றலில் ஆரம்பித்து, இராச வீதியூடாக ஆடியபாதம் வீதியை அடைந்து, அங்கிருந்து கல்வியங்காட்டுச் சந்தியை அடைந்து, பருத்தித்துறை வீதியூடாக மீளவும் கலாசாலையை வந்தடைந்தனர்.



### மென்பந்து கிரிக்கட் போட்டி

சின்னப்பாலமுனை சுப்பர் ஒக்கிட் விளையாட்டுக்கழகத்தின் சுப்பர் ஒக்கிட் பிரிமியர் லீக் 2015 மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், சுப்பர் ஓக்கிட் டைகரஸ் அணி சம்பியனாகியுள்ளது.

சுப்பர் ஓக்கிட் கழக வீரர்களின் திறனை விருத்தி செய்வதற்காக நடத்தப்படும் இத்தொடருக்கமைய, சுப்பர் ஓக்கிட் டைகரஸ், லயன்ஸ், ஈகிள்ஸ், வொரியர்ஸ் ஆகிய 4 அணிகளுக்கிடையில் இச்சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது. இறுதி சுற்றுக்கு சுப்பர் ஓக்கிட் டைகரஸ், சுப்பர் ஓக்கிட் லயன்ஸ் ஆகிய அணிகள் தெரிவாகின. விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பி.முஹாஜிரீன் தலைமையில் நடைபெற்ற இறுதி போட்டியில் பலர் கலந்துகொண்டனர்.



## வென்றால் 6 கோடி ஊக்கத்தொகை

உலகக்கிண்ணத்தை இலங்கை அணி வென்றால் ஷரு.6 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று இலங்கை அரசு அதிரடியாக அறிவித்துள்ளது. உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி வருகிற 14ம் திகதி அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் தொடங்குகிறது. மார்ச் 29ம் திகதி வரை இந்தப்போட்டி நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் சிறப்பாக செயல்பட்டு வரலாறு படைக்க அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.



## வெற்றி சங்ககாரவால் தான்



இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர துடுப்பாட்ட வீரருமான சங்கக்காரவின் திறமையானது உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணிக்கு கைகொடுக்கும் என மேற்கிந்தி யத்தீவுகள் அணியின் முன்னாள் ஜாம்பவானான விவியன் ரிச்சர்ட்ஸ் கூறியுள்ளார்.

## பந்து வீச்சாளருக்கு நல்ல சான்ஸ்

கிரிக்கெட்டில் துடுப்பாட்ட . வீரர்கள் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி சற்று பந்து வீச்சாளர்களுக்கும் சாதகமாக இருக்கும் வகையில் பேட் அளவுகளை குறைப்பது, பவுண்டரி எல்லையை அதிகப்படுத்துவது என பல மாற்றங்களை செய்ய ஐ.சி.சி. முடிவு செய்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) 2 புதிய பந்து, களக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு புதிய விதிகளால் பந்து வீச்சாளர்கள் பாடு திண்டாட்டமாக உள்ளது. இதனால் பேட்களின் அளவுகளை குறைக்க ஐ.சி.சி. முடிவு செய்தது. இதேபோல் உலகக் கிண்ணத் தொடரில் பவுண்டரி எல்லையிலும் மாற்றம் செய்யப்படுகிறது. அதாவது ஆடுகளத்தின் மையத்திலிருந்து 82.3 மீ. தூரத்தில் பவுண்டரி எல்லை வைக்கப்படுகிறது. இறுதிப் போட்டி நடக்கும் மெல்போர்ன் மைதானத்தில் கூட நேரடியாக உள்ள பவுண்டரி எல்லை 65 மீ தூரம் தான் உள்ளது. இதனால் ஐ.சி.சி.யின் பரிந்துரை நிறைவேறுமா எனச் சரியாகத் தெரியவில்லை.

## பெறுமதி - 6ஆயிரம் கோடி

உலகின் சிறந்த கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோவின் விலை ஷரூ. 6 ஆயிரம் கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினை சேர்ந்த ரியல் மாட்ரிட் அணிக்காக கடந்த 2009ம் ஆண்டு முதல் கிறிஸ்டியானோ ரொனால்டோ விளையாடி வருகிறார். இந்த அணிக்காக ரொனால்டோவுக்கு ரூ.6 ஆயிரம் கோடி விலை நிர்ணயித்துள்ளதாக அவரது ஏஜண்ட் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். மேலும் அவரை ஒப்பந்தம் செய்ய கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆனால் 6 ஆயிரம் கோடி கொடுத்தாலும் ரொனால்டோவை ரியல் மாட்ரிட் அணி விடுவிக்காது என்று தெரிவித்துள்ளார்.

உலகின் சிறந்த கால்பந்து வீரருக்கு வழங்கப்படும் தங்கப் பந்து விருதினை மூன்று முறை ரொனால்டோ வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.




## ஒளிபரப்பும் உரிமை கைமீட்பு

முன்னாள் ஜனாதிபதியின் மகன் யோசித ராஜபக்ஷவின் விளையாட்டுத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனமான "கால்ரன் ஸ்போட்ஸ் நெற் வேக்" கிற்கு வழங்கப்பட்டிருந்த உலகக் கிண்ண கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு உரிமை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை நேரடியாக ஒளிபரப்பும் உரிமையை ஈ.எஸ்.பி. என். ஸ்ரார் ஸ்போட்ஸ் மற்றும் ஸ்ரார் கிரிக்கெட் நிறுவனங்கள் சர்வதேச கிரிக்கெட் சபையிடமிருந்து பெற்றுள்ளன. இந்த இரு நிறுவனங்களுக்கும் 200 கோடி டொலருக்கு இதற்கான உரிமையை ஐ.சி.சி. வழங்கியுள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியை நேரடியாக ஒளிபரப்பும் உரிமையைப் பெற்றிருந்த சி.எஸ். என் தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை நீக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள இலங்கை தேசிய ஒளிபரப்புச் சேவையான ஷருபாவாஹினி கூட்டுத்தாபனம் எனினும் இதற்கான காரணம் என்னவெனத் தெரியவில்லை எனவும் கூறியுள்ளதுடன் நேரடி ஒளிபரப்பு உரிமையை தாம் பெறும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளதாக டெய்லி மிரர் தெரிவித்துள்ளது.

## அதிதீவிர பாதுகாப்பு

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாதுகாப்பு மற்றும் சூதாட்டம் ஆகியவை மிகப்பெரிய சவாலாகவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தலைமை செயல் அதிகாரி டேவிட் ரிச்சர்ட்சன் தெரிவித்துள்ளார்.

ICC CRICKET WORLD CUP 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் சுமந்திரன்

தமிழத்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனி உரிமைச் சபை ஆணையாளருடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார்.

கடந்த வாரத்தில் சம்பந்தன் அவர்களால் ஆணையாளருக்கு வரையப்பட்ட கடிதத்தில் புதிய அரசு பதவியேற்றுள்ள நிலையில் சில விடயங்களைச் செய்யக் கூடியதாக இருந்தாலும் உண்மையைக் கண்டறிய வேண்டிய தேவையிருப்பதால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் விசாரணை அறிக்கையானது ஜெனீவாவில் கொண்டுவரப்பட வேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதையடுத்து இலங்கை அரசின் பிரதிநிதியாக ஜெயந்த தனபால ஜெனீவாவிற்குச் சென்று முக்கியத்தர்களுடன் கலந்துரையாடியிருந்ததாலும், அமெரிக்க ராஜாங்க வெளியுறவுச் செயலாளர் பிஸ்வாலுடன் தாம் உரையாடியிருந்ததாலும் அவற்றை அடிப்படையாக்க கொண்டு மனித உரிமை உயர்ஸ்தானிகராயலப் பிரதிநிதிகளுடன் நேரடியாகக் கலந்துரையாடவே தான் அங்கு சென்றிருப்பதாக சுமந்திரன் தெரிவித்திருந்தார்.



## விலைகுறையவில்லையா? அறிவியுங்கள்!!!

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் விலை குறைக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் தொடர்பில் பொதுமக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லையாயின் அது தொடர்பில் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றிடம் முறையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 0716027912 - 0788714726 - 0777205137 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு இது தொடர்பில் முறையிடுமாறு அவ்விரு சங்கங்களும் கோரியுள்ளன.

இதற்கமைய, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், கோதுமை மா, பாண் மற்றும் பஸ் கட்டணங்கள் உள்ளிட்ட, விலைகள் குறைக்கப்பட்ட பொருட்கள் தொடர்பில் முறையிடலாம் என்றும் அச்சங்கங்கள் மேலும் கூறியுள்ளன.

## சுதந்திர தினத்தில் சுதந்திரம்

திருகோணமலை விளக்கமறியற்சாலையில் இருந்து சுதந்திர தினத்தன்று ஒன்பது கைதிகள் விடுதலையாகியிருந்தனர். (கதிரவன்)



# கடத்தப்பட்ட மாணவர்கள் எங்கே?

கொழும்பில் கடத்தப்பட்டு திருகோணமலை கடற்படைத் தளத்தில் வைக்கப்பட்டிருந்ததாக நம்பப்படும் ஐந்து மாணவர்களின் ஆட்கொணர்வு மனுவில் கடத்தப்பட்ட மாணவர்கள் எங்கே என சிரெட்ட சட்டத்தரணி கே.வி தவராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் கடற்படைத் தளபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாக இருந்த கடற்படையைச் சேர்ந்த லெப்டினட் கமாண்டர் சம்பத் முனசிங்க, மாணவர் கடத்தல், காணாமல் போதல் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளமைக்கு சான்றுகள் உள்ளன. சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்யாமல் எதிரியைப் பாதுகாப்பதாக சிரேஸ்ட சட்டத்தரணி கே.வி தெரிவித்துள்ளார்.

தகிவளையில் 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி இரவு 10 மணியளவில் மூன்று தமிழ் இளைஞர்களும் அவர்களது நண்பர்களான இரண்டு முஸ்லீம் இளைஞர்களும் பயணம் செய்த வாகனத்தோடு கடத்தப்பட்டனர்.

அவர்களின் ஆட்கொணர்வு மனு விசாரணையில் மனுதாரர்களின் சார்பில் ஆஜராகிய சிரேஸ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா, கொழும்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியான ரஞ்ஜித் முனசிங்கவின் சாட்சியத்தை நெறிப்படுத்திய பொழுது, முனசிங்க கடத்தல் சம்பவத்தில் முன்னாள் கடற்படைத் தளபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரிக்கு தொடர்பு உள்ளமைக்கு சான்றுகள் உள்ளனவென கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் சாட்சியம் அளித்தார்.

# கிழக்கிலும் வடக்கிலும் இராணுவ முகாம்களை அகற்ற மாட்டோம் - பாதுகாப்பு ராசாங்க அமைச்சர்




வடக்குகிழக்கு தமிழ் மக்களைப் போன்று ஏனைய மக்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட இராணுவ முகாம்கள் எந்தவிதத்திலும் அகற்றப்படாது என, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன நேற்று யாழில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமைச்சர் பலாலி இராணுவப் படைத்தளத்தில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு

17

# சுகிர் லசந்த நினைவேந்தல்

படுகொலை செய்யபட்ட ஊடகவியலாளர்கள் சுகிர்தராஜன் மற்றும் லசந்த விக்ரமதுங்க ஆகியோரின் நினைவுகளை திருகோணமலையில் மலைமுரசு பத்திரிகையும் சுதந்திர ஊடகவியலாளர்களும், திருகோணமலை முத்தமிழ்ச் சங்கமும் இணைந்து நடாத்தியுள்ளன.

கடந்த 31ம் திகதி நடைபெற்ற இந் நினைவேந்தல் விழாவில் பெரும் எண்ணிக்கையில் மக்களும் மதத் தலைவர்களும் கல்வியியலாளர்களும் அரசியல் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மலைமுரசியன் ஆசிரியர் மாயன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நினைவேந்தலில் ஊடகவியலாளாளர்கள்

17



மாயன்



வண. மதுராயகன் குருஸ்






உவர்மலை விவேகானந்தாவின் பாரதியார் பாடல்



மா.உ. ஜனார்த்தனன்



சாலி



ராஜ்குமார்



அச்சுதன்



சந்திவானந்தம்



என்.வித்தியாதரன்

மலைமுரசு வாரந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) [illegible] திருகோணமலையில் இருந்து 07.02.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org